www.padippakam.com

# மக்ஸீம் கார்க்கி



## 3 தேர்ந்தெடுத்த கதைகள்

ராதுகா பதிப்பகம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மக்ஸீம் கார்க்கி

# தேர்ந்தெடுத்த கதைகள்

## மூன்று தொகுதிகளில்
## மூன்றாவது தொகுதி

ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
சென்னை

படிப்பகம்

www.padippakam.com

மொழிபெயர்ப்பாளர்கள்: பூ. சோமசுந்தரம்,
நா. முகம்மது செரீபு
திருத்திய வடிவமைப்பாளர்: நா. முகம்மது செரீபு
வடிவமைப்பாளர்: கெ. குபானவ்

**Максим Горький**

**ИЗБРАННЫЕ РАССКАЗЫ
В 3х ВЫПУСКАХ**

**Выпуск 3**

***На тамильском языке***

**Maxim Gorky**

**SELECTED STORIES
IN THREE PARTS**

**Part 3**

***In Tamil***


© தொகுப்பு, வடிவமைப்பு,
ராதுகா பதிப்பகம், 1990
சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

ISBN 5-05-002329-7

படிப்பகம்

www.padippakam.com

C 324



15/-

Rs 1-3-P 0 0

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## பொருளடக்கம்

இருபத்தாறு பேரும் ஒருத்தியும் . . . . 4
புயற்பறவை பற்றிய பாடல் . . . . . . 41
பணிக்கட்டி நகர்கிறது . . . . . . . . 44
மனிதன் பிறந்தான் . . . . . . . . 103
முதல் காதலைப் பற்றி . . . . . . . 130

படிப்பகம்

www.padippakam.com

# இருபத்தாறு பேரும் ஒருத்தியும்

## காவியம்

நாங்கள் இருபத்தாறு பேர்—ஈர நிலவறையில் அடைபட்டிருந்த இருபத்தாறு உயிருள்ள எந்திரங்கள்—இருந்தோம். இங்கே நாங்கள் எண் வடிவ பிஸ்கோத்துகளும் வளைய பிஸ்கோத்துகளும் செய்வதற்காகக் காலை முதல் இரவு வரை மாவு பிசைந்த வண்ணமாக இருந்தோம். எங்கள் நிலவறையின் சன்னல்கள், அவற்றுக்கு எதிரே தோண்டிச் செங்கற்கள் பாவியிருந்த ஒரு கிடங்கில் பாதி ஆழ்ந்திருந்தன. ஈரம் காரணமாக இந்தச் செங்கற்கள் பச்சை ஆகி இருந்தன. சன்னல் சட்டங்கள் வெளிப்புறத்திலிருந்து நெருக்கமான இரும்பு வலையால் தடுக்கப்பட்டிருந்தன. மாவுத் துகள்கள் படிந்திருந்த கண்ணாடிகளின் ஊடாகச் சூரிய வெளிச்சம் எங்கள் அறைக்குள் புக முடியவில்லை. ஏழை எளியவர்களுக்கும்

© தமிழ் மொழிபெயர்ப்பு, **முன்னேற்றப் பதிப்பகம், 1979.**



படிப்பகம்

www.padippakam.com

வேலை இல்லாமையால் பட்டினி கிடந்த எங்கள் தோழர்களுக்கும் நாங்கள் அவனது ரொட்டித் துண்டைக் கொடுத்து விடக் கூடாது என்பதற்காகவே எங்கள் எசமானன் சன்னல்களை இரும்பு வலைகளால் அடைத்திருந்தான். அவன் எங்களை மோசக்காரர்கள் என்று அழைத்தான். சாப்பிடுவதற்கு இறைச்சி என்ற பெயரில் கெட்டுப் போய்க் கவிச்சியடித்த உள்ளுறுப்புக்களை எங்களுக்குக் கொடுத்தான்...

புகைக் கரி படிந்து சிலந்தி வலை போர்த்தி, நசுக்குவது போலத் தாழ்ந்திருந்த விட்டம் கொண்ட அந்தக் கற்பேழையில் வசிப்பது எங்களுக்கு இறுக்கமாகவும் நெருக்கமாகவும் இருந்தது. அழுக்கும் பூஞ்சணமும் புள்ளிக் கோலங்கள் தீட்டியிருந்த பருத்த சுவர்களுக்குள் அடைபட்டிருப்பது எங்களுக்குக் கடினமாகவும் அருவருப்பாகவும் இருந்தது... நாங்கள் சரியாக உறங்க நேரம் இன்றிக் காலை ஐந்து மணிக்குப் படுக்கை விட்டு எழுந்தோம், மூளைக் கலக்கமும் எதிலும் அசட்டையும் கொண்டவர்களாக, ஆறு மணிக்குப் பிஸ்கோத்துகள் தயாரிக்கத் தொடங்கினோம். இதற்கு வேண்டிய மாவை நாங்கள் உறங்கிக்கொண்டிருந்த போதே எங்கள் தோழர்கள் பிசைந்து வைத்திருந்தார்கள். நாள் முழுதும், காலை முதல் இரவு பத்து மணி வரை, எங்களில் சிலர் விகுவுள்ள மாவை முறுக்கிப் பிஸ்கோத்துகள் செய்வதும் உடல்கள் மரத்துப் போகாதிருப்பதற்காக அசைந்தாடுவதுமாக மேசை அருகே



படிப்பகம்

www.padippakam.com

உட்கார்ந்து இருந்தார்கள், மற்றவர்கள் அந்த நேரத்தில் மாவைத் தண்ணீர் விட்டுப் பிசைந்து கொண்டிருந்தார்கள். பிஸ்கோத்துகள் வெந்து கொண்டிருந்த கலத்தில் கொதி நீர் நாள் முழுவதும் சிந்தனையில் ஆழ்ந்தது போன்று துயரத்துடன் தளதளத்துக் கொண்டிருந்தது. பிஸ்கோத்து சுடுபவனின் வாரு கரண்டி வழுக்கலான வெந்த மாவுத் துண்டுகளை அடுப்படிச் சுடு செங்கற்கள் மேல் பரப்பியவாறு சீற்றத்துடன் விரைவாக உரசிச் சென்றது. காலை முதல் மாலை வரையில் அடுப்பின் ஒரு புறத்தில் விறகுகள் எரிந்து கொண்டிருந்தன. தழல்களின் சிவப்பு ஒளிர்வு பிஸ்கோத்துத் தொழிலகத்தின் சுவர் மேல் எங்களை மௌனமாகக் கேலி செய்து சிரிப்பது போல் துடிதுடித்துக் கொண்டிருந்தது. பிரமாண்டமான அடுப்பு கதைகளில் வரும் விகிருதியின் அவலட்சணமான தலை போன்று இருந்தது. அது தரைக்கு அடியிலிருந்து மேலே துருத்தியது போலவும் பிரகாசமான நெருப்பால் நிறைந்த அகன்ற வாயைத் திறந்து எங்கள் மேல் வெப்ப மூச்சை விட்டது போலவும் வாய்க்கு மேலே கறுப்புக் குழிவுகளை நிகர்த்திருந்த காற்றுப் போக்கிகளால் எங்களுடைய முடிவற்ற வேலையைப் பார்வையிட்டது போலவும் தோன்றியது. இந்த இரண்டு ஆழக் குழிவுகளும் கண்கள் போன்று —விகிருதியின் இரக்கம் அற்றவையும் உணர்ச்சி வேகம் இல்லாதவையுமான விழிகள் போன்று — இருந்தன. அடிமைகளைப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போனவை போல எப்போதும்



படிப்பகம்

www.padippakam.com

ஒரே மாதிரியான இருண்ட பார்வையுடன் அவை நோக்கின. அவர்களிடம் மனிதத்தன்மையுள்ள எதையும் எதிர்பார்க்காமல் விவேகத்துக்கு இயல்பான ஆழ்ந்த இகழ்ச்சியுடன் அவர்களைப் புறக்கணித்தன.

மாவுத் துகள்களிலும் வெளியிலிருந்து எங்கள் கால்களால் உள்ளே கொண்டுவரப்பட்ட சேற்றிலும் நாற்றமடித்த அடர்ந்த புழுக்கத்திலும் நாங்கள் நாள்தோறும் பிசைந்த மாவை முறுக்கி, எங்கள் வியர்வையால் நனைத்தவாறு பிஸ்கோத்துகள் தயாரித்தோம். எங்கள் வேலையைக் கடுமையான வெறுப்புடன் நாங்கள் அருவருத்தோம். எங்கள் கைகளால் தயாரிக்கப்பட்டதை நாங்கள் ஒருபோதும் தின்னவில்லை. பிஸ்கோத்துகளை விட ரை ரொட்டியை மேலாக மதித்தோம். ஒருவருக்கு ஒருவர் எதிராக—ஒன்பது பேருக்கு எதிரே ஒன்பது பேராக—நீண்ட மேசையின் இரு புறமும் உட்கார்ந்து கைகளையும் விரல்களையும் மணிக் கணக்காக எந்திரக் கதியில் தொடர்ந்து அசைத்துக் கொண்டே இருந்தோம். வேலைக்கு முற்றிலும் பழகி விட்டபடியால் எங்கள் இயக்கங்களை நாங்கள் கவனிக்கவே இல்லை. நாங்கள் ஒருவரை ஒருவர் கூர்ந்து பார்வையிட்டு முடித்து விட்டதால் எங்களில் ஒவ்வொருவனும் தோழர்களின் முகங்களில் இருந்த எல்லாச் சுருக்கங்களையும் அறிந்திருந்தான். மற்றவர்களுடன் பேசுவதற்கு எங்களிடம் ஒரு விஷயமும் இருக்கவில்லை. நாங்கள் இதற்குப் பழகி விட்டோம், எப்போதும் மௌனமாய் இருந்



படிப்பகம்

www.padippakam.com

தோம், திட்டிக் கொள்ளாவிட்டால்—ஏனெனில் ஒருவனை, சிறப்பாகக் கூட்டாளியை, திட்டுவதற்கு ஏதாவது காரணம் எப்போதும் கிடைத்துக் கொண்டுதான் இருக்கும். ஆனால் நாங்கள் திட்டிக் கொண்டதும் அரிதாகத்தான்—ஒருவன் அரை உயிராக இருந்தால், ஒருவன் உருவச் சிலை போல் இருந்தால், அவனுடைய உணர்ச்சிகள் எல்லாம் உழைப்புச் சுமையால் நசுக்கப்பட்டிருந்தால், அவன் எந்த வகையில் குற்றம் செய்ய முடியும்? ஆனால் சொல்ல வேண்டியவற்றை எல்லாம் சொல்லித் தீர்த்து விட்ட, மேற்கொண்டு சொல்ல எதுவும் இல்லாத மனிதர்களுக்குத் தான் மௌனம் பயங்கரமானது, துன்பம் தருவது. தங்கள் பேச்சுக்களை இன்னும் தொடங்காதவர்களுக்கோ, பேசாதிருப்பது இயல்பானது, எளியது... சில வேளைகளில் நாங்கள் பாடினோம். எங்கள் பாட்டு இந்த மாதிரித் தொடங்கியது: வேலையின் நடுவில் ஒருவன் களைத்த குதிரையின் அடர்ந்த பெருமூச்சு போன்று பெருமூச்சு விட்டு, பாடுபவனின் உள்ளத் துயரத்தை எப்போதும் குறைக்கும், முறையீடும் பரிவும் ததும்பும் மெட்டு உள்ள, நீண்டு ஒலிக்கும் பாட்டுக்களில் ஒன்றைப் பாடத் தொடங்கினான். எங்களுடன் இருந்த ஒருவன் பாடினான், நாங்கள் தொடக்கத்தில் அவனுடைய தனித்த பாட்டை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தோம். சாம்பல் நிற வானம் காரீயக் கூரை போன்று நிலத்துக்கு மேலே கவிந்திருக்கும் ஈரித்த இலையுதிர் கால இரவில் ஸ்தெப்பி வெளியில் அணைந்து



படிப்பகம்

www.padippakam.com

அவிந்து போகும் நெகிடி நெருப்புப் போல இந் தப் பாட்டு நிலவறையின் கனத்த விட்டத் துக்கு அடியில் அணைந்து அவிந்து போயிற்று. பின்பு பாடியவனோடு இன்னொருவன் சேர்ந்து கொண்டான். அப்போது எங்கள் நெருக்க மான கிடங்கின் புழுக்கத்தில் இரண்டு குரல்கள் மெதுவாகவும் ஏக்கத்துடனும் நீந்தலாயின. திடீரென்று சில குரல்கள் ஒரே நேரத்தில் பாட்டில் கலந்து கொண்டன. பாட்டு அலை போலப் பொங்கி, மேலும் மேலும் வலுவாகி, உரத்து, எங்கள் கற் சிறையின் கனத்த ஈரச் சுவர்களை நாற்புறமும் விலக்குவது போல ஒலித்தது...

இருபத்தாறு பேரும் சேர்ந்து பாடினார்கள். வெகு காலமாக இணைந்து பாடிப் பழகிவிட்ட உரத்த குரல்கள் பிஸ்கோத்துத் தொழிலகத் தை நிறைத்தன... பாட்டிற்கு அதில் இடம் பற்றவில்லை: அது சுவர்களின் கற்களில் மோ தியது, முனகியது, அழுதது, கூச்சம் உண் டாக்கும் மெல்லிய பழைய புண்களைக் கிளறி விட்டது, ஏக்கத்தைத் தூண்டியது... பாடகர்கள் ஆழ்ந்த துயரப் பெருமூச்சுகள் விட்டார்கள். அவர்களில் ஒருவன் எதிர்பாரா விதமாகப் பாட் டை நடுவில் நிறுத்தி, தோழர்கள் எப்படிப் பாடுகிறார்கள் என்று நீண்ட நேரம் கேட்டுக் கொண்டிருந்த பின் பொதுப் பாட்டு அலை யில் தன் குரலை மீண்டும் சேர்த்தான். இன் னொருவன் "ஹா!" என்று ஏக்கத்துடன் கத்தி விட்டு, கண்களை மூடிக் கொண்டே பாடினான். ஒலிகளின் கெட்டியான அகன்ற



படிப்பகம்

www.padippakam.com

அலை எங்கோ தொலைவில் செல்லும், பளிச்சிடும் வெயிலால் ஒளியூட்டப் பெற்ற பாதையாக —அகன்ற பாதையாக—அவனுக்குத் தோற்றம் அளித்தது. தான் அதில் நடப்பதாக அவன் எண்ணிக்கொண்டான் போலும்...

அடுப்பில் தழல் இடைவிடாமல் நடுங்கிக் கொண்டிருந்தது, பிஸ்கோத்து சுடுபவனின் வாரு கரண்டி அடுப்படிச் செங்கற்களில் இடைவிடாமல் உரசிக் கொண்டிருந்தது, கொதிக் கலத்தில் நீர் தளதளத்துக் கொண்டிருந்தது, சுவற்றின் மேல் நெருப்பின் ஒளிர்வு சத்தமின்றி நகையாடியவாறு முன் போன்றே இடையறாமல் துடிதுடித்துக் கொண்டிருந்தது... நாங்களோ, எங்களுடைய தெளிவற்ற துயரத்தை, வெயிலைப் பறி கொடுத்து விட்ட உயிருள்ள மனிதர்களின் தாங்க முடியாத ஏக்கத்தை, அடிமைகளின் ஏக்கத்தை, மற்றவர்களின் சொற்களால் பாடி வெளியிட்டுக் கொண்டிருந்தோம். பெரிய கல் வீட்டின் நிலவறையில் இவ்வாறு நாங்கள் இருபத்தாறு பேரும் வசித்து வந்தோம். அந்த வீட்டின் மூன்று மாடிகளும் நேரே எங்கள் தோள்கள் மீது கட்டப்பட்டிருந்தது போலத் துயரச் சுமை எங்கள் வாழ்க்கையை நசுக்கிக் கொண்டிருந்தது...

ஆனால், பாட்டுக்கள் தவிர, நல்லதான ஒன்று —எங்கள் அன்புக்கு உரியதும் ஒருவேளை சூரியனுக்கு மாற்றாக எங்களுக்குப் பயன்பட்டதுமான ஒன்று—இருந்தது. எங்கள் வீட்



படிப்பகம்

டின் முதல் மாடியில் சரிகைத் தையல் கடை இருந்தது. அதில் பல மங்கையர் தொழிலாளி களாக வேலை செய்து வந்தார்கள். அவர் களுக்கு இடையே தானியா என்னும் பதி னாறு வயது வேலைக்காரப் பெண்ணும் வசித்து வந்தாள். நடையிலிருந்து எங்கள் தொழி லகத்திற்கு வருவதற்கான கதவில் அமைந்த சிறு சன்னலின் கண்ணாடியோடு ஒவ்வொரு நாள் காலையிலும் ஒட்டிக்கொண்டது மகிழ்ச்சி பொங்கும் இள நீல விழிகள் மிளிர்ந்த சிறு ரோஜா வதனம். அன்பு ததும்பும் குரல் எங் களை நோக்கிக் கணீரெனக் கூவியது:

''கைதிகளே! பிஸ்கோத்துகள் தாருங்கள்!''

நாங்கள் எல்லாரும் இந்தத் தெளிவான குரல் வந்த பக்கம் திரும்பி, எங்களை நோக்கி இனிமையாக முறுவலித்த தூய கன்னி முகத் தை மகிழ்ச்சியும் நல்லியல்பும் தோன்றப் பார்த் தோம். சன்னல் கண்ணாடியில் சப்பையாக நசுங்கிய மூக்கையும் புன்னகையில் மலர்ந்த ரோஜா இதழ்களின் அடியில் பளிச்சிட்ட சிறு வெண் பற்களையும் காண எங்களுக்கு இன்ப மாக இருந்தது. அவளுக்குக் கதவைத் திறந்து விடுவதற்காக ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு பாய்ந்தோம். இதோ அவள்—குதூ கலமும் இனிமையுமே வடிவாக—தன் முன் றானையை விரித்தவாறு எங்கள் அறைக்குள் வந்து தலையைச் சற்றே பக்கவாட்டில் சாய்ந்து எங்கள் முன்னே நின்று இடைவிடாமல் புன்ன கை செய்து கொண்டிருந்தாள். பழுப்பு நிறக் கேசம் பருமனான நீண்ட பின்னலாக



படிப்பகம்

www.padippakam.com

அவள் தோள் வழியாகத் தொங்கி அவளுடைய மார்பின் மேல் கிடந்தது. வாயில் நிலை எங்கள் தரைக்கு நான்கு படிகள் உயரத்தில் இருந்தது. எனவே, நாங்கள், அழுக்கடைந்து, ஏக்கம் பிடித்து, அவலட்சணமாய் இருந்த மனிதர்கள், அவள் மீது கீழிருந்து மேலே பார்வை செலுத்தினோம், தலையை மேலே நிமிர்த்தி அவளைப் பார்த்துக் காலை வாழ்த்து கூறினோம், எவையேனும் தனிப்பட்ட சொற்களை அவளிடம் சொன்னோம்—அவை அவளுக்காக மட்டுமே எங்களிடம் இருந்தன. அவளோடு உரையாடிய போது எங்கள் குரல்கள் அதிக மென்மை அடைந்தன. கேலிகள் அதிக எளியவை ஆயின. அவள் விஷயத்தில் எங்களிடம் எல்லாம் தனிப்பட்டவையாக இருந்தன. பிஸ்கோத்து சுடுபவன் எல்லாவற்றையும் விட நன்றாக வறுபட்டுச் சிவந்த பிஸ்கோத்துகளை அடுப்பிலிருந்து வாரு கரண்டியால் எடுத்து தானியாவின் முன்றானையில் சாமர்த்தியமாக வீசிப் போட்டான்.

"இந்தா, எசமான் கண்ணில் பட்டு விடாதே!" என்று நாங்கள் அவளை எச்சரித்தோம். அவள் தந்திரமாகச் சிரித்து எங்களைப் பார்த்துக் குதூகலம் பொங்கக் கத்தினாள்:

"விடை கொடுங்கள், கைதிகளே!" பின்பு சுண்டெலி போல விருட்டென்று மறைந்தாள்.

இவ்வளவுதான்... ஆனால் அவள் போன பிறகு வெகு நேரம் நாங்கள் அவளைப் பற்றி ஒருவரோடு ஒருவர் இன்பமாகப் பேசிக் கொண்டிருந்தோம். முந்திய நாளும் அதற்கு



படிப்பகம்

www.padippakam.com

முன்பும் பேசியவற்றையே இப்போதும் பேசி னோம். ஏனென்றால் அவளும் நாங்களும் எங்களைச் சுற்றி இருந்தவையும் முந்திய நா ளும் அதற்கு முன்பும் எப்படி இருந்தோமோ அப்படியே இப்போதும் இருந்தோம்... மனி தன் வாழ்கிறான். அவனைச் சுற்றிலும் எது வும் மாறுவதில்லை என்றால் அது மிகவும் கடினமான, துன்பகரமான வாழ்க்கை. இத னால் அவனுடைய உள்ளம் மடிந்து விட வில்லை என்றால், அவன் எவ்வளவு நீண்ட காலம் வாழ்கிறானோ, சுற்றிலும் உள்ளவற் றின் அசையாமை அவனுக்கு அதிகத் துன் பம் தந்து கொண்டிருக்கும்... பெண்களைப் பற்றி நாங்கள் வழக்கமாக எப்படிப் பேசி னோம் என்றால், எங்களுடைய முரட்டுத்தன மான, வெட்கமற்ற பேச்சைக் கேட்கச் சில வேளைகளில் எங்களுக்கே அருவருப்பு உண்டா யிற்று. இது புரியக் கூடியதே, ஏனென்றால் எந்தப் பெண்களை நாங்கள் அறிந்திருந்தோ மோ அவர்கள் ஒருவேளை வேறு வகையான பேச்சுக்கு ஏற்றவர்கள் அல்ல போலும். ஆனால் தானியாவைப் பற்றி நாங்கள் ஒருபோதும் மோச மாகப் பேசவில்லை. எங்களில் ஒருவனும் அவளைக் கையால் தொடுவதற்கு ஒருபோதும் துணியவில்லை. அது மட்டும் அல்ல, வரம்பு கடந்த கேலிப் பேச்சைக் கூட எங்களிடமிருந்து அவள் ஒருபோதும் கேட்கவில்லை. அவள் எங்களோடு நீண்ட நேரம் தங்கி இருக்காதது இதற்குக் காரணமாய் இருக்கலாம்: வானி லிருந்து விழும் தாரகை போன்று அவள்



படிப்பகம்

www.padippakam.com

எங்கள் கண்களுக்கு முன் மினுமினுத்து விட்டு மறைந்தாள். அல்லது, அவள் சிறியவளாக வும் மிக அழகியாகவும் இருந்தது இதற்குக் காரணம் போலும், எனெனில் அழகியது எது வும் முரடர்களிடம் கூடத் தன்பால் மரியாதை யைத் தூண்டி விட்டது. இன்னொரு விஷயம் என்ன என்றால், காவற் கைதிகளது போன்ற உழைப்பு எங்களை உணர்வு மந்தித்த காய டித்த எருதுகள் ஆக்கி விட்டாலும் நாங்கள் மனிதர்களாகவே இருந்தோம். வழிபடுவதற்கு உரிய ஏதேனும் ஒன்று இல்லாமல் வாழ எல் லாரையும் போலவே எங்களாலும் முடிய வில்லை. அவளைக் காட்டிலும் மேலானவர் கள் எவரும் எங்களுக்கு இல்லை. நில வறையில வசித்த எங்கள் மீது வேறு யாரும் கவனம் செலுத்தவில்லை—வீட்டில் நிறையப் பேர் வசித்து வந்தாலும் ஒருவரும் எங்களைப் பொருட்படுத்தவில்லை. முடிவாக—ஒருவேளை முக்கியமானது இது தான் போலும்—நாங்கள் எல்லாரும் அவளை எங்களுக்கு உரியவளாகக் கருதினோம், எங்கள் பிஸ்கோத்துகளாலேயே உயிர் வாழ்ந்து வரும் ஒருத்தியாக எண்ணி னோம். சூடான பிஸ்கோத்துகளை அவளுக் குக் கொடுப்பதை எங்கள் கடமையாக மதித் தோம். வழிபடு தெய்வத்துக்கு இடும் அன் றாடப் படையலாக இது எங்களுக்கு விளங் கியது. இது அநேகமாகப் புனிதச் சடங்கு ஆகி விட்டது, எங்களை அவளுடன் நாளுக்கு நாள் அதிகமாக இணைத்தது. பிஸ்கோத்துகள் தவிர, நாங்கள் தானியாவுக்கு நிறைய யோசனை



படிப்பகம்

www.padippakam.com

களும் கூறி வந்தோம்—அதிகக் கதகதப்பாக உடை அணியும்படியும், படிக்கட்டில் விரைவாக ஓடாதிருக்கும்படியும், கனத்த விறகுக் கட்டு களைச் சுமக்காதிருக்கும்படியும். அவள் எங்கள் யோசனைகளைப் புன்னகையுடன் கேட்டாள். சிரித்துக்கொண்டே அவற்றுக்குப் பதில் சொன் னாள், ஆனால் எங்கள் சொற்படி ஒருபோதும் நடக்கவில்லை. எனினும் இதற்காக நாங்கள் கோபிக்கவில்லை: நாங்கள் அவள் விஷயத்தில் அக்கறை எடுத்துக்கொள்கிறோம் என்று காட்டு வது தான் எங்களுக்கு வேண்டி இருந்தது.

அவள் எங்களுக்கு அடிக்கடி வெவ்வேறு விதமான வேண்டுகோள்கள் விடுத்தாள். உதா ரணமாக, நிலவறையின் கனத்த கதவைத் திறக்கும்படியும் விறகு பிளந்து தரும்படியும் கேட்டாள். நாங்கள் மகிழ்ச்சியுடனும், ஏதோ ஒருவகைக் கர்வத்துடனும்கூட அவளுக்கு இவற் றையும் அவள் கேட்ட மற்ற எல்லாக் காரியங் களையும் செய்து கொடுத்தோம்.

ஆனால் எங்களில் ஒருவன் தன் ஒரே சட்டையைச் செப்பனிட்டுத் தரும்படி அவளிடம் கேட்ட போது அவள் இகழ்ச்சியுடன் செருமி னாள்.

“இதுதான் குறைச்சல்! கட்டாயம் தைத்துத் தருகிறேன், வேறு வேலை என்ன?..” என்று நொடித்தாள்.

விந்தையான அப்பாவியை நிரம்பக் கேலி செய்தோம். நாங்கள் தானியாவிடம் அப்புறம் ஒருபோதும் எதுவும் கேட்கவில்லை. அவள் மேல் நாங்கள் அன்பு கொண்டு இருந்தோம்



2—1227

படிப்பகம்

www.padippakam.com

என்பதிலேயே எல்லாம் அடங்கி விட்டது. மனிதன் தன் அன்பை யார் மீதாவது செலுத்த எப்போதும் விரும்புகிறான். ஆனால் இந்த அன்பினால் சில வேளைகளில் அவன் நசுக்கு கிறான், சில வேளைகளில் கறைப்படுத்துகி றான். தனது அன்பினால் அவன் மற்றவனு டைய வாழ்க்கையை நஞ்சாக்கலாம், ஏனென் றால் அன்பு செய்கையில் அன்புக்கு உரியதை அவன் மதிப்பதில்லை. எங்களுக்கு நேசிக்க வேறு ஒருவரும் இல்லாததால் நாங்கள் தானி யாவை நேசிக்க வேண்டி இருந்தது.

சில வேளைகளில் எங்களில் ஒருவன் என்ன காரணத்தாலோ இந்த மாதிரி விவா திக்கத் தொடங்கினான்:

"எதற்காக நாம் இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு சலுகை காட்டுகிறோம்? இவளிடம் அப்படி என்ன இருக்கிறது? எதனாலோ நாம் இவளுக்கு நிரம்ப இடம் கொடுக்கிறோம்!"

இந்த மாதிரிப் பேச முற்பட்டவனை நாங் கள் சட்டென்று முரட்டுத்தனமாக அடக்கி விட் டோம். எங்களுக்கு அன்பு செலுத்துவதற்கு ஒன்று வேண்டி இருந்தது: நாங்கள் அதைப் பெற்றிருந்தோம், நேசித்து வந்தோம். நாங் கள் இருபத்தறுவர் எதை நேசித்தோமோ அது எங்களில் ஒவ்வொருவனுக்கும் எங்கள் புனி தப் பொருளாக நிலைத்திருக்க வேண்டும், இதில் எங்களுக்கு எதிராகச் செல்பவன் எங்கள் பகைவன் என்று எண்ணினோம். ஒருவேளை நாங்கள் அன்பு செலுத்தியது உண்மையில் நல்லதான ஒன்றின் மேல் கூட இல்லை



படிப்பகம்

www.padippakam.com

போலும். ஆனால் நாங்கள் இருபத்தறுவர், ஆகவே எங்கள் அன்புக்கு உரியதை மற்றவர் கள் புனிதப் பொருளாகக் கருத வேண்டும் என்று நாங்கள் எப்போதும் விரும்பினோம்.

எங்களுடைய வெறுப்பு தாங்க எவ்வளவு கடினமாய் இருந்ததோ, அதற்குக் குறையா மல் கடினமாய் இருந்தது எங்கள் அன்பு... எங்கள் வெறுப்பு எங்கள் அன்பை விடத் தங் களுக்கு அதிக இனியதாய் இருப்பதாகச் சில செருக்காளர்கள் சொல்வது இதனால் தான் போலும்... ஆனால், இது உண்மை என்றால் அவர்கள் எங்களிடமிருந்து தப்பி ஓடாதது ஏனாம்?

பிஸ்கோத்துத் தொழிலகம் தவிர எங்கள் எச மானனுக்கு ரொட்டிக் கிடங்கும் சொந்தமாய் இருந்தது. அது அதே வீட்டில், எங்கள் தொ ழிலகத்திலிருந்து சுவற்றால் மட்டும் பிரிக்கப் பட்டு இருந்தது. ஆனால் ரொட்டித் தொழி லாளர்கள் — அவர்கள் நால்வர் — தங்கள் வேலை யை எங்களதை விடத் துப்புரவானதாக மதித் தார்கள், எனவே எங்களைக் காட்டிலும் மே லானவர்களாகத் தங்களைக் கருதினார்கள், எங்களிடமிருந்து விலகியே இருந்து வந்தார் கள். அவர்கள் எங்கள் தொழிலகத்துக்குள் வரவில்லை. வெளியே சந்தித்த போது எங் களை இகழ்ச்சியுடன் எள்ளி நகையாடினார் கள். நாங்களும் அவர்களிடம் போகவில்லை: நாங்கள் பன் ரொட்டிகளைத் திருடிவிடுவோம்

www.padippakam.com

என்று பயந்து எசமானன் நாங்கள் அங்கு போவதைத் தடை செய்து விட்டான். நாங்கள் ரொட்டித் தொழிலாளர்களை நேசிக்கவில்லை, ஏனெனில் அவர்கள் மேல் பொறாமை கொண் டிருந்தோம்: அவர்களுடைய வேலை எங் களுடையதை விட இலேசானது, சம்பளம் எங் களுக்குக் கிடைத்ததைக் காட்டிலும் அதிகம், அவர்களுக்கு எங்களை விட நல்ல சாப்பாடு கிடைத்தது, அவர்களுடைய தொழிலகம் விசா லமானது, வெளிச்சம் உள்ளது. அவர்கள் எல்லாரும் துப்புரவாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தார்கள், அதனால் எங்கள் அருவருப் புக்கு உரியவர்களாய் இருந்தார்கள். நாங் களோ, மஞ்சள் பாரித்துச் சாம்பல் பூத்துக் கிடந்தோம். எங்களில் மூவருக்கு மேகநோய், சிலருக்குச் சொறி சிரங்கு, ஒருவன் கீல்வாதத் தால் ஒரேயடியாகக் கோணிப் போயிருந்தான். விழா நாட்களிலும் ஒழிவு நேரங்களிலும் அவர் கள் கோட்டுகளும் கிறீச்சிடும் காலணிகளும் அணிந்தார்கள். அவர்களில் இருவரிடம் அக்கார் டியன் வாத்தியம் இருந்தது. அவர்கள் எல் லாரும் நகரப் பூங்காவுக்கு உலாவப் போனார் கள். நாங்களோ, அழுக்கடைந்த கந்தைகளை அணிந்தோம், பிய்ந்த செருப்புகளையோ மர வுரிச் செருப்புகளையோ கால்களில் மாட்டிக் கொண்டோம். போலீசார் எங்களை நகரப் பூங்காவுக்குள் விடவில்லை—ரொட்டித் தொழி லாளர்களை எங்களால் நேசிக்க முடிந்திருக்கு மா?



படிப்பகம்

www.padippakam.com

அவர்களுடைய ரொட்டி சுடுபவன் குடிக்கத் தொடங்கி விட்டதால் எசமானன் அவனைக் கணக்குத் தீர்த்து அனுப்பி விட்டு இன்னொருவனை அமர்த்தி இருப்பதாகவும் இந்த ஆள் ஓய்வு பெற்ற படையினன் என்றும் சாட்டின் வெயிஸ்ட்கோட்டும் தங்கச் சங்கிலி உள்ள கடிகாரமும் மாட்டிக்கொண்டு பிலுக்குவதாகவும் ஒரு முறை கேள்விப்பட்டோம். இந்தப் பகட்டனைக் காண எங்களுக்கு ஆவல் உண்டாயிற்று. அவனைப் பார்க்கும் நம்பிக்கையுடன் நாங்கள் ஒருவர் பின் ஒருவராக ஓயாமல் வெளியே போய் வரத் தொடங்கினோம்.

ஆனால் அவனாகவே எங்கள் தொழிலகத்துக்கு வந்தான். கதவைக் காலால் உதைத்துத் திறந்து அதைத் திறந்தபடி வைத்து விட்டு நிலைப்படியில் நின்று புன்னகையுடன் எங்களிடம் சொன்னான்:

"கடவுள் காப்பாராக! வணக்கம், தம்பிமாரே!"

அடர்ந்த புகைப் படலமாக வாயிலுக்குள் பாய்ந்து வந்த கூதல் காற்று அவன் காலருகில் சுழன்றது. அவனோ, நிலைப் படியில் நின்று எங்களை ஏற இறங்க நோட்டமிட்டான். திறமையாக முறுக்கி விடப்பட்ட அவனுடைய சணல் நிற மீசையின் அடி வழியாகப் பெரிய மஞ்சள் பற்கள் பளிச்சிட்டன. அவன் அணிந்திருந்த வெயிஸ்ட்கோட்டு மெய்யாகவே தனி வகையாக இருந்தது—பூக்கள் தைத்த அந்த நீலக் கோட்டு ஒருவிதமாகப் பளபளத்தது. ஒரு



படிப்பகம்

மாதிரிச் சிவப்புக் கற்கள் வைத்த பொத்தான் கள் அதில் இலகின. சங்கிலியும் இருந்தது...

அந்தப் படையினன் அழகனாய் இருந் தான். நெடிய, கட்டு வாய்ந்த மேனி, செம் மை படிந்த கன்னங்கள். அவனுடைய ஒளி வீசிய பெரிய விழிகள் அன்புடனும் தெளி வாகவும் நன்கு நோக்கின. முடமுடப்பாகக் கஞ்சி போட்ட வெள்ளைத் தொப்பியைத் தலை யில் அணிந்திருந்தான். ஒரு சிறு கறை கூடப் படாத துப்புரவான முன்றானைக்கு அடியில் பளிச்சென்று பாலிஷ் போட்டிருந்த நாகரிக மான செருப்புகளின் கூரிய முனைகள் தெரிந்தன.

எங்கள் பிஸ்கோத்து சுடுபவன் கதவை மூடும்படி அவனிடம் மரியாதையாகக் கேட்டுக் கொண்டான். அவன் அவசரப்படாமல் கத வைச் சாத்தி விட்டு எசமானனைப் பற்றி எங் களிடம் விசாரிக்கத் தொடங்கினான். நாங்கள் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு எங்கள் எசமானன் முடிச்சுமாறி, பித்தலாட்டக்காரன், படு பாதகன், சித்திரவதை செய்பவன் என் றெல்லாம் அவனிடம் சொன்னோம். எசமான னைப் பற்றி இன்னும் என்ன எல்லாம் சொல்ல முடிந்ததோ, வேண்டியும் இருந்த தோ, ஆனால் இங்கே எழுத முடியாதோ அதை எல்லாம் சொல்லித் தீர்த்தோம். படையி னன் கேட்டான், மீசையை அசைத்தான், ஒளி ரும் விழிகளால் மென்மையாக நோக்கினான்.

"இங்கே உங்கள் வீட்டில் நிறைய குட்டி கள்..." என்று திடீரென்று கூறினான்.

www.padippakam.com

எங்களில் சிலர் மரியாதைக்காக சிரித்தார்கள். வேறு சிலர் மூஞ்சிகளை இனிமையாகச் சுளித்துக் கொண்டார்கள். இங்கே ஒன்பது இளம் பெண்கள் இருப்பதாக ஒருவன் படையினனுக்கு விளக்கினான்.

“பயன்படுத்துகிறீர்களா?” என்று கண் சிமிட்டி வினவினான் படையினன்.

நாங்கள் மறுபடி சிரித்தோம், ஆனால் நிரம்ப உரக்க அல்ல, கூச்சத்துடன் சிரித்தோம்... நாங்களும் அவனைப் போலவே துணிந்த பேர்வழிகள் என்று படையினனுக்குக் காட்டிக் கொள்ள எங்களில் பலருக்கு ஆசை உண்டாகத் தான் செய்தது, ஆனால் ஒருவனுக்குமே அவ்வாறு காட்டிக் கொள்ளத் திறமை இல்லை, ஒருவனாலும் காட்டிக்கொள்ள முடியவில்லை. ஒருவன் ஏலாமையை ஒப்புக் கொண்டு தணிந்த குரலில் சொன்னான்:

“எங்களுக்கு எங்கே முடியும் இதெல்லாம்...”

“ம்-ஆமாம், உங்களுக்கு இது கடினம் தான்!” என்று உறுதியாகக் கூறினான் படையினன், எங்களை உறுத்துப் பார்த்தவாறு. “நீங்கள் என்னவோ... அந்த மாதிரி ஆட்கள் அல்ல... உங்களுக்குத் தைரியம் போதாது... சரியான உருவப் பாங்கு... அதாவது தோற்றம் இல்லை... பெண்பிள்ளை இருக்கிறாளே, அவளுக்கு ஆண்பிள்ளையிடம் பிடித்தது உருவத் தோற்றம்! உடம்பு சரியானபடி இருக்க வேண்டும் அவளுக்கு... எல்லாம் கச்சிதமாக அமைந்திருக்க வேண்டும்! அதோடு பலத்தை அவள்



படிப்பகம்

மதிக்கிறாள்... கை—இப்படி இருக்க வேண்டும்!''

படையினன் காற்சட்டைப் பையிலிருந்து கையை வெளியில் எடுத்தான். சட்டைக் கை மடக்கி விடப்பட்டு முழங்கை வரை திறந்திருந்த கரத்தை எங்களுக்குக் காட்டினான்... அது வெண்மையான, வலிய கரம். பளிச்சிடும் தங்க நிற உரோமங்கள் அடர்ந்தது.

''கால், மார்பு, எல்லாவற்றிலும் உறுதி வேண்டும்... அதோடு, மனிதன் பாங்காக உடை உடுத்த வேண்டும், பொருள்களின் அழகுக்குத் தேவையான விதத்தில்... உதாரணமாக என்னைப் பெண்பிள்ளைகள் விரும்புகிறார்கள். நான் அவர்களை அழைப்பதில்லை, மயக்குவதில்லை—அவர்களாகவே ஒரே நேரத்தில் ஐந்தாறு பேராக வந்து கழுத்தைக் கட்டிக்கொள்கிறார்கள்...''

அவன் மாவு மூட்டை மேல் குந்திக் கொண்டு பெண்பிள்ளைகள் தன்னை எப்படி விரும்புகிறார்கள் என்பதையும் தான் அவர்களிடம் எப்படி வீரத்துடன் நடந்து கொள்கிறான் என்பதையும் நீண்ட நேரம் விவரித்தான். பின்பு அவன் போய்விட்டான். அவன் வெளியேறிய பின் கதவு கிறீச்சிட்டு மூடிக் கொண்டதும் நாங்கள் அவனையும் அவன் சொன்ன கதைகளையும் பற்றி எண்ணியவாறு நெடுநேரம் பேசாதிருந்தோம். பிறகு என்ன காரணத்தாலோ எல்லாரும் ஒரே நேரத்தில் பேசத் தொடங்கினோம். எங்கள் எல்லாருக்கும்

www.padippakam.com

அவனைப் பிடித்திருந்ததாக உடனே தெரிய வந்தது. நிரம்ப சரளமான, இனிய சுபாவம் உள்ளவன்—வந்தான், உட்கார்ந்தான், பேசிக் கொண்டிருந்து விட்டுப் போனான். எங்களிடம் யாரும் வரவில்லை, யாரும் எங்களோடு இப் படி, நட்புடன் பேசவில்லை... ஆக நாங்கள் அவனைப் பற்றியும் சரிகைத் தையல்காரி களிடம் அவனுடைய வருங்கால வெற்றிகளைப் பற்றியும் இடைவிடாமல் பேசிக்கொண்டு போ னோம். இந்தப் பெண்கள் வெளி முகப்பில் எங்களைச் சந்தித்த போது ஒன்று எங்கள் மனம் புண்படும்படி உதடுகளை மடித்துக் கொண்டு எங்களிடமிருந்து ஒரு புறம் விலகிச் சென்றார் கள், அல்லது நாங்கள் அவர்களுடைய வழி யில் எதிர்ப்படவே இல்லை என்பது போல நேரே எங்களை நோக்கி வந்தார்கள். நாங் களோ வெளி முகப்பிலும் அவர்கள் எங்கள் சன்னல்களின் பக்கமாகக் கடந்து செல்கையி லும் அவர்களை எப்போதும் வியந்து நோக்க மட்டுமே செய்தோம். குளிர்காலத்தில் அவர் கள் ஏதோ தனி வகையான தொப்பிகளும் மென்மயிர்த் தோல் கோட்டுகளும் அணிந்தார் கள். கோடை காலத்தில் பூக்கள் வைத்து தொப்பிகள் அணிந்து பல வண்ணக் குடை களும் கைகளுமாக நடை பயின்றார்கள். இந் தப் பெண்கள் எங்களை ஆளாக மதிக்காவிட் டாலும் எங்களுக்குள் நாங்கள் அவர்களைப் பற்றிப் பேசிக்கொண்டதை அவர்கள் கேட்டால் வெட்கத்தாலும் மனத் தாங்கலாலும் அவர் களுக்கு வெறி உண்டாகி இருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

‘‘ஆனால் இந்த ஆள் நம் தானியாவை... கெடுத்து விடாமல் இருக்க வேண்டும்!’’ என்று திடீரெனக் கவலையுடன் சொன்னான் பிஸ் கோத்து சுடுபவன்.

இந்தச் சொற்களால் திகைத்துப் போய் நாங்கள் எல்லாரும் பேசாதே இருந்தோம். எத னாலோ நாங்கள் தானியாவை மறந்து விட் டோம்: தனது அழகிய பருத்த உருவத்தால் படையினன் அவளை எங்களிடமிருந்து மறைத் திருந்தான் போலும். பின்னர் ஆரவாரம் மிக்க விவாதம் தொடங்கியது: தானியா இதற்கு இடம் கொடுக்க மாட்டாள் என்றார்கள் சிலர். படையினனுக்கு எதிர் நிற்க அவளால் முடி யாது என்றார்கள் வேறு சிலர். படையினன் தானியாவை நச்சரித்தால் அவனுடைய விலா வை முறித்து விடுவதாகப் பின்னும் சிலர் முடிவில் கூறினார்கள். படையினனையும் தானி யாவையும் கவனிப்பதாகவும் அவனிடம் சாக் கிரதையாக இருக்கும்படி அவளை எச்சரிப்ப தாகவும் கடைசியில் எல்லாரும் முடிவு செய் தார்கள்... அதோடு விவாதம் நின்றது.

ஒரு மாதத்துக்கு மேல் சென்றது. படையி னன் ரொட்டிகள் சுட்டான், சரிகைத் தையல் காரிகளோடு சுற்றினான், அடிக்கடி எங்கள் தொழிலகத்துக்கு வந்தான், ஆனால் மங் கையர் மீது தான் பெற்ற வெற்றிகள் குறித்து ஒன்றும் சொல்லாமல் மீசையை முறுக்குவதும் மனநிறைவு ததும்ப உதடுகளை நக்கிக் கொள் வதுமாக மட்டும் இருந்தான்.

தானியா நாள்தோறும் காலையில் ‘‘அழகு



படிப்பகம்

www.padippakam.com

பிஸ்கோத்துகளுக்காக'' எங்களிடம் வந்தாள், எப்போதும் போலவே எங்களுடன் குதூகல மாகவும் இனிமையாகவும் பரிவுடனும் பழகி னாள். படையினனைப் பற்றி அவளிடம் பேச் செடுக்க நாங்கள் முயன்றோம். அவள் அவனை ''முண்டைக்கண் காளைக் கன்று'' என்றும் வேறு பல கேலிப் பெயர்களாலும் குறித் தாள். இதனால் நாங்கள் அமைதி அடைந் தோம். சரிகைத் தையல்காரிகள் படையின னைக் கட்டித் தழுவியதைக் கண்ட நாங்கள் எங்கள் மங்கையைக் குறித்துப் பெருமை கொண் டோம். அவனுடன் தானியா பழகிய விதம் ஒரு வகையில் எங்கள் எல்லாரையும் உயர்த்தி யது. அவளுடைய போக்கை வழிகாட்டியாகக் கொண்டவர்கள் போல நாங்கள் படையினனி டம் அசட்டை பாராட்டத் தலைப்பட்டோம். அவ ளிடமோ முன்னிலும் அதிக அன்பு காட்டி னோம், காலை வேளைகளில் இன்னும் அதிக மகிழ்ச்சியுடனும் நல்லியல்புடனும் அவளை எதிர் கொண்டோம்.

ஆனால் ஒரு நாள் படையினன் கொஞ்சம் குடித்து விட்டு எங்களிடம் வந்தான், உட் கார்ந்து சிரிக்கத் தொடங்கினான். எதை நினைத்து அவன் இப்படிச் சிரிக்கிறான் என்று நாங்கள் கேட்டோம். அவன் விஷயத்தை விளக் கினான்:

''இரண்டு பெண்கள் எனக்காக அடித்துக் கொண்டார்கள்... லீதியாவும் குரூஷாவும்... அவர்கள் தங்களை எப்படி விகாரப்படுத்திக் கொண்டார்கள் தெரியுமா? ஹா-ஹா! ஒருத்தி



படிப்பகம்

www.padippakam.com

மற்றவளின் தலைமயிரைப் பிடித்து இழுத் தாள், நடையில் தரையில் தள்ளி. அவள் மேல் ஏறிக்கொண்டாள்... ஹா-ஹா-ஹா! மூஞ்சி களைப் பிறாண்டிக் கொண்டார்கள்... கிழித்துக் கொண்டார்கள்... கண் கொள்ளாக் காட்சி! இந்தப் பெண்பிள்ளைகளால் ஏன் தான் நேர் மையாக அடித்துக் கொள்ள முடிவதில்லை? ஏன் பிராண்டிக் கொள்கிறார்கள்? ஊம்?''

உடல் நலமும் துப்புரவும் விளங்க, மகிழ்ச்சி யுடன் பெஞ்சியில் உட்கார்ந்திருந்தான் அவன். உட்கார்ந்து வாய் விட்டுச் சிரித்த வண்ணமாய் இருந்தான். நாங்கள் பேசவில்லை. இந்தத் தட வை எங்களுக்கு அவன் எதனாலோ பிடிக் காதவனாக இருந்தான்.

''இல்லை, பெண்பிள்ளைகளிடம் எனக்குத் தான் என்ன வெற்றி, ஊம்? ஒரே வேடிக்கை! நான் கண் சிமிட்ட வேண்டியதுதான், அவள் தயார்! ச்-சனி!''

பளபளக்கும் உரோமங்கள் அடர்ந்த அவ னுடைய வெண் கரங்கள் உயர்ந்து முழங்கால் கள் மேல் உரக்க அறைந்தவாறு விழுந்தன. பெண்கள் விவகாரங்களில் தான் இவ்வளவு அதிருஷ்டசாலியாக இருப்பது ஏன் என்பதை உண்மையில் தானே அறியாதவன் போன்ற இனிய வியப்பைக் காட்டும் பார்வையுடன் அவன் எங்களை நோக்கினான். அவனுடைய செம்மை படிந்த பருத்த முகத்தில் சுயதிருப்தியும் இன் பமும் சுடர் வீசின. அவன் மனநிறைவுடன் உதடுகளை நக்கிக்கொண்டான்.

எங்கள் பிஸ்கோத்து சுடுபவன் வாரு



படிப்பகம்

கரண்டியால் அடுப்படியை வலிவாகவும் கோபத்துடனும் சுரண்டினான். பின்பு திடீரென்று கேலிக் குரலில் சொன்னான்:

“பிர் மரக் கன்றை வீழ்த்தப் பிரமாத பலம் தேவை இல்லை. நீ தேவதாருவை வீழ்த்திக் காட்டு...”

“அதாவது, இதை நீ என்னிடமா சொல்லுகிறாய்?” என்று கேட்டான் படையினன்.

“உன்னிடம் தான்...”

“என்ன விஷயம்?”

“ஒன்றும் இல்லை... விடு!”

“இல்லை, நீ நழுவாதே! விஷயம் என்ன? எந்த தேவதாரு?”

எங்கள் பிஸ்கோத்து சுடுபவன் பதில் பேசாமல் வாரு கரண்டியால் அடுப்பில் மளமளவென்று வேலை செய்துகொண்டு போனான். வெந்த பிஸ்கோத்துகளை அடுப்பில் எறிந்தான், சுட்டவற்றை வாரித் தூக்கித் தரையில் சிறுவர்கள் அருகே ஓசையுடன் விசிறிப் போட்டான். அவர்கள் பிஸ்கோத்துகளை நார்களில் கோத்தார்கள். படையினனையும் அவனுடன் நடத்திய உரையாடலையும் எங்கள் பிஸ்கோத்து சுடுபவன் மறந்து விட்டான் போல் இருந்தது. ஆனால் படையினன் திடீரென்று ஒரு வகை நிம்மதியின்மைக்கு ஆளானான். அவன் எழுந்து, வலிப்பு கண்டது போலக் காற்றில் முன்னும் பின்னும் போய்க் கொண்டிருந்த கரண்டிக் காம்பு மார்பில் அடிக்கும் ஆபத்தைப் பொருட்படுத்தாமல் அடுப்பருகே சென்றான்.

“இல்லை, நீ சொல்லு—யார் அவள்? நீ என் மனத்தைப் புண்படுத்தி விட்டாய்... நானா? என்னிடமிருந்து தப்ப ஒருத்தியாலும் முடியாது, முடியவே முடியாது! நீ என்னடா என்றால் இப்படிப் புண்படுத்துகிற சொற்களை என்னிடம் சொல்கிறாய்...”

அவன் மெய்யாகவே புண்பட்டு விட்டவன் போல உண்மையில் தோற்றம் அளித்தான். பெண்களைக் கற்பிழக்கச் செய்யும் தன் திறமை ஒன்றைத் தவிர வேறு எதற்காகவும் அவனால் தன்னை மதிக்க முடியவில்லை போலும். ஒருவேளை, இந்த ஒரு திறமை தவிர உயிர்த் துடிப்புள்ள வேறு எதுவும் அவனிடம் இல்லை போலும். தான் உயிருள்ள மனிதன் என்று அவன் உணர வாய்ப்பு அளித்தது இந்த ஒன்று தான் போலும்.

சில மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய உள்ளத்தின் அல்லது உடலின் நோய் தான் வாழ்க்கையில் யாவற்றிலும் மதிப்புள்ளதும் சிறந்ததுமாக அவர்களுக்கு விளங்குகிறது. அவர்கள் வாழ்நாள் முழுவதும் ஓயாமல் அதைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள், அது ஒன்றினாலேயே வாழ்ந்திருக்கிறார்கள். அதனால் வருந்தும் போதே அவர்கள் அதிலிருந்து ஊட்டம் பெறுகிறார்கள். மற்றவர்களிடம் அதைப் பற்றிக் குறை கூறுகிறார்கள், இதன் மூலம் பிறருடைய கவனத்தைத் தங்கள் பால் திருப்புகிறார்கள். இதற்காக மனிதர்களின் அநுதாபத்தை முயன்று பெறுகிறார்கள். இதைத் தவிர அவர்களிடம் ஒன்றும்

www.padippakam.com

இருப்பது இல்லை. இந்த நோயை அவர்களிடமிருந்து அகற்றி விட்டால், அவர்களைக் குணப்படுத்தி விட்டால், அவர்கள் துன்பப் படுவார்கள், ஏனெனில், உயிர் வாழ்வதற்கான ஒரே சாதனத்தை இழந்து விடுவார்கள்—அப்போது அவர்கள் வெறுமை ஆகி விடுவார்கள். சில வேளைகளில் மனிதனுடைய வாழ்க்கை அறவே வறியது ஆகி விடுவதால் தனது குறையை மதிக்கவும் அதனால் வாழவும் அவன் தன் வசமின்றிக் கட்டாயப்படுத்தப்படுகிறான். மனிதர்கள் பெரும்பாலும் குறையுள்ளவர்கள் ஆவது சலிப்பு காரணமாகவே என்று சொல்லலாம்.

படையினன் கண்ணீர் வரும் அளவுக்கு மனத்தாங்கல் கொண்டு எங்கள் பிஸ்கோத்து சுடுபவனை விடாமல் துளைத்தான்:

''இல்லை, நீ சொல்லு, யார் அவள்?''

''சொல்லட்டுமா?'' என்று சட்டென அவன் பக்கம் திரும்பினான் பிஸ்கோத்து சுடுபவன்.

''ஊம்?''

''தானியாவைத் தெரியுமா?''

''ஊம்?''

''நல்லது, அவள் தான்! முயன்று பார்...''

''நானா?''

''நீ தான்!''

''அவளையா? எனக்கு இது—த்தூ!''

''பார்ப்போம்!''

''பார்ப்பாய்! ஹ்-ஹா!''

''அவள் உன்னை...''

''ஒரு மாதம் கெடு!''



படிப்பகம்

www.padippakam.com

"வீண் பெருமை அடித்துக் கொள்வதில் நீ சூரன் அப்பா!"

"இரண்டே வாரம்! நான் காட்டுகிறேன்! யார் அவள்? தானியா! த்தூ!.."

"சரி, போ அப்பாலே... இடைஞ்சல் பண்ணுகிறாய்!"

"இரண்டே வாரம்—காரியம் பலித்துவிடும்! அட சே..."

"போய் விடு என்கிறேன்!"

எங்கள் பிஸ்கோத்து சுடுபவன் திடீரென்று வெறி கொண்டு வாருகரண்டியை ஓங்கி ஆட்டினான். படையினன் வியப்படைந்து அவனிடமிருந்து பின் வாங்கி, எங்களை நோக்கி, சிறிது நேரம் பேசாதிருந்தான். பின்பு மெதுவாக, வன்மத்துடன் "நல்லது தான்!" என்று கூறிவிட்டு எங்களிடமிருந்து அகன்றான்.

விவாதத்தின் போது நாங்கள் எல்லாரும் அதில் ஈடுபட்டுப் பேசாதிருந்தோம். ஆனால் படையினன் போன பின்பு எங்களுக்குள் உற்சாகமான உரத்த பேச்சும் கூச்சலும் கிளம்பின.

ஒருவன் பிஸ்கோத்து சுடுபவனிடம் உரக்கக் கூறினான்:

"வீண் வம்பை மூட்டி விட்டாய், பாவேல்!"

"உன் வேலையைப் பார்!" என்று வெறியுடன் பதிலளித்தான் பிஸ்கோத்து சுடுபவன்.

படையினனுக்கு ரோசம் பொத்துக்கொண்டு வந்து விட்டது என்றும் தானியாவை ஆபத்து சூழ்கிறது என்றும் நாங்கள் உணர்ந்த அதே சமயத்தில் என்ன நடக்கும் என்று அறியும் தீவிரமான, உவப்பான ஆவல் எங்களைப்



படிப்பகம்

www.padippakam.com

பற்றிக்கொண்டது. தானியா படையினனுக்கு எதிர் நிற்பாளா? அநேகமாக எல்லாரும் உறுதி யுடன் கத்தினார்கள்:

"தானியாவா? அவள் எதிர்த்து நிற்பாள்! அவளை வசப்படுத்துவது இலேசன்று!"

எங்கள் படிமத்தின் உறுதியைச் சோதித் துப் பார்க்க எங்களுக்குப் பெருத்த ஆசை உண்டாயிற்று. எங்கள் படிமம் உறுதியுள்ள படிமம் என்றும் இந்தப் போட்டியில் வெற்றி பெறும் என்றும் ஒருவருக்கு ஒருவர் நிரூபிக்க நாங்கள் மும்முரமாக முயன்றோம். நாங்கள் படையினனைக் குறைவாகவே தூண்டி விட்ட தாகவும் அவன் விவாதத்தை மறந்து விடுவான் என்றும், அவனுடைய ஆணவத்தை நன் றாகப் புண்படுத்திக் கிளறுவது எங்களுக்கு அவசியம் என்றும் முடிவில் எங்களுக்குத் தோன்றியது. அன்று முதல் நாங்கள் ஒரு வகையான தனிப்பட்ட, இறுக்கமும் பதற்ற மும் நிறைந்த வாழ்க்கை வாழத் தொடங்கி னோம்—அந்த மாதிரி நாங்கள் அதற்கு முன் வாழவில்லை. நாங்கள் நாள் முழுவதும் ஒருவரோடு ஒருவர் விவாதித்தோம், எல்லா ரும் ஒரு வகையில் அதிக அறிவுள்ளவர்கள் ஆகி விட்டோம், முன்னை விட அதிகமாக வும் நன்றாகவும் பேசிக் கொண்டோம். நாங் கள் சாத்தானுடன் ஏதோ ஒரு விளையாட்டு ஆடுவது போலவும் எங்கள் தரப்பில் பண யம் தானியா என்றும் எங்களுக்குத் தோன்றி யது. படையினன் "எங்கள் தானியாவை அடைய வெகுவாகப் பாடுபடத்" தொடங்கி





படிப்பகம்

www.padippakam.com

விட்டதாக ரொட்டிக் கிடங்குக்காரர்களிடமிருந்து தெரிந்து கொண்டதும் எங்களுக்கு உற்சாகம் பொங்கியது, வாழ்வதில் பெருத்த ஆவல் உண்டாயிற்று. இதனால் எசமானன் எங்கள் கிளர்ச்சிப் பெருக்கைப் பயன்படுத்திக் கொண்டு ஒருநாளுக்குச் சுமார் எழு மணங்கு பிசைந்த மாவு வீதம் எங்கள் வேலையை அதிகப்படுத்தியதைக் கூட நாங்கள் கவனிக்கவில்லை. வேலையால் எங்களுக்குக் களைப்பு கூட ஏற்படாதது போல இருந்தது. தானியாவின் பெயர் எங்கள் நாவிலிருந்து நாள் முழுதும் அகலவில்லை. ஒருவகையான தனிப்பட்ட உள்ளக் கிளர்ச்சியுடன் காலை தோறும் அவளை எதிர்பார்த்தோம். அவள் எங்களிடம் வருவாள், ஆனால் இவள் அவளாக, முந்திய தானியாவாக அல்ல, வேறு எவளாகவோ இருப்பாள் என்று சில வேளைகளில் எங்களுக்குத் தோன்றியது.

ஆயினும் நடந்த விவாதத்தைப் பற்றி நாங்கள் அவளிடம் ஒன்றுமே சொல்லவில்லை. அவளிடம் எதைப் பற்றியும் கேட்காமல் முன்போலவே அன்புடனும் நன்றாகவும் அவளோடு பழகினோம். ஆனால் தானியா விஷயத்தில் நாங்கள் கொண்டிருந்த முந்திய உணர்வுக்கு வேற்றான புதிய ஒன்று இந்த உறவில் அப்போதே மறைவாகப் புகுந்து விட்டது. இந்தப் புதிய ஒன்றாக விளங்கியது கூரிய ஆவல்—எஃகுக் கத்தி போன்று கூர்மையான, உணர்ச்சி அற்ற ஆவல்...

ஒருநாள் காலையில் பிஸ்கோத்து சுடுபவன்



படிப்பகம்

www.padippakam.com

வேலை தொடங்கியதும், ''தம்பிமாரே! இன்றைக்குக் கெடு!'' என்றான்.

அவன் நினைவு படுத்தாமலே நாங்கள் இதை நன்றாக அறிந்திருந்தோம், ஆனாலும் திடுக்கிட்டோம்.

''அவளைப் பார்வையிடுங்கள்... இதோ வருவாள்!'' என்று யோசனை சொன்னான் பிஸ்கோத்து சுடுபவன்.

ஒருவன் அங்கலாய்த்தான்:

''கண்களால் எதையேனும் காண முடியுமா என்ன?!''

மீண்டும் எங்களுக்குள் மூண்டது உக்கிரமான, உரத்த விவாதம். எந்தப் பாத்திரத்தில் நாங்கள் எங்கள் சிறந்த பொருள்களைப் போட்டு வைத்திருந்தோமோ அந்தப் பாத்திரம் எவ்வளவு தூய்மையானது, அழுக்கு அண்ட முடியாதது என்பதை முடிவாக இன்று நாங்கள் தெரிந்து கொள்வோம். நாங்கள் மெய்யாகவே பெரிய விளையாட்டு விளையாடுகிறோம். எங்கள் படிமத்தின் தூய்மை குறித்த இந்தச் சோதனை எங்களைப் பொருத்த வரை அதை அழித்து விடக் கூடும் என்று நாங்கள் அன்று காலை எதனாலோ ஒரே நேரத்தில் முதன் முறையாக உணர்ந்தோம். படையினன் விடாப்பிடியாகவும் விலகாமலும் தானியாவைப் பின் தொடர்வதாக இந்த நாட்களில் நாங்கள் எல்லாரும் கேள்விப் பட்டோம். ஆனால், அவள் அவனைப் பற்றி என்ன நினைக்கிறாள் என்று எதனாலோ எங்களில் ஒருவரும் அவளிடம் கேட்கவில்லை. அவளோ, காலை தோறும்

www.padippakam.com

குறித்த நேரத்தில் சரியாக எங்களிடம் பிஸ் கோத்துகளுக்காக வருவதைத் தொடர்ந்தாள். எப்போதும் போலவே இருந்து வந்தாள்.

அன்றும் அவளுடைய குரலை நாங்கள் விரைவில் கேட்டோம்:

''கைதிகளே! நான் வந்து விட்டேன்...''

நாங்கள் அவளுக்குக் கதவைத் திறந்து விட விரைந்தோம். அவள் உள்ளே வந்ததும் வழக்கத்துக்கு மாறாக மௌனமாக அவளை எதிர்கொண்டோம். அவளை விழிகளால் பருகியவாறு, அவளிடம் என்ன பேசுவது, என்ன கேட்பது என்று தெரியாமல் அறிவு இருண்ட, பேச்சற்ற கும்பலாக அவள் முன்னே நின்றோம். தனக்குப் பழக்கம் இல்லாத இந்த வரவேற்பால் அவள் வியப்பு அடைந்தாள் போலும் — அவள் வெளிறியதையும் நிலை கொள்ளாமல் தவித்ததையும் திடீரென நாங்கள் கவனித்தோம். அவள் திணறும் குரலில் கேட்டாள:

''என்ன நீங்கள்... எப்படியோ இருக்கிறீர்கள்?''

''நீயோ?'' என்று அவள் மேல் வைத்த கண்ணை வாங்காமல் முறைப்புடன் வினவினான் பிஸ்கோத்து சுடுபவன்.

''நானா? என்ன வந்தது?''

''ஒன்-ஒன்றுமில்லை...''

''ஊம், சீக்கிரம் கொடுங்கள் பிஸ்கோத்துகள்...''

முன் ஒருபோதும் அவள் எங்களை அவசரப்படுததியது கிடையாது...



படிப்பகம்

www.padippakam.com

“உனக்கு நேரம் இருக்கிறது, பதறாதே!” என்று இடத்தை விட்டு நகராமலும் அவள் மேலிருந்து பார்வையை அகற்றாமலும் கூறினான் பிஸ்கோத்து சுடுபவன்.

அப்போது அவள் சட்டெனத் திரும்பி, கதவுக்கு அப்பால் மறைந்தாள்.

பிஸ்கோத்து சுடுபவன் வாரு கரண்டியை எடுத்துக் கொண்டு அடுப்பின் பக்கம் திரும்பி அமைதியாகச் சொன்னான்:

“தயாராகி விட்டது என்று தெரிகிறது!.. அட படைக்காரா!.. கழிசடை!..”

நாங்கள் ஆட்டு மந்தை போல ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு மேசை அருகே போய், மௌனமாக உட்கார்ந்து சுரத்தில்லாமல் வேலை செய்யத் தொடங்கினோம். விரைவில் ஒருவன் சொன்னான்:

“ஒருவேளை, இன்னும்...”

“ஊம், ஊம், வெறும் பேச்சு பேசு!” என்று கத்தினான் பிஸ்கோத்து சுடுபவன்.

அவன் புத்திசாலி, எங்களை விட அறிவுக் கூர்மை உள்ளவன் என்று நாங்கள் எல்லாரும் அறிந்திருந்தோம். அவனுடைய கூப்பாட்டின் அர்த்தம் படையினனின் வெற்றியில் நம்பிக்கை என்று நாங்கள் புரிந்து கொண்டோம்... எங்களைத் துயரம் கவ்வியது. நாங்கள் அமைதி இழந்தோம்...

பன்னிரண்டு மணிக்கு, மதியச் சாப்பாட்டு நேரத்தில், படையினன் வந்தான். எப்போதும் போலவே அவன் துப்புரவும் தளுக்கும் மினுக்குமாக இலகினான், எப்போதும் போலவே எங்



படிப்பகம்

www.padippakam.com

களை விழி பொருந்த நேரே நோக்கினான். எங்களுக்கோ அவனைப் பார்க்கக் கூச்சமாய் இருந்தது.

"என்ன, நேர்மையுள்ள கனவான்களே, படையினனின் துணிச்சலை நான் உங்களுக்குக் காட்டுகிறேன், பார்க்கிறீர்களா?'' என்று பெருமிதச் சிரிப்புடன் கூறினான் அவன். "அப்படியானால் நடைக்கு வந்து இடுக்குகள் வழியே பாருங்கள்... புரிந்ததா?''

நாங்கள் வெளியே போய், வெளி முகப்புக்குச் செல்லும் நடையின் பலகைச் சுவற்றில் இருந்த இடுக்குகளில் ஒருவர் மேல் ஒருவர் விழுந்தவாறு ஒட்டிக் கொண்டோம். நாங்கள் சிறிது நேரமே காத்திருந்தோம்... விரைவில் அவசர நடையும் கவலை தேங்கிய முகமுமாக வெளி முகப்பைக் கடந்த தானியா, இளகிய வெண்பனி, சேற்றுக் குட்டங்களைத் தாண்டிக் குதித்தவாறு சென்றாள். நிலவறைக் கதவுக்குப் பின் அவள் மறைந்தாள். பின்பு நிதானமாகவும் சீழ்க்கை அடித்துக்கொண்டும் கடந்து சென்றான் படையினன். அவனுடைய கைகள் கோட்டுப் பைகளில் நுழைக்கப்பட்டிருந்தன. மீசை துடித்தது...

மழை பெய்து கொண்டிருந்தது. மழைத் துளிகள் குட்டங்களில் விழுந்ததையும் அவற்றின் அடிகளால் குட்டங்களில் சுருக்கங்கள் ஏற்பட்டதையும் நாங்கள் கண்டோம். பகல் ஈரமும் மப்பு மந்தாரமுமாக இருந்தது—மிகவும் சலிப்பூட்டும் பகல். கூரைகள் மேல் வெண்பனி



படிப்பகம்

www.padippakam.com

இன்னும் இளகாமல் இருந்தது. தரை மீதோ கரிய சேற்றுக் கறைகள் தென்படத் தொடங்கி விட்டன. கூரைகள் மேல் இருந்த வெண்பனி மீதும் பழுப்பு நிறமான, அழுக்கு போன்ற படலம் போர்த்திருந்தது. மழை மெதுவாகப் பெய்தது, சோர்வுடன் ஒலித்தது. எங்களுக்குக் குளிர்ந்தது, எதிர்பார்ப்பது உவப்பற்றதாக இருந் தது...

நிலவறையிலிருந்து முதலில் வெளியே வந் தான் படையினன். அவன் கைகளைக் கோட் டுப் பைகளில் நுழைத்தவாறு, மீசையை அசைத் துக்கொண்டு வெளி முகப்பில் மெதுவாக நடந்தான்—எப்போதும் போலவே.

பிறகு—தானியாவும் வெளியே வந்தாள். அவளுடைய கண்கள்... அவளுடைய கண்கள் மகிழ்ச்சியும் இன்பமும் பொங்கச் சுடர் வீசின. உதடுகள் முறுவலித்தன. அவள் கனவில் நடப்பவள் போல, உறுதியின்றி அடி எடுத்து வைத்துத் தள்ளாடியவாறு நடந்தாள்...

எங்களால் இதை அமைதியாகப் பொறுத் துக் கொண்டிருக்க முடியவில்லை. நாங்கள் எல்லாரும் ஒரே நேரத்தில் முகப்புக்கு பாய்ந்து வெளியே குதித்து வன்மத்துடனும் உரக்கவும் காட்டுத்தனமாகவும் அவளைப் பார்த்துச் சீழ்க் கை அடிக்கவும் கூச்சல் போடவும் தொடங்கி னோம்.

எங்களைக் கண்டு அவள் திடுக்கிட்டு, காலடி யில் இருந்த சேற்றில் புதைக்கப்பட்டவள் போலக் கல்லாய்ச் சமைந்து நின்று விட்டாள்.



படிப்பகம்

நாங்கள் அவளைச் சூழ்ந்து கொண்டு ஆபாசச் சொற்களால் வன்மக் களிப்புடன், ஒரு வரை யறையின்றி அவளைத் திட்டி நொறுக்கினோம், வெட்கம் அற்ற வார்த்தைகளை அவளிடம் பேசி னோம்.

அவளுக்குப் போக்கிடம் இல்லை என்பதை யும் அவள் எங்களால் சூழப்பட்டிருக்கிறாள் என்பதையும் நாங்கள் விரும்பும் அளவுக்கு அவளை எள்ளி நகையாட முடியும் என்பதை யும் கண்டு கொண்டதால் நாங்கள் உரக்கக் கத்தாமலும் அவசரப்படாமலும் அவளைத் திட்டினோம். என்ன காரணமோ அறியேன், நாங்கள் அவளை அடிக்கவில்லை. அவள் எங்கள் நடுவே நின்று, எங்கள் இழி சொற் களைக் கேட்டவாறு தலையை இப்புறமும் அப்புறமும் திருப்பிக் கொண்டிருந்தாள். நாங் களோ, எங்கள் சொற்களின் சேற்றையும் நஞ் சையும் அவள் மேல் வர வரக் கடுமையாகக் கொட்டினோம்.

அவளது முகத்தின் செம்மை மறைந்தது. இதற்கு நிமிட நேரம் முன்பு இன்பம் பொங் கிய அவளுடைய இள நீல விழிகள் அகலத் திறந்தன, மார்பு விம்மி விம்மித் தணிந்தது, உதடுகள் துடித்தன.

நாங்களோ, அவளைச் சூழ்ந்து கொண்டு அவளைப் பழி வாங்கினோம், ஏனென்றால் அவள் எங்களை சூறையாடி இருந்தாள். அவள் எங்களுக்குச் சொந்தமாக இருந்தாள், எங்க ளிடம் இருந்த சிறந்தவற்றை நாங்கள் அவ ளுக்காகச் செலவிட்டிருந்தோம், இந்தச் சிறந்

www.padippakam.com

தவை வறியவர்களின் அற்பத் துணுக்குகளே என்றாலும் நாங்கள் இருபத்தாறு பேராகவும் அவள் ஒருத்தியாகவும் இருந்ததால் நாங்கள் அவளுக்குச் செய்யும் எந்தச் சித்திரவதையும் அவளுடைய குற்றத்துக்குப் போதாது என்று நினைத்தோம்! நாங்கள் அவளை எப்படி அவமதித்தோம்!.. அவள் வாயே திறக்கவில் லை. வெறித்த விழிகளால் எங்களை ஒரே பார்வையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள், அவள் உடல் முழுதும் நடுங்கிக் கொண்டிருந் தது.

நாங்கள் கெக்கலித்தோம், முழங்கினோம், உறுமினோம்... எங்கிருந்தோ இன்னும் சிலர் எங்கள் அருகே ஓடிவந்தார்கள்... எங்களில் ஒருவன் தானியாவின் சட்டைக் கையைப் பற்றி இழுத்தான்...

திடீரென்று அவளுடைய கண்களில் பொறி பறந்தது. அவள் நிதானமாகக் கைகளை உயர்த்தித் தலை மயிரைச் சரிப்படுத்திக் கொண் டாள். உரக்க, ஆனால் அமைதியாக எங்கள் முகத்துக்கு நேரே சொன்னாள்:

"அட சே, ஆக்கங் கெட்ட கைதிகளே!.."

இவ்வாறு சொல்லி விட்டு அவள் நேரே எங்களை நோக்கி நடந்தாள், நாங்கள் அவ ளுக்கு எதிரே இல்லாதது போலவும் நாங்கள் அவளுடைய வழியைத் தடுக்காதது போலவும். அதனால் தான் எங்களில் எவனும் உண்மை யில் அவளுடைய வழியை மறிக்கவில்லை.

எங்கள் வளையத்திலிருந்து வெளியேறிய தும் அவள் எங்கள் பக்கம் திரும்பாமல், முன்



படிப்பகம்

போலவே உரக்கவும் பெருமிதத்துடனும் இகழ்ச்சியுடனும் மேலும் சொன்னாள்:

"அட கடை கெட்டவர்களே... அசிங்கப் பிண்டங்களே..."

இவ்வாறு சொல்லிவிட்டுப் போய்விட்டாள்— நேர்மையும் எழிலும் பெருமையும் திகழ.

நாங்களோ, வெளி முகப்பின் நடுவே, வெயிலொளி இல்லாத வானத்தின் அடியில், சேற்றிலும் மழையிலும் இருந்தோம்...

பிறகு நாங்களும் எங்கள் ஈரித்த கற்குழிக்கு மௌனமாகச் சென்றோம். முன் போலவே வெயில் ஒளி எங்கள் சன்னல்களுக்கு உள்ளே வரவே இல்லை. தானியாவும் அப்புறம் ஒருபோதும் வரவில்லை!..

1899

www.padippakam.com

## புயற்பறவை பற்றிய பாடல்

வெள்ளி போன்ற பெருங்கடலுக்கு மேலாக காற்று புயல் மேகங்களைத் திரட்டிக் கொண்டிருக்கிறது. மேகங்களுக்கும் பெருங்கடலுக்கும் இடையே கருநிற மின்னல் கீற்றைப் போல புயற்பறவை பெருமையுடன் பறக்கிறது.

ஒருநேரம் அதன் இறக்கையை அலை சீராட்டுகிறது, மறுநேரம் அது ஓர் அம்பு போல எழுந்து மேகங்களைக் கிழித்துக் கொண்டும் பயங்கரமாகக் கத்திக் கொண்டும் செல்கிறது. அதே வேளை மேகங்கள் பறவையினுடைய துணிச்சல் மிக்க கதறலில் ஓர் ஆனந்த பரவசத்தைக் காண்கின்றன.

இந்தக் கதறலில் புயற்காற்றுக்கான பேரவா ஒலிக்கிறது! இக்கதறலில் கோபத்தின் சக்தியை, கொழுந்து விட்டெரிகிற உணர்ச்சியை, வெற்றியில் உள்ள நம்பிக்கையை மேகங்கள் காண்கின்றன.

கடற்பறவைகள் அச்சத்தில் புலம்புகின்றன

---

© தமிழ் மொழிபெயர்ப்பு, **ராதுகா பதிப்பகம்**, 1989.



படிப்பகம்

www.padippakam.com

—புலம்பி கடலுக்கு மேலாக அங்குமிங்கும் அலைந்து, பெருங்கடலின் கருமைநிற ஆழத்தி லே அச்சத்தை மறைக்கத் தயாராக இருக்கின் றன.

நீர்மூழ்கிப் பறவைகளும் புலம்புகின்றன— வாழ்க்கைப் போராட்டத்தின் மகிழ்ச்சி அவற்றிற் குத் தெரியவில்லை. அவை இடியொலி கேட்டு நடுங்குகிளாறன.

முட்டாள்தனமான பெங்குவின் பாறை இடுக்குகளில் பயந்து ஒதுங்குகிறது... ஆனால் பெருமைக்குரிய புயற்பறவை மட்டும் பெருங் கடலுக்கு மேலாக, வெள்ளி நுரை பொங்கும் நீருக்கு மேலாகத் துணிவோடும் சுதந்திரத்தோ டும் பறக்கிறது!

இன்னும் கருமையாக, இன்னும் தாழ் வாக புயல்மேகங்கள் கடலுக்கு மேலாக மூழ்கு இன்றன. அமிழ்கின்ற அலைகளோ ஆவலால் இடியை நோக்கி உயர்கின்றன.

இடி இடிக்கிறது. இப்போது அலைகள் காற்றுடன் பயங்கரமாகச் சண்டையிடுகின்றன. கோப நுரையுடன் அலைகள் புலம்புகின்றன. அந்தோ—காற்று பிரிக்கமுடியாதவாறு அலைக் கூட்டத் திரள்களை வெறியுடன் தழுவி, நெ டும் பாறைகளின் மீது மரகதம் போன்ற அத் திரள்களை மோதிச் சிதறுமாறு உருட்டுகிறது.

கருநிற மின்னல் போல புயற்பறவை கதற லோடு பறக்கிறது, புயல் மேகங்களை அம்பு போலத் துளைத்து, நீரின் மேலாகப் பறந்து இறக் கையால் அலைகளின் நுரையைப் புரட்டிச் செல் கிறது.



படிப்பகம்

www.padippakam.com

அந்தோ, துர்த்தேவதை போல, புயற்காற்றின் கரும் பேய் போல, முன்னிலும் சிரித்துக் கொண்டு, முன்னிலும் தேம்பிக் கொண்டு விரைந்து செல்கிறது... புயல்மேகங்களைப் பார்த்துச் சிரிக்கிறது, அதனது ஆனந்தப் பரவசத்தால் தேம்புகிறது!

கூர்மையான பேய், இடியின் முழக்கத்தில் வெகுகாலமாகவே களைப்பைக் கேட்கிறது. சூரியனை மேகங்களால் மறைக்க முடியாது என்பது அதற்கு உறுதியாகிறது; ஆமாம், மறைக்க முடியாதுதான்!

காற்றுச் சீறுகிறது... இடி முழங்குகிறது...

அடியற்ற பெருங்கடலுக்கு மேலாக, நீல வெளிச்சம் போல புயல் மேகங்களின் கூட்டங்கள் எரிகின்றன. மின்னல் அம்புகளை கடல் பிடித்து அவற்றைத் தனது ஆழத்தில் போட்டு அவிக்கிறது. கொடிய பாம்புகளைப் போல, அந்த மின்னல்களின் பிரதிபலிப்புகள் கடலில் நெளிந்து மறைந்து போகின்றன.

“புயல்! விரைந்து புயல் வந்து அடிக்கப் போகிறது!”

மின்னல்களுக்கு மத்தியில், கர்ஜிக்கின்ற ரூர்க்கமான பெருங்கடலுக்கு மேலாகத் தைரியமான புயற்பறவை பெருமையுடன் பறந்து கொண்டிருக்கிறது. வெற்றியின் தீர்க்கதரிசி போல அது முழங்குகிறது:

“தனது முழு ஆவேசத்துடன் புயல் அடிக்கட்டும்!..”



படிப்பகம்

www.padippakam.com

# பனிக்கட்டி நகர்கிறது *

நகருக்கு எதிராக ஆற்றில் ஏழு தச்சர்கள், கடந்த குளிர்காலத்தின் போது அடுத்திருந்த குடியிருப்புகளில் வசித்தவர்கள் விறகுக்காக எடுத்துச் சென்றுவிட்டதால் மரப்பலகைத் தடுப்பு ஒன்றை அவசரமாக மராமத்துச் செய்து கொண்டிருந்தார்கள்.

அந்த ஆண்டு வசந்தகாலம் சுணங்கி வந்தது. இளமையோடும் உறுதியோடும் இளம் மார்ச் மாதமானது அக்டோபரை அடுத்து வந்தது போலக் காணப்பட்டது; கிட்டத்தட்ட மதியம் வாக்கில்தான்—அதுவும் எல்லா நாள்களிலும் அல்ல—மேகங்களால் திரையிடப்பட்ட வானத்தில் குளிர்கால வெள்ளை நிறச் சூரியன் மேகங்களுக்கு இடையேயான நீலநிறக் குட்டைகளில் தோன்றவும் மறையவும் செய்தது. அது பூமியை

---

* இந்தக் கதையின் நிகழ்ச்சி 1883-84இல் நிகழ்ந்தது. அப்போது வ. ஸெ. செர்கேயெவ் என்ற ஒப்பந்தக்காரருக்காக கார்க்கி, நீழ்நி நோவ்கரத் நகரில் கண்காணியாகப் பணியாற்றினார். — **ப-ர்.**

© தமிழ் மொழிபெயர்ப்பு, **ராதுகா பதிப்பகம், 1989.**



படிப்பகம்

அன்பற்ற, ஓரக்கண்ணால் பார்த்தது.

ஏற்கெனவே புனித வாரத்தின் வெள்ளிக் கிழமை வந்துவிட்டது. பகலில் கூறைகளிலிருந்து கறைந்தோடும் பனி இரவு நேரத்திற்கெல்லாம் நீலநிறக் கம்பிகளாக, ஓரடி நீளமுள்ள ஊசிகள் போன்று உறைந்துப் படிந்திருந்தன. ஆற்றில் பனிக்கட்டியானது வெண்பனி இன்றி இருந்தது. இந்தப் பனிக்கட்டி நீலநிறமாகக் குளிர் கால மேகங்களைப் போலக் காணப்பட்டது.

தச்சர்கள் வேலை செய்தார்கள், நகரத்திலோ வெங்கல மணிகள் துயரமிக்க அழைப்பை முழங்கிக் கொண்டிருந்தன. வேளையாட்களின் தலைகள் மேலே எழுந்து வந்தன, அவர்களது கண்கள் நகரத்தைச் சூழ்ந்திருந்த சாம்பல்நிற அந்திக்கருக்கலை சிந்தனையோடு நோக்கின, அடிக்கடி அடுத்த அடிக்காக உயரே எழுந்த கோடரி, மணிகளின் சீராட்டுகின்ற ஓசையைக் குலைக்கப் பயந்தது போல முடிவு எதுமின்றி அந்தரத்தில் நின்றது.

ஆற்றின் அகன்ற பாதையில் இங்குமங்கும் பைன் மரக்கிளைகள், சாலைகளையும் பனியில் பிளவுகளையும் அல்லது பிளவுகளிடை நீரையும் காட்டுவதற்காகப் பனிக்குள்ளாக வளைந்து நீட்டிக் கொண்டிருந்தன; இழுப்பால் தாக்குண்டு மூழ்குகின்ற மனிதனின் கைகளைப் போல அவை மேல் நோக்கிக் கிடந்தன.

சோர்வுப் புலம்பலுடன் நதி மூச்சுவிட்டது: பாலைவனமாக, நுண்தொளை நிறைந்த பனிக்கட்டியினால் மூடிய நதி நம்பிக்கை இன்றி, தளர்ச்சியுற்றும் மகிழ்ச்சியற்றும் வீசு

www.padippakam.com

இன்ற குளிர்ந்த காற்றினின்றும் ஏதோ இருண்ட பகுதிக்கு அழைத்துச் செல்லும் நீண்ட சாலை போலக் கிடந்தது.

...மேஸ்திரி ஒசிப்—தெளிவான கட்டான உடலும் சுருண்ட வெள்ளைத் தாடியும் இளஞ் சிவப்பு நிறக் கன்னங்களில் நெருக்கமான வளையங்களாக மயிரும் மெலிவான கழுத்தும் கொண்டவன். எங்கும் எப்போதும் எல்லாரும் காணக்கூடிய மேஸ்திரி ஒசிப் சத்தம் போடுவான்:

"சீக்கிரம், சீக்கிரம் நகருங்கள், பொடியன்களே!"

என் பக்கமாகத் திரும்பி, கிண்டலாக அறிவுறுத்துவான்:

"கண்காணி, உன் சப்பட்டை மூக்கை ஆகாயத்தை நோக்கி எதற்காக வைத்துக் கொண்டிருக்கிறாய்? நீ என்ன வேலைக்காக இங்கே வந்திருக்கிறாய் என்று கேட்கிறேன். நீ ஒப்பந்தக்காரர் வசீலி அவர்களின் ஆள் தானே? அப்படியானால் எங்களைத் தூண்ட வேண்டியது நீ தான்! ஆனால் முதுகைத் திருப்பிக்கொண்டு நிற்கிறாய்! உனது கடமையில் நீ கருத்தாக இல்லை, இளைஞனே, மரம் போல என் நிற்கிறாய்! கண்களை மூடிக் கொண்டு இருக்க உனக்கு உரிமை இல்லை. கண்களைத் திறந்து விழிப்போடு இருந்து, எங்களிடமிருந்து வேலை வாங்குவதற்காக நீ அனுப்பப்பட்டிருந்தால் பையன்களிடத்தில் ஒழுங்காகப் பேச வேண்டும். உனது அதிகாரத்தைப் பயன்படுத்து!"



படிப்பகம்

திரும்பவும் அவன் இளைஞர்களிடம் சத்தம் போடுவான்:

"சனியன்களே, அதைச் செய்யுங்கள்! நாம் இன்றைக்கு வேலையை முடிக்க வேண்டுமா, இல்லையா?"

தொழிலாளர் குழுவில் மிகவும் சோம்பேறி அவன் தான். அவனுக்கு வேலை அருமையாகத் தெரியும், திறமையாகவும் வேகமாகவும் நல்ல விருப்பத்துடன் உண்மையான அக்கறையுடன் எப்படிச் செய்வது என்று அவனுக்குத் தெரியும். ஆனால் தன்னைச் சுறு சுறுப்பாக வைத்துக் கொள்ள அவன் விரும்பவில்லை, எப்போதுமே மந்திரக் கதைகள் சொல்வான். வேலை உண்மையாகவே நடந்து கொண்டிருக்கும் போது, ஆட்கள் அதில் முழுமையாக ஈடுபட்டு அமைதியாக வேலை செய்து கொண்டிருக்கும் போது, அவர்களது வேலை நன்றாகவும் இலகுவாகவும் நடக்க வேண்டும் என்ற ஆசையால் திடீரென்று உந்தப்பட்டு, தனது இனிய குரலில் ஓசிப் பேசுவான்:

"சகோதரர்களே, ஒரு சமயத்தில் இப்படி நடந்தது..."

இரண்டு அல்லது மூன்று நிமிடங்களுக்கு ஆட்கள் கேட்காதது போலத் தோன்றும், வெட்டவும் இழைக்கவும் தங்களது கோடரிகளில் கவனம் செலுத்தவும் செய்வார்கள். ஆனால் அவனுடைய மென்மையான, வழக்கமான உச்சக்குரல் கனவுத் தோற்றமாகப் படிப்படியாக அவர்களது கவனத்தைக் கவரும். ஓசிப்புடைய தெளிவான, இளநீல நிறக் கண்கள் இனிமை

யாகச் சுருங்கும், தனது விரல்களால் சுருள் தாடியைத் திருகி விட்டுக் கொள்வான். அவனது உதடுகள் மகிழ்ச்சியுடன் வார்த்தை வார்த்தையாக வெளிவிடும்...

"ஆகவே அவன் அந்த மீனைப் பிடித்துத் தனது கூடையில் போட்டுக் கொண்டு காட்டு வழியாக இவ்வாறு எண்ணியபடி சென்றான்: 'ஆமாம், நல்ல அருமையான மீன் சூப்பு எனக்குக் கிடைக்கும்...' அப்போது திடீரென்று, எங்கிருந்து என்று தெரியாதவாறு ஒரு பெண்ணுடைய குரல் கிறீச்சிட அழைத்தது: 'யெலேஸ்யா, யெலேஸ்யா...' "

இதற்குள்ளாக நீண்ட எலும்பும் தோலுமான மொர்த்வினியன் லியோன்கா—சிறிய, பிரமிப்படைந்த கண்கள் கொண்ட இளைஞன்—ஏற்கெனவே தனது கோடரியைத் தாழ்த்தியபடி வாயைத் திறந்தவாறு அசையாமல் நின்று கொண்டிருப்பான்.

"கூடையிலிருந்து அடிக்குரலில் ஒரு குரல் பேசியது: 'இதோ இங்கே!..' அக்கணமே கூடையினுடைய மூடி திறந்து கொண்டது—சளக்!—ஒரே பாய்ச்சலில் அந்த மீன் தாவிப் போய் திரும்பவும் தனது கயத்துக்குப் போனது..."

வயதான போர்வீரன் சனியாவின்—ஆஸ்த்மாவால் அவதிப்பட்ட பெரும் குடிகாரன், சில நேரங்களில் புண்பட்டது பொதுவாக வாழ்க்கை மீது நிரந்தரமான வெறுப்பை அவனிடத்தில் ஏற்படுத்தி இருந்தது—கரகரத்த குரலில் கேட்பான்:

www.padippakam.com

‘‘அது மீனாக இருந்தால், காய்ந்த நிலப் பகுதியில் எப்படிப் போக முடியும்?’’

‘‘ஆனால் மீன் பேசுவது மிகவும் வழக்க மானதுதானா?’’ என்று ஓசிப் கெஞ்சலாகப் பதிலுக்குக் கேட்பான்.

கன்ன எலும்புகளும் தாடைகளும் முன் னுக்குத் தள்ளிக் கொண்டிருந்ததால் நாய் போன்ற முகம் கொண்ட, அமைதி நிறைந்த, சாதாரணமானவனான மொகேய் என்ற ஆம் பிளை அவசரமில்லாமல் தனது விருப்பமான நாலு சொற்களை மூக்கினால் பேசுவான்:

‘‘நீ சொல்வது மிகவும் சரி...’’

ஒவ்வொரு முறையும் யாராவது ஏதேனும் அதிசயமானதை, பயங்கரமானதை, அருவருப் பானதை அல்லது தீயதைச் சொன்னால் இந்த மாதிரி அமைதியான, ஆனால் நடுக்குறாத குர லில் சொல்வான்:

‘‘நீ சொல்வது மிகவும் சரி...’’

தனது கொடுமையான, கனத்த முட்டியால் அவன் எனது மார்பை நாலு முறை அடித்து தாக்கியது போல இருந்தது.

எல்லா வேலையும் நிற்க வேண்டியதா யிற்று, ஏனெனில் அருவருப்பாகப் பேசுபவ னும் கூனல் விழுந்தவனுமான யாக்கவ் மீன் களைப் பற்றிய ஏதோ ஒரு கதை சொல்ல வேண்டும் என்று ஆர்வத்தால் உந்தப்பட்டு அங்கு வந்து சேர்ந்து ஏற்கெனவே சொல்லத் தொடங்கினான். ஆனால் யாரும் அவனை நம்புவதில்லை. அவனது அருவருப்பான பேச்சு



4*

படிப்பகம்

www.padippakam.com

அனைவரையும் நகைக்க வைத்தது; தனக்குச் சாட்சியாக ஆண்டவனை அழைத்துச் சத்தியம் செய்தான், தனது உளியால் கோபமாக வெட்டிக் காட்டினான், எச்சிலைக் காறித் துப்பினான், அனைவரையும் மகிழ்வூட்டுவது போலச் சப்தம் போட்டான்:

''யாரோ ஒருவன் அத்தகைய அண்டப்புளுகர்களைப் பற்றிச் சொன்னால் நீங்கள் அவனை நம்புகிறீர்கள், நானோ ஆண்டவனுடைய உண்மையைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன், ஆனால் நீங்கள் ஆண் கழுதைகளைப் போலச் சிரிக்கிறீர்கள், நாசமாய்ப் போக...''

எல்லாரும் தங்களது வேலைகளை விட்டு விட்டு அங்கு நிலவிய இரைச்சலில் சேர்ந்து கொண்டு, வெறும் கைகளை அலைத்துக் கொண்டிருப்பார்கள்; இத்தருணத்தில் ஓசிப் தனது தொப்பியைக் கழற்றி தனது வழுக்கை விழுந்த நரைத்த தலையைக் காட்டி, கண்டிப் போடு சப்தம் போடுவான்:

''இப்போதைக்கு அது போதும்! இரைச்சல் எழுப்பி விட்டீர்கள், ஓய்வெடுத்துக் கொண்டீர்கள். அது போதுமானது!''

''நீ தான் அதை ஆரம்பித்தாய்,'' என்று ஓசையுடன் மூச்சு விட்டுச் சொன்ன போர்வீரன் தனது உள்ளங்கைகளில் துப்பிக்கொள்வான்.

இது போன்ற நேரங்களில் ஓசிப் என் பக்கமாகத் திரும்புவான்:

''கண்காணியே...''

தன்னுடைய கதைகளால் வேலையில் ஈடு



படிப்பகம்

www.padippakam.com

பட்டிருந்த ஆட்களின் கவனத்தைத் திருப்ப வேண்டும் என்பதில் அவனுக்கு ஏதோ குறிப் பிட்ட நோக்கம் இருந்திருக்க வேண்டும் என் பது போல எனக்குத் தோன்றும். ஆனால் இந்த வெட்டிப் பேச்சால் தனது சோம் பேறித்தனத்தை மூடி மறைக்க முயல்கிறானா அல்லது அவர்களுக்கு ஓய்வு கொடுக்க நினைக் கிறானா என்பதை என்னால் கண்டு கொள்ள முடியவில்லை. ஒப்பந்தக்காரரிடம் ஓசிப்பின் போக்கு அடிமைத் தனமானதாக இருக்கும், தனது ஆதாயத்துக்காக 'முட்டாளாக நடிப் பான்', ஒவ்வொரு சனிக்கிழமையும் தனது தொழிலாளர் குழுவிற்கு 'ஒரு குவளை தே நீருக்காக' ஏதாவது பணம் கறந்து விடுவதில் வெற்றியடைவான்.

மொத்தத்தில் அவன் 'தொழிலாளர் குழு ஆள்', ஆனால் பழைய ஆட்கள் அவனை ஒரு கோமாளியாகவும் சோம்பேறியாகவும் கருதி வெறுப்பார்கள், அற்ப மரியாதையுடன் அவ னை நடத்துவார்கள், இளைஞர்கள் கூட, அவ னது கதைகளைக் கேட்டு மகிழ்ந்தாலும், அவ னை ஒரு பொருட்டாக மதிக்காது கெட்ட நோக் குடன், வெறுக்கத்தக்க அவநம்பிக்கையுடன் அடிக்கடி பார்ப்பார்கள்.

சில நேரங்களில் நான் மனம் விட்டுப் பேசக்கூடிய படித்தவனாகிய மொர்த்வினியன், ஓசிப் பற்றி அவனது கருத்தை நான் கேட்ட போது அசட்டுச் சிரிப்புடன் பதிலளித்தான்:

''தெரியாது... சாத்தானுக்குத் தெரியும்...



படிப்பகம்

www.padippakam.com

மொத்தத்தில் மோசமில்லை என்று நினைக் கிறேன்...''

கண நேரச் சிந்தனைக்குப் பிறகு மேலும் தொடர்ந்தான்:

''செத்துப்போன மிகாய்லா நேர்மையான பேச்சுத் திறமை படைத்தவன், புத்திசாலி. ஒரு சமயம் அவனோடு சச்சர விட்டான். அவன் ஒசிப்பிடம் சொன்னான்: 'நீ உண்மையான மனிதன் என்று நினைக்கிறாயா? உனக்குள் உள்ள வேலையாள் இறந்து போய் விட்டான், ஆனால் முதலாளி இன்னும் பிறக்கவில்லை. ஆகவே கம்பியில் மாட்ட மறந்து போன குண்டைப் போல உன் வாழ்க்கை முழுக்க நீ சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பாய்.' ஒசிப் பற்றி ஒருவகையில் அது உண்மைதான்...''

பிறகு மீண்டும் கண நேரச் சிந்தனைக்குப் பிறகு, மொர்த்வினியன் சங்கடத்துடன் சொன் னான்:

''ஆனால் மொத்தத்தில் அவன் பரவாயில் லை, அன்பானவன்...''

இந்த மனிதர்களுக்கு மத்தியில் என் னுடைய நிலைமை மிகவும் கேலிக்குரியதாக இருக்கும்: சாமான்களின் செலவுகளைப் பற் றிக் கணக்கு வைத்துக் கொள்ளவும் தச்சர்கள் ஆணிகளைத் திருடாதும் பலகைகளைச் சாரா யக்கடையில் விற்பனை செய்யாது பார்த்துக் கொள்ளவும் பதினைந்து வயதில் ஒப்பந்தக்கார ரால் வேலைக்கு அமர்த்தப் பட்டேன். அவர்கள் ஆணிகளைத் தொடர்ந்து திருடுவார்கள், நான்



படிப்பகம்

www.padippakam.com

இருப்பதனால் கொஞ்சம் கூடக் கலங்கவில்லை. அவர்களுடைய கூட்டத்தில் நான் தேவையில் லாதவன், மகிழ்ச்சியற்ற உறுப்பினன் என் பதைக் காட்டுவதற்கு எல்லாருமே ஆர்வத் தோடு இருப்பார்கள். கவனத்தைக் கவராத முறையில் பலகையால் என்னை அடிக்கவோ, வேறு ஏதேனும் பிற சிறு தொந்தரவு கொ டுக்கவோ அவர்களில் யாருக்காவது வாய்ப்புக் கிடைத்தால் அதை மிகவும் திறமையோடு பயன் படுத்திக் கொள்வார்கள்.

நான் அவர்களோடு அமைதியின்மையை உணர்வேன், வேட்கப்படுவேன்; என்னுடன் அவர் கள் ஒத்துப்போகக் கூடிய எதையோ சொல்ல விரும்புவேன், ஆனால் சரியான வார்த்தை களை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. எனது சொந்த பயனற்ற தன்மையின் உற்சா கமின்மையால் நசுக்கப்படுவேன்.

ஒவ்வொரு முறையும் எடுத்துக்கொண்ட பொருள்களின் எண்ணிக்கையை நான் எனது குறிப்பேட்டில் எழுதும் போது, என்னிடத்தில் மெல்ல நடந்து வந்து ஓசிப் விசாரிப்பான்:

''குறித்துக்கொண்டாயா? வாடா, காட்டு...''

கண்களைச் சுருக்கியவாறு குறிப்பைக் கூர்ந்து நோக்கி விட்டு தெளிவற்றவாறு சொல் வான்:

''உன்னுடைய கையெழுத்து மிகவும் சிறி யது...''

அவனால் அச்சு எழுத்துகளை மட்டுமே படிக்கவும் எழுதவும் முடியும். தற்போதைய ருஷ்ய எழுத்து அவனுக்குத் தெரியாது.



படிப்பகம்

www.padippakam.com

‘‘அந்தக் கிறுக்கல்—என்ன வார்த்தை அது?’’

‘‘சரக்குகள்.’’

‘‘சரக்-குகள்! எனக்குச் சுருக்குக் கண்ணி மாதிரியே தெரிகிறது... அந்த வரி என்ன?’’

‘‘ஒன்னே முக்கால் அங்குல இருபது அடிப் பலகை—ஐந்து.’’

‘‘ஆறு.’’

‘‘ஐந்து.’’

‘‘எப்படிச் சொல்கிறாய், ஐந்து என்று? அங்கிருந்த போர்வீரன் ஒன்றை இரண்டாக அறுத்தான்...’’

‘‘அவன் அதை வீணாகச் செய்து இருக்கிறான், அதற்கு அவசியம் இல்லை...’’

‘‘அவசியமில்லை என்று எப்படிச் சொல்கிறாய்? பாதியை எடுத்து சாராயக்கடைக்கு வியாபாரம் செய்யப் போய்விட்டான்...’’

தனது எருக்கு மலர் போன்ற நீலக் கண்களால் எனது முகத்தை பரபரப்பின்றி நோக்குவான், அவனது கண்களில் மகிழ்ச்சி மிக்க புன்னகை தெரியும். தனது விரலால் தாடி நுனியைச் சிறுசிறு சுருள்களாகச் சுருட்டிவிட்டவாறு மனத்தைக் கவரத்தக்க தைரியத்துடன் பேசுவான்:

‘‘ஆறாகப் போடு, இப்போதே செய்! கொஞ்சம் பாரு, இது ஈரமான, குளிர்ச்சியான கஷ்டமான வேலை, ஆட்கள் அவ்வப்பொழுது தங்களை மகிழ்ச்சிப்படுத்திக் கொள்ளணும், கொஞ்சம் ஒயின் போட்டு இதயத்தை வெதுவெதுப்பாக்க வேண்டாமா? ரொம்பவும் கண்டிப்பாக



படிப்பகம்

www.padippakam.com

இருக்காதே. கண்டிப்பாக இருப்பதனாலே ஆண்டவனின் ஆசிர்வாதம் கிடைக்குமென நம்பாதே...''

அவன் அதிகம் பேசுவான், செல்லமாகவும் அணிகள் செறிந்த சொற்களுடனும். வார்த்தைகள் மரத்தூசி போல எனக்கு மேலாகத் தெளிக்கும், எனது மனசாட்சி குருடானது போல இருக்கும், அமைதியாக அவனுக்குத் திருத்தப்பட்ட எண்ணைக் காண்பிப்பேன்.

''இப்பச் சரி! இந்த எண் பார்க்க நல்லாத் தோனுது, வியாபாரியினுடைய மனைவி மாதிரி அங்கே உட்கார்ந்து கொண்டு, பார், கொழுத்த, நல்ல எண் இது...''

தனது வெற்றி குறித்து தச்சர்களிடம் எவ்வளவு வெற்றிப் பெருமிதத்துடன் கூறுவான் என்பதைப் பார்ப்பேன். பணிந்து போனதற்காக அவர்கள் எல்லோரும் என்னை இகழ்வார்கள், அந்த அவமானத்திற்காக எனது பதினைந்து வயது இதயம் அழுதும், எனது மனத்திற்குள்ளாகத் தெளிவற்றச் சிந்தனைகள் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும்:

''இதெல்லாம் எவ்வளவு விசித்திரமானது, முட்டாள்தனமானது. ஆறைத் திரும்பவும் ஐந்தாக நான் மாற்ற மாட்டேன் என்பதிலும் பலகைகளில் ஒன்றை அவர்கள் குடிக்கச் செலவழித்தார்கள் என்று ஒப்பந்தக்காரரிடம் சொல்ல மாட்டேன் என்பதிலும் அவன் என் அவ்வளவு உறுதியாக இருக்கிறான்?''

ஒரு சமயம் இரண்டு பவுண்ட் மர ஆணிகளையும் இரும்பு நாதாங்கிகளையும் எடைக்குத் திருடினார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

‘‘கேளு,’’ என்று ஒசிப்பை எச்சரித்தேன். ‘‘அதை அப்படியே என்னால் விட முடியாது!’’

‘‘சரி!’’ என்று ஒப்புக் கொண்டான், அவனது நரைத்த புருவங்கள் நெளிந்தன. ‘‘அது உண்மையில் குறும்புத்தனந்தான், இல்லையா? போபோ, அவர்களைக் குறித்துக்கொள், அவர்கள் மோசமானவர்கள்...’’

ஆட்களை நோக்கி ஒசிப் சத்தம் போட்டான்:

‘‘ஏய், கூட்டாளிகளே, இரும்பு நாதாங்கிகளுக்காகவும் மர ஆணிகளுக்காகவும் உங்களுக்கு அபராதம் விதித்திருக்கிறான்!’’

போர்வீரன் கடுகடுப்பாக விசாரித்தான்:

‘‘எதற்காக?’’

‘‘அதாவது நீங்கள் மீறி விட்டீர்கள்,’’ என்று அமைதியாக விளக்கினான் ஒசிப்.

என்னை அருவருப்புடன் நோக்கியவாறு தச்சர்கள் முணுமுணுக்கத் தொடங்கினார்கள். நான் எதை எச்சரித்திருந்தேனோ அதைச் செய்வேன் என்றும் அதைச் செய்திருந்தாலும், அது சரியாகத்தான் இருக்கும் என்றும் நானே நம்பவில்லை.

‘‘ஒப்பந்தக்காரரிடமிருந்து நான் போய்விடுவேன்,’’ என்று ஒசிப்பிடம் சொன்னேன். ‘‘நீங்க எல்லாரும் நாசமாப் போக! என்னை வைத்து ஒரு திருடனை உண்டாக்குவீர்கள்.’’

தனது தாடியைத் தடவியவாறு ஒசிப் கண நேரம் சிந்தித்துவிட்டு, எனக்கு அருகே தோளோடு தோள் பொருந்த உட்கார்ந்து அமைதியாகப் பேசினான்:



படிப்பகம்

www.padippakam.com

''அது உண்மைதான்!''

''எது?''

''நீ போய்விட வேணும். நீ என்ன மாதிரி யான கண்காணி அல்லது என்ன மாதிரியான மேற்பார்வையாளன் என்று நினைக்கிறாய்? அது மாதிரியான வேலைகளில் சொத்தின் அருத்தத்தை நீ புரிந்து கொள்ளணும், உன் தாயார் உனக்குத் தந்த உடலை நீ பார்ப்பது போல, உன் எசமானனது உடைமைகளைப் பாதுகாக்க இயல்பாகவே காவல்காக்கும் நா யின் போக்கு உன்னிடம் இருக்கணும்... அது போன்ற வேலைக்கு—நீ மிகச் சிறிய நாய்க் குட்டி, சொத்தைப் பற்றியோ என்ன சொந் தம் என்பது பற்றியோ உனக்கு உணர்வில் லை. எங்களிடத்தில் நீ எவ்வளவு முனைப் பின்றி இருக்கிறாய் என்பதை வசீலி அவர் களிடம் யாராவது சொன்னால் அந்தக் கண மே எந்தத் தயக்கமும் இன்றி உன் காதைப் பிடித்து இழுத்து வெளியே தள்ளி விடுவார்! ஏனென்றால் அவருக்காக நீ பணத்தைச் சேர்க்கவில்லை, அவருக்கு நட்டத்தை ஏற்படுத்து கிறாய். ஒரு ஊழியன் தன் எசமானனுக்கு அவசியம் லாபம் தேடித்தந்தாக வேண்டும், தெரியுமா?''

ஒரு சிகரெட்டைச் சுருட்டி என்னிடம் தந் தான்.

''புகை, உன் மூளை தெளிவாகும். அத் தகைய பிடிவாதமான சுபாவம் உனக்கு இல் லை என்றால், நீ துறவியாகப் போய் விடலாம்



படிப்பகம்

என்று சொல்வேன்! ஆனால், உன்னுடைய சுபாவம் அதற்குப் பொருத்தமானதில்லை, அது முரடடுத்தனமான குணம், உனது ஆன்மா இழைக்கப்படவில்லை, என், மடாதிபதிக்கு எதிராகக் கூட நீ போவாய். அத்தகைய சுபாவத்துடன் ஒரு மனிதன் சீட்டாட முடியாது. ஒரு துறவி சிறிய காகத்தைப் போல: யாருடைய மணியைக் கொத்துகிறது என்பது பற்றிக் கவலைப்படுவதில்லை, விஷயத்தின் மூலம் பற்றி அவனுக்கு எந்த அக்கறையும் இல்லை, தானியத்திலிருந்து வயிற்றை நிரப்புகிறதே தவிர வேரிலிருந்து அன்று. இதை எல்லாம் என் உள்ளத்தினின்றும் உனக்கு நான் சொல்கிறேன். எங்கள் விஷயங்களில் இணைந்து போகக் கூடிய தன்மை உன்னிடம் இல்லை என்பதற்காகச் சொல்கிறேன். தவறான கூட்டில் போடப்பட்ட கூக்குப் பறவையின் முட்டை நீ...''

தனது தொப்பியைக் கழற்றினான். குறிப்பாக ஏதாவது முக்கியத்துவமானதைச் சொல்ல அவன் ஆசைப்பட்ட போது எப்போதும் இது மாதிரி செய்தான். சாம்பல் நிற வானத்தை உற்று நோக்கி உரத்த குரலில் பணிவுடன் சொன்னான்:

''ஆண்டவனுடைய கண்ணுக்கு உண்மையில் நமது செயல்கள் திருட்டுத்தனமானவையே, அவனிடத்தில் நமக்கு மோட்சம் கிடைக்கப் போவதில்லை...''

''நீ சொல்வது மிகவும் சரி,'' என்றான் மொகேய். அவனது குரல் கிளாரினெட் போல

www.padippakam.com

ஒலித்தது...

ஆனாலும் என்னுடன் தனியாக இருக்கும் போது போதித்தவாறு, அன்புடன் பேசுவான் ஒசிப். அவனது கண்களில் லேசான, புத்தி சாலித்தனமான கிண்டல் பொறி மின்னும், அவற்றின் நீலநிறக் கருமணிகள் நேரடியாக எனது கண்களுக்குள்ளாகத் திரும்பும். இந்த மனிதனுடைய வார்த்தைகளைச் செவி மடுப் பேன், ஏனெனில் அவற்றில் உண்மை இருப் பது போல எனக்குத் தோன்றும். சில நே ரங்களில் அவன் சொன்னவை அதிசயமான தாக இருந்தாலும், நேர்மையாக என் மனத் தில் வைத்து எடைபோட்டேன்.

''நல்ல மனிதனாக இருக்க வேண்டும்,'' என்று ஒரு முறை சொன்னேன்.

''ஓ, உண்மைதான்!'' என்று அவன் ஒப்புக் கொண்டான், ஆனால் அதே கணமே அவனது உதடுகள் கிண்டலாக நெளிந்தன. தனது கண்களைத் தாழ்த்திக்கொண்டு அமைதியாகச் சொன்னான்:

''ஆனால் நல்ல மனிதன் என்று நீ எதைச் சொல்கிறாய்? உன்னுடைய நற்குணம் அல்லது நேர்மை இவற்றிலிருந்து அவர்கள் ஆதாயம் அடையாத வரை எந்த வழியிலும் மனிதர்கள் கவலைப்படுவது இல்லை என் பதாகவே எனக்குத் தோன்றுகிறது; அவர் களிடம் அக்கறை காட்டு, ஒவ்வொரு இதயத் திற்கும் நீ அன்பாக இரு, மக்களிடம் ஓரளவு ஈடுபாடு காட்டு, அவர்களுக்கு ஆறுதல் அளி... சில நேரம் உனக்குக் கூட சாத்தியமாகலாம்,



படிப்பகம்

www.padippakam.com

லாபம் தருவதைக் காணலாம்! உண்மையில், நீ நல்ல மனிதனாக இருந்தால் கண்ணாடி முன் உட்கார்ந்து உன் மூஞ்சியைப் பார்த்துக் கொள் — அது மகிழ்ச்சியான தொழில் என்பதில் எந்த விவாதமும் இல்லை — ஆனால் நீ அன்பானா முனிவனா என்று வேறு யாரும் கவலைப்படுவது இல்லை. ஒரே ஒரு விஷயம்: திறந்த மனத்துடன் மக்களை நீ அன்பாக நடத்த வேண்டும்!.. அதைத்தான் அவர்கள் எல்லாரும் விரும்புகிறார்கள்!..''

ஆட்களை நிதானிப்பதில் நான் மிகவும் கவனமாக இருக்கிறேன். இந்தப் புரிந்து கொள்ள முடியாத, குழப்பமான, நோகச் செய்கின்ற வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் எனக்கு உதவி செய்ய வேண்டும், உதவி செய்கிறான் என்றே எனக்குத் தோன்றுகிறது. மேலும் எல்லாரிடமும் நான் வினவுகின்ற, எனது சொந்த அலைக்கழிக்கின்ற நிரந்தரமான கேள்வி இதுதான்:

''மனிதனின் ஆன்மா என்பது என்ன?''

சில ஆன்மாக்கள் செம்புப் பந்துகள் போலச் செய்யப்பட்டதாக எனக்குத் தோன்றுகிறது: அலைக்க முடியாதவாறு மார்புக்குள் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றின் நோக்கில் மட்டுமே அவற்றைத் தொடக்கூடிய எல்லாவற்றையும் அவை பிரதிபலிக்கும் — பிரதிபலிப்பு உருச்சிதைந்தது, அருவருப்பானது, மந்தமானது. மற்ற ஆனமாக்கள் தட்டையானவை, கண்ணாடியைப் போல; அவை அங்கே இல்லாதவை



படிப்பகம்

www.padippakam.com

போன்றனதான்.

எனினும், மனித ஆன்மாக்களில் பெரும் பாலானவை மொத்தத்தில் மேகங்களைப் போல வடிவம் இல்லாதன போன்றும் பல மந்தமான வர்ணங்களைக் கொண்ட மணிக்கல் போன்றும் எனக்குக் காணப்படுகிறது: அவற்றைத் தொடும் ஒரு பொருளின் வர்ணத்திற்கேற்ப இந்த ஆன் மாக்கள் எப்போதும் நிறம் மாறுகின்றன.

வணங்கத்தக்க ஓசிப்பின் ஆன்மா என்ன வகையானது என்பது எனக்குத் தெரியாது, அதைத் தெரிந்து கொள்ளவும் முடியாது —மூளைக்கு எட்டாதது.

நதிக்கு அப்பால் மலையை ஒட்டி, போலந்து கத்தோலிக்க சர்ச்சில் இருக்கும் எனக்கு விருப் பமான ஆர்கான் இசைக்கருவியின் வெண்ணிறக் குழல்களைப் போல வானத்தை நோக்கி உயர்ந் திருந்த மணிக்கூண்டின் எல்லா மணிகளும் முழங்கிக்கொண்டிருக்கும் நகரத்தை நோக்கிய வாறு இவை எல்லாவற்றையும் நினைத்துக் கொண்டிருப்பேன். சர்ச் கோபுரங்களில் இருக்கும் சிலுவைகள் சாம்பல் நிற வானத்தில் சிறைப் பட்ட ஒளிமங்கிய நட்சத்திரங்களைப் போல இருக் கும், காற்றால் சிதைக்கப்பட்ட சாம்பல் நிற மேகங்களுக்கு மேலாகத் தூய்மையான சொர்க் கத்தை எட்ட ஏங்கியவாறு அவை மினுமினுத் துக் கொண்டும் நடுங்கிக் கொண்டும் இருக் கும்; ஆனால் மேகங்கள் தொடர்ந்து அலைந்து கொண்டிருக்கும், அவற்றின் நிழல்கள் நக ரின் பிரகாசமான வண்ணங்களைத் துடைத்



படிப்பகம்

துச்செல்லும். மேகங்களுக்கு இடையே தெரியும் வெளிறிய நீலநிற இடைவெளிகளின் ஊடாக சூரியக் கதிர்கள் நகரத்திற்கு மேலாகச் சிதறிய ஒவ்வொரு முறையும் மேகங்கள் சூரியனை மூடுவதற்குச் சுழன்று ஓடிவரும், அவற்றின் ஈரமான நிழல்கள் வளர்ந்து எல்லா வண்ணங்களும் மங்கிப்போக, சிறிதளவு மகிழ்ச்சிக் காக எங்களது பசியைத் தீவிரமாக்கும்.

நகரத்தின் வீடுகள் அழுக்கான பனிக் குவியல்கள் போலத் தோன்றும், அவற்றிற்குக் கீழாகத் தரை கருப்பாகவும் வெறுமையாகவும் கிடக்கும், தோட்டத்து மரங்கள் மண் குவியல்கள் போலத் தோன்றும்; சாம்பல் நிறச் சுவர்களில் இருக்கும் சன்னல்களின் மங்கிய ஒளி குளிர் காலத்தின் நினைவுப் பொருளாக இருக்கும், எல்லாவற்றிற்கு மேலாக வடதிசை வசந்தத்தின் துயரம் மென்மையாகத் தழுவும்.

அகன்ற, அருவருப்பான, இரகண மூளியைப் போன்ற உதடுகளுடன் கூடிய, வெளுத்த தலைமுடி வாய்க்கும் மீஷூக் ஒரு பாட்டுப் பாட முயல்வான்:

> ''அவனிடம் அவள் வந்ததோ காலையிலே,
> அவன் செத்துப் போனதோ முன்னிரவிலே...''

''எய், நாய்க்குப் பிறந்தவனே!'' என்று போர்வீரன் அவன் மீது பாய்வான். ''இன்னைக்கு என்ன நாள் என்பதை மறந்துட்டியா?''

போயெவும் கோபமுற்று தனது முட்டியை

www.padippakam.com

மீஷூக்கை நோக்கி அலைத்து விட்டுச் சீறு வான்:

"நாயோட ஆத்மா!"

"இங்கே உள்ள மக்கள் காட்டு மக்கள், கெட்டியான நார் உடுத்தி வாழ்ந்தவர்கள்," என்று ஒசிப் மரப்பலகைத் தடுப்பின் மீது உட்கார்ந்து, சரிவைக் கணக்கிடத் தனது கண்ணைச் சுருக்கியவாறு புதீரிடம் சொல்வான். "அந்த உத்தரத்தின் முனையை ஒன்னு அல்லது இரண்டு அங்குலம் இடப்புறமாக உயர்த்து—அவ்வளவுதான்!.. அல்லது இன்னும் எளிமையாகச் சொன்னால்—காட்டு மிராண்டிகள்! ஒரு முறை, தனது பங்கைச் சுற்றிப் பார்க்க பிஷப் எங்களோட பகுதிக்கு வந்தார். அவரிடம் ஓடி, சுற்றி நின்று, முழங்காலிட்டு விழுந்து தங்களது குறைகளை எல்லாம் சொன்னார்கள்: பங்குத் தந்தையே, ஓநாய்களிடமிருந்து எங்களைக் காப்பாத்துங்கள், அவை மீது சாபமிடுங்கள்! அவை எங்களோட வாழ்க்கையைச் சின்னாபின்னப் படுத்துது! ஐயோ, அவர்களை எப்படித் திட்டினார்... 'புறச் சமயிகளே, உங்களை வைதீகமான கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறீர்களா? சமயக்கருத்துக்கு முரண்பட்டால் எல்லாரும் கடுமையாத் தண்டிக்கப்படுவீர்கள்,' என்றார். அவர் மிகுந்த கோபமாக இருந்தார். அவர்களது மூஞ்சிகளில் காரித் துப்பவும் செய்தார். இப்படிப்பட்ட வயதானவர், அன்பானவர், கண்களில் கண்ணீர்..."

மரப்பலகைத் தடுப்புகளிலிருந்து நீரோட்ட





படிப்பகம்

திசையில் நாற்பது கஜத்திற்கு அப்பால், மாலுமி களும் ஆண்டிகளும் ஒரு பெரிய தோணி யைச் சுற்றிப் பனிக்கட்டியை உடைத்துக் கொண் டிருப்பார்கள்; கடப்பாரைகள் நறநறக்கும், சரி வான படகுக் கம்புகள் காற்றில் அலையும், இன்னும் உடைபடாத பரப்புக்குக் கீழாக உடைந்த பனிக்கட்டித் துண்டுகள் நகரும், நீர் பெருகிக்கொண்டு வரும், மணற்பரப்பான கரையிலிருந்து நீரோடைகளின் முணுமுணுப்பு வரும். நாங்கள் வேலை பார்த்துக்கொண்டி ருக்கும் இடத்தில், இழைப்புளிகள் கிறீச்சிடும், ரம்பம் சீட்டியடிக்கும், மஞ்சள்நிற, வழவழப் பான இழைக்கப்பட்ட பலகைகளில் இரும்பு நாதாங்கிகளை அடித்த கோடரிகளின் ஒலிகள் கேட்கும். எல்லா ஒலிகளுமே மணிகளின் முழக்கத்தினால் வியாபித்திருக்கும், அது ஆன் மாவைத் தொல்லைப்படுத்தும். இந்த நாள் தனது எல்லாவித அலுவல்களோடும் ஏற்கெ னவே பணியின்றி வெறுமையாகவும் பிச்சைக் காரத் தனமாகவும் இருந்த பூமிக்குத் திரும்ப வசந்தத்தை அழைக்கும் பிரார்த்தனையில் சேர்ந்து கொண்டது போல இருக்கும்...

யாரோ சளிப்பிடித்த குரலில் சப்தமிடு வான்:

''ஜெர்மானியனைக் கூப்பிடு! அவர்கள் போ தாது...''

கரையிலிருந்து பதில் வரும்:

''எங்கே அவன்?''

''சாராயக்கடையில், போய்ப் பார்...''



படிப்பகம்

www.padippakam.com

ஈரமான காற்றிலே குரல்கள் அழுத்தமாக விழுந்து அகன்ற நதிக்கு மேலாக துயரத் தோடு மிதந்து கொண்டிருக்கும்.

ஆட்கள் ஆர்வத்தோடு அவசரமாக வேலை செய்து கொண்டிருப்பார்கள், ஆனால் மோசமாக, அக்கறையின்றி; அவர்கள் அனைவருமே நகரத்திற்குப் போய் நீராவிக்குளியல் எடுக்கவும் சர்ச்சுக்குப் போகவும் விரும்புவார்கள். குறிப்பாகக் கவலைப்பட்டவன் சஷோக், தன் சகோதரனாகிய மீஷூக் போல வெளிறிப் போய் இருப்பான், ஆனால் சுருள் முடியும் சுறுசுறுப்பும் கொண்டவன். அவ்வப்பொழுது ஆற்றுப் பெருக்கைப் பார்த்து தன் சகோதரனிடம் அமைதியாகச் சொல்வான்:

"நீ என்ன நினைக்கிறாய், அது கிரீச்சிடுகிறதா?"

அந்த இரவு பனியில் 'அசைவு' இருந்தது. காலையிலிருந்து ஆற்றங்கரை போலீஸ் குதிரைகளை ஆற்றுக்கு அநுமதிக்கவில்லை, எப்போதாவது பாதசாரிகள் குறுக்குப் பாலத்தின் வழியாக சில மணிகளைப் போல ஒட்டிக் கொண்டு செல்வார்கள், கரையிலிருந்து கரைக்கு விரைவார்கள். அவர்களது நிறை தாங்காமல் பலகைகள் நதியில் அமிழ்ந்து ஒலியெழுப்பியதைக் கேட்க முடியும்.

"கொஞ்சம் கிரீச்சிடுகிறது," என்று வெண்ணிற இமைகளை இமைத்தபடி பதிலளிப்பான் மீஷூக்.

நதிக்கு மேலாகப் பார்க்கையில் தனது உள்

www.padippakam.com

ளங்கையால் கண்ணுக்கு நிழலிட்டுக் கொண்டு ஓசிப் அவனைக் குறுக்கிடுவான்:

"உன் தலையில் உள்ள மரச்சீவல் காய்ந்து கொண்டும் கிறீச்சிட்டுக் கொண்டும் இருக்கிறது! வேலையைப் பார், சூனியக்காரியின் மகனே! கண்காணியே, அவர்களைத் துரத்து! எதற்காக உன் புத்தகத்திற்குள் மூக்கை நுழைத்துக் கொண்டிருக்கிறாய்?"

ஒன்று அல்லது இரண்டு மணி நேர வேலையே செய்ய வேண்டியிருந்தது. மரப்பலகைத் தடுப்பின் மேற்பரப்பு முழுவதும் மஞ்சள் நிறப் பலகைகளினால் ஏற்கெனவே மூடப்பட்டிருந்து, எஞ்சியதெல்லாம் கனத்த இரும்பினால் தைக்க வேண்டியதுதான். அவற்றை வாங்க போயெவும் சனியாவினும் ஆழ்வடுக்கள் வெட்டியிருந்தார்கள். ஆனால் அவர்கள் தவறாகக் கணக்கிட்டு விட்டார்கள். ஆழ்வடுக்கள் மிகவும் குறுகலாக இருந்தன. இரும்புக் கம்பிகள் மரத்திற்குள்ளாகப் பொருந்தவில்லை.

"குருட்டு மொர்த்வினியனே," தனது தொப்பியில் கையைத் தட்டிக் கொண்டு ஓசிப் கத்தினான்: "அந்த வேலையை நன்றாகவா செய்திருக்கிறாயா?"

திடீரென்று, எங்கோ கரையிலிருந்து மகிழ்ச்சிமிக்க குரல் ஒலித்தது:

"அது நகருது... அதோ அங்கே!"

இந்தச் சத்தத்தோடு சேர்ந்து கொள்வது போல, ஓர் அமைதியான கீறிச்சிடும் ஒலி நதிக்கு மேலாக மிதந்தது; பைன் மரக்கிளைகள் செப்பனிடுபவர்களின் பற்றி இழுக்கின்ற கரங்



படிப்பகம்

www.padippakam.com

கள் தங்களுக்கு மேலாக எதையோ பிடிக்க முயற்சி செய்வது போல துடித்துக் கொண்டிருந்தன, மாலுமிகளும் ஆண்டிகளும் தங்களுடைய தோணி தள்ளும் கோல்களை அலைத்துக்கொண்டு தோணிகளின் தளத்திற்கு மேலாகக் கயிற்று ஏணிகளில் இரைச்சலுடன் தொற்றி ஏறினார்கள்.

உண்மையில் நதியில் எத்தனை ஆட்கள் இருந்தார்கள் என்பதைப் பார்க்க விநோதமாக இருந்தது. பனிக்கட்டிக்குக் கீழிருந்து எழுவது போல அவர்கள் காணப்பட்டார்கள், குண்டு வெடிப்பினால் பீதியுற்ற காக்கைகளைப் போல இப்போது அவர்கள் முன்னும் பின்னுமாக அலைந்தார்கள், பலகைகளையும் படகுக் கம்பங்களையும் தூக்கிக் கொண்டு இங்குமங்கும் ஓடினார்கள். கீழே போடுவதும் பிறகு திரும்ப அவற்றை எடுப்பதுமாக இருந்தார்கள்.

''உங்களுடைய கருவிகளைச் சேரியுங்கள்!'' என்று கத்தினான் ஓசிப். ''விரைவாக, உங்களைத்தான்... கரையேறுங்கள்.''

''கிறிஸ்துவினுடைய புனிதப் புத்துயிர்ப்பு உங்களுக்கு இது தான்!'' என்று வருத்தத்தோடு சொன்னான் சஷோக்.

நதி அசையாதது போலவே காணப்பட்டது. ஆனால் நகரந்தான் திடீரென்று நடுக்குற்றது அலைந்தது, கீழாக இருந்த குன்றுடன் சேர்த்து நீரோட்டத்திற்கு எதிராக மெதுவாக நகரத் தொடங்கியது என்று தோன்றியது.எங்களுக்கு முன்னே இருபது மீட்டரில் இருந்த சாம்பல் நிற



படிப்பகம்

www.padippakam.com

மணல் குன்றுகள் நகர்ந்து மெதுவாக மிதக்கத் தொடங்கின.

''ஓடு,'' என்னை ஒரு தள்ளு தள்ளிவிட்டு ஓசிப் கத்தினான். ''எதற்காக வாயைப் பிளந்து நின்று கொண்டிருக்கிறாய்?''

ஓர் அச்ச உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது; கீழே பனி நகர்ந்து கொண்டு இருந்ததை உணர்ந்த என் கால்கள், அவையாகவே பெரும் பாய்ச்சலில் விரிந்து, குளிர்காலப் புயற் காற்றால் முற்றிலும் முரிந்து போன குருத்து களுக்கு மத்தியில் எனது உடம்பை மணலுக் குக் கொண்டு சென்றன. அங்கே ஏற்கெனவே போயெவ், போர்வீரன், புதீரின், மற்றும் இரு தியாத்லவ்களும் விகாரமாக உட்கார்ந்திருந்தார் கள். எனக்கு இணையாக மொர்த்வினியன் கோ பமாகத் திட்டிக்கொண்டு ஓடி வந்தான். எங் களுக்குப் பின்னே வந்து கொண்டிருந்த ஓசிப் சத்தம் போட்டான்:

''முணுமுணுக்காதே, கூட்டாளிகளே...''

''ஆனா, ஓசிப் மாமா...''

''உலகம் முடிவுக்கு வந்துவிடவில்லை.''

''இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு நாம் இங்கே மாட்டிக்கொண்டு விட்டோம்...''

''தெரிந்து என்ன செய்வது.''

''ஈஸ்டர் தினமா?''

''நீ இல்லாமலேயே இந்த ஆண்டு அவர் கள் ஈஸ்டர் கொண்டாடுவாங்க...''

மணலில் உட்கார்ந்திருந்த போர்வீரன் தனது சுங்கானைப் பற்ற வைத்துக் கொண்டு முறுமுறுத்தான்:



படிப்பகம்

‘‘பீதியடைஞ்சிட்டீங்களா... கரையிலிருந்து முப்பது மீட்டருக்கும் குறைவு, உங்க உயிர் அதைச் சார்ந்தது போல நீங்க எல்லாரும் துள்ளிப் பாய்ந்தீர்கள்...’’

‘‘முதலில் ஓடிவந்தது நீதான்,’’ என்றான் மொகேய்.

ஆனால் போர்வீரன் தொடர்ந்தான்:

‘‘எதற்காக அப்படிப் பயந்தீர்கள்? ஏசு கிறிஸ்து கூட சாக வேண்டி இருந்தது...’’

‘‘எல்லாம் ரொம்பச் சரிதான், ஆனால் அதற்குப் பிறகு அவர் திரும்பவும் எழுந்து விட்டார்,’’ என்று கடுகடுப்புடன் முணுமுணுத்தான் மொர்த்வினியன், ஆனால் போயெவ் அவனை அடக்கினான்:

‘‘நாயே, உன் வாயை மூடு! இந்த மாதிரி விஷயங்களைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? திரும்பவும் எழுந்துட்டார்! இன்று வெள்ளிக்கிழமை, புத்துயிர்ப்பு ஞாயிற்றுக் கிழமை இல்லை!’’

மேகங்களுக்கு இடையே தெரிந்த நீலநிற வெடிப்பில் மார்ச் மாதச் சூரியன் திடீரென்று ஒளிர்ந்தது, பனிக்கட்டி மின்னி எங்கள் மீது பரிகாசம் செய்து சிரித்தது. தனது உள்ளங்கையால் புருவத்திற்குத் திரையிட்டுக் கொண்டு ஆள் அரவமற்ற நதிக்கு மேலாக நோக்கிய ஓசிப் சொன்னான்:

‘‘அது நின்றுவிட்டது... ஆனால் நீண்ட நேரத்திற்கு அன்று...’’

‘‘கொண்டாட்டங்களிலிருந்து நாம் தனிமைப்

www.padippakam.com

பட்டுப் போய் விட்டோம்,'' என்றான் சஷோக் துயரத்துடன்.

மீசையும் தாடியும் அற்ற மொர்த்வினியனின் கருப்பாகவும் உரிக்காத உருளைக்கிழங்கு போல புடைப்பும் நிறைந்த முகம் கோபத்தால் சுருங்கியது, விரைவாக இமைத்த அவன் முணுமுணுத்தான்:

''நாம் இங்கே திக்கில்லாமல் விடப்பட்டு விட்டோம்... ரொட்டியோ பணமோ இல்லை... எல்லாரும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள், நாமோ... காசுத்தெய்வத்தை வழிபட்டுக் கொண்டிருக்கிறோம், நாய்களைப் போல...''

நதியில் வைத்த தனது கண்ணை எடுக்காமலேயே எதையோ சிந்தித்துக் கொண்டிருந்த ஒசிப் இப்போது தொலைவிலிருப்பது போலப் பேசினான்:

''நீங்க காசுத் தெய்வத்தைக் கும்பிடவில்லை, தேவையைக் கும்பிடுறீங்க! இந்தத் தடுப்பாள்களும் மரப்பலகைத் தடுப்புகளும் எதற்காக? பனியிலிருந்து தோணிகளையும் மற்றும் ஏதோ சிலவற்றையும் பாதுகாக்க. பனியோ முட்டாள்தனமானது. அது கப்பல் வரிசையை நெருக்கி வந்து எல்லாவற்றையும் நசுக்கும், சாமான்கள் போய்விடும்...''

''ஆனால் அதனால் நமக்கு என்ன?.. அவை நம்முடையவை அல்ல, இல்லையா?''

''முட்டாளுடன் விவாதம் செய்து கொண்டு...''

''அவை முன்னமேயே மராமத்து செய்யப்பட்டிருக்க வேண்டும்...''



படிப்பகம்

www.padippakam.com

போர்வீரன் தனது முகத்தைப் பயங்கர மாகச் சுருக்கிக்கொண்டு சப்தம் போட்டான்:

“வாயை மூடு, மொர்த்வினியனே!”

“அது நின்னு போச்சு,” திரும்பச் சொன் னான் ஓசிப். “உஸ்...”

கப்பல் வரிசையில் மாலுமிகள் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள், நதியிலிருந்து வன்மமுள்ள குளிர்ந்த காற்று, எச்சரிக்கை யான மௌனத்துடன் வந்தது. பனிக்கட்டிக்கு மேலாகப் பரத்திப் போடப்பட்ட பைன் மரக் கட்டைகளின் முறை மாற்றப்பட்டிருந்தது. எல் லாமே மாறியது போலத் தோன்றியது, எதை யோ எதிர்பார்ப்பது போலக் கிடந்தன.

இளைஞர்களில் ஒருவன் அமைதியாகவும் உணர்ச்சி வசப்பட்டும் கேட்டான்:

“ஓசிப் மாமா, நாம என்ன செய்யப் போ றோம்?”

“நீ என்ன சொன்னாய்?” கனவு காண் பவனைப் போலக் கேட்டான் ஓசிப்.

“நாம இங்கேயே உட்காரப் போகிறோமா?”

போயெவ் தனது மூக்கின் வழியாக கேலி யாகப் பேசத் தொடங்கினான்:

“தனது புனித விழாவிலிருந்து பாவிகளா கிய உங்களைத் தள்ளி வைப்பதையே ஆண் டவர் பொருத்தமாகக் கருதுறார், என்ன?”

போர்வீரன் தனது தோழனை ஆதரித்துப் பேசி, நதியை நோக்கிச் சுங்கானுடன் தனது கையை நீட்டி, கேலிச் சிரிப்புடன் முணுமுணுத் தான்:

“நகரத்துக்குப் போக விரும்புறீங்களா?



படிப்பகம்

www.padippakam.com

போங்க! பனிக்கட்டியும் கூடவே வரும். உங்களுக்கு அதிருஷ்டம் இருந்தால் கீழே மூழ்குவீங்க, இல்லையென்றால் போலீஸ் உங்களைப் பிடித்து சிறையில் அருமையான விடுமுறை கொடுக்கும்... அப்படித்தான்!..''

''நீ சொல்வது மிகவும் சரி,'' என்றான் மொகேய்.

மேகத்திற்குப் பின்னே சூரியன் ஒளிந்து கொண்டது, நதி இருண்டது, நகரம் மிகவும் தெளிவாகத் தெரிந்தது—இளைஞர்கள் கோபத்துடன், வருத்துகின்ற கண்களுடன் அதை நோக்கி விட்டு மௌனமாகிப் போனார்கள்.

சுற்றிலும் இருக்கக் கூடிய ஆட்கள் எல்லாருமே வெவ்வேறு திசைகளில் இழுக்கிறார்கள் என்பதையும் மொத்தமாக எல்லாரையும் ஒன்று சேர்க்கக் கூடிய வலிமையான சக்தி, ஒருமித்த நோக்கம் எதுவும் இல்லை என்பதையும் பார்க்கும் போது ஒருவர் எப்போதும் சங்கடப்படுவது போல எனது உள்ளம் சோர்வும் களைப்பும் அடைந்தது. அவர்களை விட்டு விலகி தனியாகவே பனிக்கட்டிக்கு மேலாகச் செல்ல விரும்பினேன்.

அப்போதுதான் விழித்து எழுந்தவனைப் போல ஓசிப் எழுந்து நின்று, தனது தொப்பியைக் கழற்றி நகரம் இருந்த திசை நோக்கிச் சிலுவை வைத்துக் கொண்டு, மிகவும் எளிமையாக, அமைதியாக, அதிகாரத்துடன் சொன்னான்:

''வாங்க இளைஞர்களே, ஆண்டவர் நம்மோடு இருப்பாராக...''



படிப்பகம்

www.padippakam.com

“நகரத்துக்கா?” தாவியவாறு சத்தம் போட்டான் சஷோக்.

அசையாதவாறு போர்வீரன் உறுதியோடு அறிவித்தான்:

“நாம் மூழ்கிப் போவோம்!”

“பிறகு — தங்கிவிடு.”

எங்கள் எல்லாரையும் பார்த்துக் கொண்டு ஓசிப் சத்தம் போட்டான்:

“நகருங்க, இளைஞர்களே, சீக்கிரமாக, இப்பவே!”

நாங்கள் எல்லாரும் எழுந்து நெருக்கிக் கொண்டு நின்றோம். கருவிகளைக் கூடையில் அடுக்கிக் கொண்டிருந்த போயெவ் தொன தொணக்கத் தொடங்கினான்:

“ ‘போ’ன்னு சொல்றான், எப்படியும் போகட்டும்! உத்தரவு கொடுக்கிற அவனே பொறுப்பை எடுத்துக் கொள்ளட்டுமே...”

ஓசிப் இளமையும் வலிமையும் பெற்றது போலக் காணப்பட்டான்: ஒருவித நரித்தனமான, உவப்புக் கொள்ளச் செய்யக்கூடிய முக பாவம் அவனது இளஞ்சிவப்பு நிற முகத்திலிருந்தே மறைந்தது, கண்கள் கருப்பாகவும், கண்டிப்புமிக்கவையாகவும் தோன்றின; சோம்பேறித்தனமான, விகாரமான நடை கூட மறைந்துவிட்டது—அவனது நடைப் பாணி உறுதி மிக்கதாக மாறியிருந்தது.

“ஒவ்வொருவரும் ஒரு பலகையை எடுத்துக் கொண்டு தன் உடம்புக்குக் குறுக்காக வைத்துக் கொள்ளட்டும்—ஆண்டவன் தடுப்பானாக—யாரே



படிப்பகம்

www.padippakam.com

னும் வழுக்கி விழுந்தால் பலகையின் முனை கள் பனிக்கட்டியில் விழுந்து ஆதரவு தரும்! விரி சல்களைத் தாண்டவும் உதவும்... கயிறு இருக் கிறதா? மொர்த்வினியனே, அளவுகோலைத் தா... தயாரா? நல்லது, நான் முதலில் போ கிறேன், எனக்குப் பின்னால்—யார் கனமான ஆள்? போர்வீரனே, நீ தான்! பிறகு மொ கேய், மொர்த்வினியன், போயெவ், மீஷூக், சஷோக், மக்சீமிச் மிகவும் மெலிந்தவன், அவன் கடைசியாக வரலாம்... தொப்பிகளைக் கழற்றி, புனிதக் கன்னி மரியாவை வேண்டிக் கொள்ளுங்கள்! இதோ அருமையான சூரிய எசமானன் நம்மைச் சந்திக்க வெளிவந்திருக் கிறான்...''

வாரப்படாத, சாம்பல், பொன்னிறங் கொண்ட தலைகள் மூடப்படாதிருந்தன, மெல் லிய, வெண்ணிற மேகத்தின் ஊடாக அவை கள் மீது பிரகாசித்து விட்டு, பொய்யான நம் பிக்கைகளை எழுப்ப விரும்பவில்லை என்பது போலச் சூரியன் திரும்பவும் ஒளிந்து கொண் டது.

''வாங்க இப்போது!'' புதிய, வறண்ட குர லில் ஓசிப் சொன்னான். ''ஆண்டவன் நம் மோடு இருப்பாராக! என் பாதங்களைக் கவனி யுங்கள், பின்பக்கம் ஒருவர் மீது ஒருவர் நெருக்க வேண்டாம், இரண்டு மீட்டர் அல்லது மேலும் இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொள்வது நல்லது! வாங்க, குழந்தைகளே!''

தனது தொப்பியைச் சட்டைக்குள்ளாகத்



படிப்பகம்

www.padippakam.com

திணித்துக் கொண்டு, அளவுகோலை ஒரு கையில் பிடித்தவாறு, ஆர்வத்தோடு, சீராட்டுவது போலக் கால்களைத் தேய்த்துக்கொண்டு, ஓசிப் பனிக்கட்டி மேல் எச்சரிக்கையோடு ஊர்ந்து சென்றான். அதே நேரத்தில் திடீரென்று எங்களுக்குப் பின்னே கரையில் புகலற்ற ஒரு குரல் ஒலித்தது:

"எங்கே போவதாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள், முட்டாள்களே..."

"தொடர்ந்து நடவுங்கள், பின்னே பார்க்க வேண்டாம்!" என்று எங்களுடைய தலைவன் மணி போன்ற குரலில் கட்டளையிட்டான்.

"திரும்பி வாங்க, சாத்தான்களே..."

"வாங்க, இளைஞர்களே, ஆண்டவனை நினைத்துக் கொண்டு! தனது விழாவிற்கு முன்னால் நாம் மேல்லோகம் போக வேண்டாம்..."

போலீஸ்காரனுடைய விசில் கிறீச்சிட, போர் வீரனோ உரக்க முணுமுணுத்தான்:

"ஐயோ, வீரர்கள், ஆத்தா... என்ன காரியம் செய்திருக்கிறார்கள்! இந்த நேரத்தில் நாமே நம்மை எதற்குள்ளாகவோ நுழைத்துக் கொண்டோம்! இப்போது மறுபுறத்தில் அவர்கள் போலீசை எச்சரிக்கை செய்வார்கள்... நாம் மூழ்கிப் போகலேனா, சிறைக்கூடங்களில் இருக்கக்கூடிய மூட்டைப் பூச்சிகளுக்கு நாம் உணவாவோம்... நான் பொறுப்பை ஏற்க மாட்டேன்..."

ஒரு நூலில் போவது போல ஓசிப்புடைய



படிப்பகம்

www.padippakam.com

ஊக்கமுள்ள குரல் ஆட்களை நெடுகிலும் செல்ல வைத்தது:

"காலடியை கவனிங்க இப்போது! பார்வையைக் கீழே செலுத்துங்கள்!.."

நீரோட்டத்திற்கு எதிராக நாங்கள் மூலை விட்டத்தில் நடந்து கொண்டிருந்தோம், நான் கடைசியாக இருந்ததால், சின்னஞ் சிறிய, தவறாத ஓசிப், முயலினுடையதைப் போன்ற தனது வெண்ணிறத் தலையுடன், எவ்வளவு லாவகமாக, பாதங்களை அரிதாக உயர்த்திய படி பனிக்கட்டிக்கு மேலாகத் தள்ளாடினான் என்பதை என்னால் தெளிவாகப் பார்க்க முடிந்தது. அவனுக்குப் பின்னே, ஒரே வரிசையில், கண்ணுக்குத் தெரியாத நூலில் கட்டுண்டது போல, கருத்த ஆறு உருவங்கள் நிச்சயமில்லாத படி இழுத்துக் கொண்டு சென்றன, சில நேரங்களில் அவர்களது நிழல்கள் அவர்களுக்கு அருகாகப் பாதங்களில் விழுந்து, பனிக்கட்டிக்கு மேலாக நீண்டு போயின. ஆட்கள் மலையிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தது போல எல்லாரது தலைகளும் கீழ்நோக்கி இருந்தன, தவறாக அடி எடுத்து வைத்தால் கீழே விழக்கூடும் என்று பயந்தார்கள்.

பின்னுக்கிருந்து ஆட்கள் இன்னும் உரக்கக் கத்தினார்கள்—பெரும் கூட்டமானது சேர்ந்து விட்டது போல; வார்த்தைகளைப் புரிந்து கொள்ள முடியாது போயிற்று, ஆனால் மகிழ்ச்சியற்ற கர்ஜனையை இன்னமும் தெளிவாகக் கேட்க முடிந்தது.

இந்த எச்சரிக்கையான முன்னேற்றம் எனக்



படிப்பகம்

www.padippakam.com

குச் சலிப்பூட்டுவதாக, எந்திரமயமான பயிற்சியாக மாறியது; நான் வேகமாக நடப்பது வழக்கம், இப்போதோ தூக்கத்திற்கும் நடைக்கும் இடைப்பட்ட நிலையில் நான் மூழ்கிக் கொண்டிருப்பதாக உணர முடிந்தது, அந்த நேரத்தில் மனம் வெறுமையாகின்றது, நம்மைப் பற்றி நினைப்பதை நிறுத்தி விடுகிறோம். அப்போது தனக்கு வெளியே ஒருவர் இருப்பதாகத் தெரிகிறது, அதே நேரம் ஒவ்வொன்றையும் அசாதாரணமான தெளிவுடனும், வேறுபட்ட நிலையுடனும் பார்க்கவும் கேட்கவும் முடிகிறது. எனது பாதங்களுக்குக் கீழாக சாம்பல் நிறமான ஈயம் போன்ற பனிக் கட்டி கிடந்தது, எல்லாமே நீரினால் உருகி அடித்துச் செல்லப்பட்டிருந்தது, அதனது சிதறிய பிரகாசம் கண்களைக் குருடாக்கியது. இங்கு மங்குமாகப் பனிக்கட்டி உடைந்து குவியலாக உயர்ந்து, நதியின் ஓட்டத்தால் சிறிய துண்டுகளாக அடித்துச் செல்லப்பட்டு மாக்கல் போல நுண் துளைகளுடனும் உடைந்த கண்ணாடி போலக் கூர்மையுடனும் குவிந்து கிடந்தது. நீல நிற வெடிப்புகள், சிரித்தபடி எங்களது பாதங்களைக் கவ்வின. எங்களது காலணிகளின் அகன்ற அடி அட்டைகள் மேலும் கீழும் அடித்தன. போயெவ் மற்றும் போர்வீரனுடைய குரல்கள் முணுமுணுத்துக் கொண்டே சென்றன— ஒரே உதட்டில் வைக்கப்பட்ட இரட்டைக் குழல்களைப் போல இருந்தன.

“நான் பொறுப்பை ஏற்கமாட்டேன்...”

“நானுங்கூடத்தான்...”



படிப்பகம்

''முடிவுகளை மேற்கொள்ள ஒரு மனித னுக்கு உரிமை உண்டு, ஆனால் அடுத்தவன் ஆயிரம் மடங்கு புத்திசாலியாக இருக்க லாம்...''

''இங்கே மக்கள் மூளையுடன் வாழ்கிறார் கள் என்று நினைக்கிறாயா? இல்லை, தங்களு டைய குரல்களால்தான் வசிக்கிறார்கள்...''

தனது ஆட்டுத்தோல் ஜாக்கெட்டின் ஓரத் தைத் தனது இடைவாருக்குள்ளாக ஓசிப் இழுத் துச் செருகிக்கொண்டான்; ராணுவத் துணியால் ஆன சாம்பல்நிறக் காற்சட்டையில் அவனது கால்கள், சுருள்கம்பி போல சுலபமாகவும் லா வகமாகவும் நடைபோட்டன. ஓசிப்புக்கு மட்டு மே தெரிவது போல யாரோ ஒருவன் அவனுக்கு முன்னால் சுற்றிச் சுழன்ற படி நடந்தான், அவனது வழியில் வந்து நின்று, குறுக்கு வழியில் நேர் பாதை அமைக்க முடியாத படி அவனைத் தடுப்பது போல. அவனுக்கு எதி ராகப் போராடி அவனை வழிக்குக் கொண்டு வர, அவனை முந்திச் செல்ல ஓசிப் முயன் றான், ஒரு சமயம் வலப்புறமாகவும் மறு சம யம் இடப்புறமாகவும் மறைத்தான், சில சம யங்களில் கடந்து வந்த பாதைக்குப் பின்புற மாக வந்தான், ஆனால் இன்னமும் முன் னோக்கி நடனமாடிக் கொண்டே வந்து, பனிக் கட்டிக்கு மேலாக வளைவாகவும் அரைவட்ட மாகவும் வந்தான். அவனது குரல் இடை விடாமல் பாட்டுப் போல ஒலித்தது, மணியோ சையுடன் அது எப்படிக் கலந்து ஒலித்தது

www.padippakam.com

என்பதைக் கேட்க மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது...

சுமார் எண்ணூறு கஜ அகலமுள்ள பனிக் கட்டிப் பாறையை நாங்கள் நெருங்கிக் கொண்டிருந்த போது, நதியின் மேற்பகுதியிலிருந்து திடீரென்று அச்சுறுத்தும் இரைச்சலும் கிசு கிசுப்பும் வந்தது. அதே கணம் எனக்குக் கீழாகப் பனிக்கட்டி விலகி மிதந்தது. நான் தள்ளாடினேன், கால்களில் நிற்க முடியாது ஒரு கணுக்கால் கீழே போக நிதானம் தவறியது. உடனடியாக, நான் நதியின் மேற்பகுதியைப் பார்த்ததுமே, பயம் என் தொண்டையைக் கவ்வியது, என் குரல் கம்மியது, பார்வை இருண்டது—பனிக்கட்டியின் சாம்பல் நிறமான மேற்புறம் குவியலாக வளைந்து கொண்டிருந்தது, குறுகிய முனைகள் வழவழப்பான மேற்பரப்பிலிருந்து நீட்டிக் கொண்டன, காற்றின் ஊடாக ஒரு விநோதமான நொறுங்குகின்ற ஓசை கேட்டது – உடைந்த கண்ணாடிக்கு மேலாக யாரோ கனமான காலணிகளுடன் நடந்து கொண்டிருந்தது போல இருந்தது.

அமைதியான சீட்டி ஒலியுடன் நீர் என்னைச் சுற்றிக் கடந்து வேகமாகச் சென்றது, ஒரு மரம் முறிந்தது, உயிருள்ள பொருள் போலக் கிரீச்சிட்டது, ஆட்கள் சத்தம் போட்டுக் கொண்டும் கும்பலாகச் சேர்ந்து கொண்டும் இருந்தார்கள், இந்த அஞ்சத் தக்க ஆரவாரத்தை மீறி, ஓசிப்புடைய குரல் மணி போல ஒலித்தது:



6—1227

படிப்பகம்

www.padippakam.com

‘‘பிரிஞ்சுறுங்க... ஒவ்வொருவரும் தனியாப் போங்க, செல்லக் குழந்தைகளே, துண்டு துண்டாப் போங்க... அது நகருது, நகருது! இப்பவே வேகமா, இளைஞர்களே! அது போகுது...’’

குளவிகளால் துரத்தப்பட்டவனைப் போல முன்னே தாவிக்கொண்டு சென்றான், இரண்டு கஜம் நீளமுள்ள அளவுகோலைத் துப்பாக்கியைப் போலப் பிடித்துக் கொண்டு, யாருடனோ சண்டையிடுவது போல தன்னைச் சுற்றிலுமிருந்த பனிக்கட்டியை இடித்தான். அவனைக் கடந்து நகரம் மிதந்து நடுங்கியது. எனக்கு அடியில் பனிக்கட்டி நொறுநொறுங்கிப் பிளக்கத் தொடங்கியது, சிறு சிறு துண்டுகளாக உடைந்தது, எனது கால்களுக்கு மேலாக நீர் சூழ்ந்தது. நான் தாவிக்குதித்து ஒசிப்பை நோக்கிக் குருட்டுத்தனமாக விரைந்தேன்.

‘‘எங்கே?’’ என்று கத்திய அவன் அளவுகோலால் என்னை அச்சுறுத்தினான். ‘‘நிமிர்ந்து நில், சனியனே!’’

ஒசிப், ஒசிப்பாக இல்லாதது போலக் காணப்பட்டது. அவனது முகம் அதிசயமாக இளமையானதாக மாறியிருந்தது, அறிமுகமான எல்லாமே மறைந்து போய்விட்டது, நீலநிறக் கண்கள் சாம்பல் நிறமாகி இருந்தன, அரை மீட்டர் உயரம் வளர்ந்தது போலக் காணப்பட்டான். புதிய ஆணியைப் போல நேராக, அவனது கால்கள் ஒன்று சேர்ந்து இருந்தன, மேல் நோக்கியவாறு தனது வாயை அகலத் திறந்து சத்தம் போட்டான்:

‘‘சுற்றிலும் கும்பல் போடாதீங்க, ஒன்னாச்



படிப்பகம்

www.padippakam.com

சேராதீங்க. முதுகுத் தோலை உரிச்சுப்புடு வேன்!''

திரும்பவும் என்னை அளவுகோலால் அச் சுறுத்தினான்:

''நீ எங்கே?''

''நாம மூழ்கிறுவோம்,'' என்றேன் அமைதி யாக.

''ஸ்! பேசாமல் இரு...''

ஆனால், என்னைப் பார்த்தவாறு, மிகவும் மென்மையாகவும் மெதுவாகவும் சொன் னான்:

''எந்த முட்டாளாலும் மூழ்கிப் போக முடி யும், ஆனா நீ எப்படியும் வெளியேறு... நீ வெளியேறு!''

திரும்பவும் அவனது குரல் கேட்பதற்கு இனிமையாக ஒலித்தது, கழுத்தைப் பின் னுக்குச் சாய்த்து நெஞ்சை முன்னுக்கு வைத்து உற்சாகமான வார்த்தைகளில் கத்திக் கொண் டிருந்தான்.

பனிக்கட்டி லேசாகப் பிளந்து நொறுங்கி யது, அவசரமில்லாதவாறு அது சிறுசிறு துண்டு களாக நொறுங்கிக் கொண்டிருந்தது. எங்களை நகரைக் கடந்து மெதுவாக அடித்துச் சென்று கொண்டிருந்தது. பூமியில் ஏதோ மிகப்பெரிய சக்தி எழுந்து கரையை நீட்டிக் கொண்டிருந்தது; நாங்கள் இருந்ததற்குக் கீழே அதன் ஒரு பகுதி இன்னமும் உறுதியாக நின்றது, அதே வேளை எங்களுக்கு எதிரே இருந்த பகுதி மெதுவாக நீரின் போக்கை எதிர்த்து மிதந்து கொண்



படிப்பகம்

www.padippakam.com

டிருந்தது, சீக்கிரமே பூமி பகுதி பகுதியாகப் பிரிந்து போகும்.

இந்த அச்சுறுத்துகின்ற, படிப்படியான இயக்கம் பூமியோடு இணைக்கும் உணர்வை எடுத்துக்கொண்டு விட்டது: இதயத்தைக் கிழித்தும் கால்களைப் பலவீனப் படுத்தியும் எல்லாமே கடந்து போய்க் கொண்டிருந்தன. சிவப்பு மேகங்கள் வானத்தில் மெதுவாக மிதந்து சென்றன, அவற்றை உடைந்த பனிக்கட்டியும் பிரதிபலித்தது, என்னை அடைகின்ற முயற்சியில் சிவந்தது போல இருந்தது. வசந்தத்தின் பிறப்புக்காகப் பரந்த பூமி முழுக்க உயிர்பெற்றிருந்தது, அது நீண்டது, ஈரமான, ஒழுங்கற்ற மார்பு உயரத்தில் வளர்ந்தது, அதனது எலும்புகள் உடைந்து கொண்டிருந்தன, பூமியின் கொழுத்த சதையில், அடர்த்தியான, கொதிக்கின்ற குருதி நிறைந்த ரத்தக்குழாய் போல நதி இருந்தது.

இந்த உறுதியான, அமைதியான, மிகப் பெரிய இயக்கத்திற்கு மத்தியில் அற்பமானதும் சோர்வூட்டுவதுமான மனத்தைப் புண் படுத்துகிற உணர்வு எழுந்தது. இந்த உணர்வு எனது மனத்துள் குமுறிக் கொண்டிருந்தது, மனிதனின் துணிச்சலான கனவுக்கு ஊக்கியது: ஒரு கையை நீட்டி, குன்றின் மீதும் நதிக் கரையின் மீதும் அதை வைத்து கட்டளையிடுவது போல இப்படிச் சொல்ல வேண்டும்:

"அப்படியே நில், நான் உன்னிடம் வருகிறவரை நகராதே!.."

மணியொலியின் எதிரொலிப்பு துயரமாகப்



படிப்பகம்

பெருமூச்சு விட்டது, ஆனால் இருபத்துநான்கு மணி நேரத்தில், நள்ளிரவில், மணியோசை யானது மகிழ்ச்சிமிக்க, புத்துயிர்ப்புக்கு ஒலிப்ப தாக மாறும் என்பதை நான் நினைத்துப் பார்த்தேன்.

அந்த மணியோசையைக் கேட்க உயிர்வாழ கூடாதா!..

...எனது கண்ணுக்கு முன்னால் ஏழு கருத்த உருவங்கள் அசைந்தாடின, பனிக்கட் டிக்கு மேலாகக் குதித்தன; காற்றில் துடுப்பைத் தள்ளுவது போல அவர்கள் தூக்கிச்சென்ற பல கைகளை அசைத்தார்கள், அவர்களுக்கு முன் னால் ஒரு சிறிய கிழவன் விலாங்கு மீன் போல நடனமாடினான், ஏசுவின் திருத் தொண்டன் நிகலாய் போல அவன் காணப்பட் டான். அவனது அதிகாரக்குரல் கணநேரங் கூட அமைதியாக இருக்கவில்லை:

“கவனியுங்க!..”

ஆறு கரடுமுரடானதாக மாறியிருந்தது, அதனது உயிருள்ள முதுகெலும்பு வளைந்து, எங்களது பாதங்களுக்குக் கீழாக நடுங்கிக் கொண்டிருந்தது. ‘கூன் குதிரை’ என்ற கதை யில் வரும் திமிங்கிலத்தைப்போல அது இருந் தது. மேலும் அடிக்கடி நதியின் திரவப் பொ ருளானது அதனது பனிக்கட்டி மறைவினின்றும் சேறாக, குளிர்ந்த நீராகச் சிதறியடித்தவாறு வெளிவந்து மனிதர்களது கால்களைப் பேராவ லோடு நக்கியது.

ஓர் ஆழமான வெடிப்புக்கு மேலாக இருந்த குறுகலான கம்புப் பாலத்தை ஆட்கள் கடந்

www.padippakam.com

தார்கள். அமைதியான நதியின் சளசளப்பொலி, அடி காண முடியாத ஆழம் இருக்கும் உணர்வை ஏற்படுத்தி, அந்தக் குளிர்ந்த, நெருக்குகின்ற பொருளுக்குள்ளாக எப்படி முடிவில்லாத படி மெதுவாக உடம்பு மூழ்கும், கண்களை எப்படிக் குருடாக்கும், இதயத்தை மூச்சுத் திணறச் செய்யும் என்ற சிந்தனைகளை ஏற்படுத்தியது. அது மூழ்கிய மனிதர்களின் உருவங்களை, நொறுங்குகின்ற மண்டையோடுகளை, ஒளி வீசுகின்ற கண்ணாடி போன்ற கண்களுடன் கூடிய உப்பிய முகங்களை, விரிந்து கிடந்த விரல்களை, வீங்கிய கைகளை, தோல் ஈரத்தையும் பழைய கந்தல் போல உள்ளங்கைகளில் சுருக்கம் விழுந்ததையும் மனக் கண்ணில் கொண்டுவந்தது...

பனிக்கட்டிக்குக் கீழாக முதலில் விழுந்தான் மொகேய்; மொர்த்வினியனுக்கு முன்பாக அவன் நடந்து கொண்டிருந்தான், எப்போதும் போல அமைதியாக, கிட்டத்தட்ட தனியாக, எங்கள் எல்லாரையும் விட சாந்தமானவன், திடீரென்று கால்களால் இழுக்கப்பட்டவனைப் போன்று அவன் காணாமற் போய் விட்டான். பனிக்கட்டியில் அவனது தலையும் கைகளுமே எஞ்சி நின்றன, அவனது கைகள் பலகையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தன.

‘‘உதவுங்க!’’ என்று கத்தினான் ஒசிப். ‘‘எல்லாரும் கும்பலாகப் போக வேண்டாம், உங்களில் ஒன்று அல்லது இரண்டு பேரு மட்டும் உதவுங்க!’’

ஆனால் செருமிக்கொண்டும் துப்பிக்கொண்



படிப்பகம்

www.padippakam.com

டும் இருந்த மொகேய், மொர்த்வினியனையும் என்னையும் பார்த்துச் சொன்னான்:

"பின்னுக்கு நில்லுங்க, இளைஞர்களே... நான் சமாளித்துக்கொள்வேன்... எல்லாம் சரி யா இருக்கு..."

பனிக்கட்டி மீது கஷ்டப்பட்டுத் தொற்றி ஏறி, தன்னை ஆட்டிக்கொண்டு சொன்னான்:

"அது நாசமாப் போக! உண்மையாவே இங்கே மூழ்க முடியும், தெரியுமா..."

இப்போது, அவனது பற்கள் நடுங்கின, தனது நாக்கால் ஈரமான மீசையைத் துழாவி னான், முன்னைக் காட்டிலும் பெரியவ னாக, அடக்கமான நாய் போலக் காணப்பட் டான்.

ஒரு மாதத்திற்கு முன்னால் ஒரு கோடரி யால் தனது இடது கைப் பெருவிரலை எப்ப டித் துண்டித்துக் கொண்டான் என்பது எனக்கு நொடியில் நினைவுக்கு வந்தது. நீலநிறமாகிக் கொண்டு வந்த நகத்துடன் வெளிறிய விரலின் நுனியை எடுத்துக்கொண்ட அவன், அதைத் தனது புரியாத கருத்த கண்களால் பார்த்துக் கொண்டு, குற்றமுள்ள குரலில் மிகவும் அமைதி யாகச் சொல்லிக் கொண்டிருந்தான்:

"எத்தனை தரம் இந்த அற்பப் பெரு விரலை நான் கெடுத்திருப்பேன், அதற்கு எண்ணிக்கையே இல்லை!.. எப்படியோ அது நிலைகுலைஞ்சு போச்சு, ஒழுங்கா வேலை செய்யலே... இப்ப இதை நான் புதைக்கப் போ றேன்..."



படிப்பகம்

www.padippakam.com

தனது கட்டை விரலின் நுனியைக் கவனமாக மரச் சீவல்களில் சுற்றித் தனது பைக்குள் விட்டான்; பிறகு தான் காயம்பட்ட கைக்குக் கட்டுப் போட்டான்.

மூழ்குவதற்கு அடுத்து வந்தவன் போயெவ் – தனது சொந்த விருப்பத்தின் பேரில் அவன் மூழ்கியது போலக் காணப்பட்டது. உடனடியாக இழுப்புவலி வந்தது போலக் கிரீச்சிட்டான்:

"ஐயோ, மேலே வானம், நான் சாகக் குதிக்கிறேன், சகோதரர்களே, என்னைக் காப்பாத்துங்க..."

தனது பயத்தினால் அவன் நடுநடுங்கியதால், அவனை விடுவிப்பது கஷ்டமாக இருந்தது, அப்போராட்டத்தில் மொர்த்வினியன் அநேகமாகச் செத்துவிட்டான், உண்மையில் ஒரு முறை தண்ணீர் அவனது தலைக்கு மேலாக வந்தது.

"மறு உலகத்தில் ஈஸ்டர் காலை வழிபாட்டுக்காக என்னை ஏற்பாடு செய்துவிட்டது போலத் தோனுது," என்றான், பனிக்கட்டி மீது தொற்றிக்கொண்டு ஏறி, குழப்பத்துடன் பல்லிளித்தான், இன்னும் மெலிவாக மேலும் மெலிந்த கோணங்களுள்ளவனாகக் காணப்பட்டான்.

ஒரு நிமிடத்திற்குப் பிறகு போயெவ் திரும்ப விழுந்து அலறத் தொடங்கினான்.

"அலறாதே, போயெவ், கிழட்டு முட்டாள் ஆடே!" என்று ஓசிப் சத்தம் போட்டு, அளவு கோலால் அவனை அச்சுறுத்தினான். "என்



படிப்பகம்

www.padippakam.com

மக்களுக்குப் பீதியைக் கிளப்புகிறாய்? நான் உனக்குக் கத்துக் கொடுப்பேன்! இளைஞர்களே, உங்க இடைவார்களைக் கழற்றி, உள்ளே இருக்கிற பைகளை வெளியே திருப்புங்க, அது காரியத்தைச் சுலபமாக்கும்...''

ஒவ்வொரு பத்து எட்டுகளுக்கும் பற்கள் கொண்ட வாய்கள் எங்களுக்கு முன்னால் திறந்திருந்தன, இருண்ட எச்சிலுடன் அலையில் மிதந்தன, கூர்மையான, நீலநிற கோரைப் பற்கள் எங்கள் கால்களைப் பற்றிப் பிடித்தன: பாம்பு சிறிய தவளைகளை விழுங்குவது போல மனிதர்களை விழுங்க ஆறு ஆசைப்பட்டது போலத் தெரிந்தது. எங்களது ஈரமான காலணிகளும் ஆடைகளும் குதிக்கச் சிரமத்தைத் தந்து, எங்களைக் கீழே இழுத்தன; உடல் முழுக்க நக்கப்பட்டது போல நாங்கள் எல்லாருமே வழுக்கிப் போயிருந்தோம்; விகாரமாகவும் மௌனமாகவும் சிரமப்பட்டு மெதுவாகவும் பொறுமையுடனும் நடந்தோம். ஓசிப்பினால் மட்டுமே பனிக்கட்டியில் எங்கே வெடிப்புகள் தோன்றும் என்பதை முன்கூட்டியே கணக்கிட முடிந்தது, எங்களைப் போலவே நனைந்திருந்த அவனும் பனிக்கட்டியிலிருந்து பனிக்கட்டிக்கு முயலைப் போலத் தாவினான்; குறுக்கே தாண்டிய பிறகு நொடி நேரத்திற்கு இடைவேளை எடுத்துக்கொண்டு, பின்னுக்குத் திரும்பி மணி போன்ற குரலில் அழைப்பான்:

''ஏய், உங்களைத்தான், எப்படிப் போகணும் என்பதைக் கவனிங்க!''



படிப்பகம்

www.padippakam.com

அவன் ஆற்றோடு விளையாடினான்: அதுவோ அவனைப் பிடிக்க முயன்றது, சிறியவனாகவும் நளினமானவனாகவும் இருந்த அவன் அதனது பிடிக்கு அகப்படாமல் நழுவிக் கொண்டே இருந்தான், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆற்றைச் சாதுரியமாக ஏமாற்றினான், எதிர்பாராத கண்ணிகளைச் சுலபமாகத் தவிர்த்தான். பனிக்கட்டியின் ஓட்டத்தை ஒழுங்குபடுத்தியது அவன்தான் என்பது போலவும் தனது கால்களால் பெரிய, திடமான பனிக்கட்டிகளை எங்களை நோக்கிப் பின்னுக்கு உதைந்தான் என்பது போலவும் காணப்பட்டது.

"இதை வைத்துக்கொள்ளுங்கள், செல்லக் குழந்தைகளே, தைரியத்தை விட்டு விடாதீர்கள்!"

"அருமை, ஓசிப் மாமா!" என்று மொர்த்வினியன் ஆர்வத்தோடு முணுமுணுத்தான். "நீ தான் உண்மையான மனுசன்..."

கரைக்கு எவ்வளவு பக்கமாக வந்தோமோ, அந்தளவு அதிகமாகப் பனிக்கட்டி துண்டுகளாகி இருந்தன, ஆட்கள் மிகவும் அடிக்கடி வழுக்கி விழுந்து கொண்டே இருந்தார்கள். நகரம் ஏறக்குறைய எங்களைக் கடந்து போய்விட்டது, சீக்கிரமே நாங்கள் வோல்கா ஆற்றுக்குள்ளாகக் கொண்டு செல்லப்படுவோம். அங்கே பனிக்கட்டி இன்னமும் நகராமல் இருந்தது. நாங்கள் அடிப்பகுதிக்கு இழுத்துக் கொள்ளப் படுவோம்.

"ஒருவேளை நாம மூழ்கிப் போகலாம்," என்று மொர்த்வினியன் அமைதியாக, மாலை



படிப்பகம்

www.padippakam.com

நேரத்து நீல நிற மூடுபனியை இடப்புறம் பார்த்தவாறு கூறினான்.

ஆனால் திடீரென்று, எங்களுக்காகப் பரிவு கொண்டது போல, பெரிய ஆப்புப் போன்ற பனிக்கட்டி அதுவாகவே கரையை நோக்கிச் சென்றது, உடைவதும் நொறுங்குவதும் அங்கே முடிவுக்கு வந்தது.

''ஓ-டுங்க!'' என்று சீற்றத்துடன் கத்தினான் ஒசிப். ''உயிரைக் காப்பாத்திக்க ஓடுங்க!..''

அவன் தாவினான், வழுக்கிக் கீழே விழுந்து மேலாக நீரைத் தெளித்தவாறு ஓடிய பனிக்கட்டியின் ஓரத்தில் உட்கார்ந்திருந்தான், காப்பாற்றப்பட்ட நாங்கள் எல்லாரும் அவனைக் கடந்து விட்டோம் – ஒருவரையொருவர் முழங்கையால் தள்ளிக் கொண்டும் முந்திக் கொண்டும் ஐவர் கரைக்கு ஓடினார்கள். ஒசிப்புக்கு உதவுவதற்கு மொர்த்விணியனும் நானும் நின்றோம்.

''ஓடுங்க, நாய்க் குட்டிகளே, சொன்னது போலச் செய்யுங்கள்!..''

அவனது முகம் நீலம் பாரித்து நடுங்கியது. கண்கள் சோர்வுற்றன, வாய் விநோதமாகத் திறந்திருந்தது.

''எழுந்திருங்க, மாமா...''

அவன் தலையைத் தொங்கப் போட்டான்.

''என் காலை உடைச்சிக்கிட்டேன்னு நினைக்கிறேன்... முடியாது...''

நாங்கள் அவனை உயர்த்தி தூக்கிக் கொண்டு சென்றோம், எங்கள் கழுத்துகளின்



படிப்பகம்

www.padippakam.com

மீது கைகளைப் போட்டவாறு இருந்தான், நடுங்கிய பற்கள் வம்பளந்தன:

"நீங்க மூழ்கிப் போவீங்க, இளம் நண்பர்களே... சரி, ஆண்டவனுக்கு நன்றி, அந்த மாதிரி நடக்க அவன் விடலே... பாருங்க, அது மூணு பேரைத் தாங்காது, கவனமா கால் வைய்யுங்க! பனிக்கட்டி எங்கே பனியால் மூடாமல் இருக்குன்னு பாருங்க, அங்கே உறுதியா இருக்கும்... உண்மையாகவே நீங்க என்னை விட்டுறணும்!.."

அவன் எனது முகத்தைக் கூர்ந்து பார்த்தான், அவனது கண்கள் ஓரங்களில் சுருங்க, பிறகு கேட்டான்:

"நம்மோட அத்துமீறல்களின் குறிப்புப் புத்தகமாவது இத்தகமாவது இப்ப முற்றா அமிழ்ந்திட்டதாக நான் கருதுறேன், இல்லையா?"

கரையை அடைந்து ஏதோ ஒரு படகையோ அல்லது எதையோ மோதித் தூள்தூளாக உடைத்த பனிக்கட்டியிலிருந்து நாங்கள் இறங்கினோம். நீரில் தங்கிவிட்ட அதனது பகுதி முழுக்க உரக்கச் சப்தமிட்டும் ஆடிக்கொண்டும் அமிழ்ந்து கொண்டும் இருந்தது.

"அதைப் பாரு!" ஏற்றுக்கொள்வது போல மொர்த்வினியன் சொன்னான். "நமக்குத் தேவையானதைச் செய்துவிட்டது!"

நனைந்து போயும் உறைந்து போயும் உணர்ச்சி வயப்பட்டும் இருந்த நாங்கள் இப்போது கரையில் உள்ளூர் மக்கள் கூட்டத்துடன்



படிப்பகம்

இருந்தோம்; போயெவும் போர்வீரனும் ஏற்கெனவே அவர்களோடு விவாதம் செய்து கொண்டிருந்தார்கள். சில கட்டைகளின் மீது நாங்கள் ஓசிப்பைக் கிடத்தினோம். அவன் உல்லாசமாகக் கத்தினான்:

"ஏய், பையன்களா, குறிப்புப் புத்தகத்துக்கு முடிவு அவ்வளவுதான், நனைஞ்சு கெட்டுப் போச்சு..."

எனது கோட்டுக்குள்ளாக அது ஒரு செங்கல் போல இருப்பதாக உணர்ந்தேன்; முனைப்பில்லாதவாறு இருக்கவே, ஆற்றுக்குள்ளாக அந்தக் குறிப்புப் புத்தகத்தை தூர வீசி எறிந்தேன், அது கருத்த நீருக்குள்ளாக ஒரு தவளையைப் போல பொத்தென்று விழுந்தது.

தியாத்லவ்கள் குன்றுக்கு மேலாக வோத்கா வாங்க சாராயக் கடைக்குப் பாய்ந்தோடினார்கள், அவர்கள் ஓடியவாறு சத்தம் போட்ட போது தங்களது முட்டிகளால் ஒருவரையொருவர் அடித்துக் குத்திக் கொண்டார்கள்:

"அதை எடு!"

"நீ பொறு!.."

முனிவரைப் போல தாடியும் திருடனைப் போலக் கண்களையும் பெற்றிருந்த கிழவன் எனது காதுக்குள்ளாக மிகுந்த நம்பிக்கையோடு சொன்னான்:

"அமைதியை விரும்புற மக்களைத் தொல்லைப் படுத்தியதற்காக, புறச்சமயிகளே, உங்களுக்குச் சரியான உதை கொடுக்கணும்..."

www.padippakam.com

தனது காலணிகளை மாற்றிக் கொண்டு போயெவ் சத்தம் போட்டான்:

''எந்த வழியில நாங்க உங்களுக்குத் தொல்லை கொடுத்தோம்?''

''உங்க கண்ணு முன்னால கிறிஸ்தவர்கள் மூழ்கிக்கிட்டு இருக்காங்க,'' என்று முன்னிலும் கரகரப்பாக முணுமுணுத்தான் போர்வீரன், ''அவர்களுக்கு உதவ என்ன செய்யுறீங்க?''

''சரி, நாங்க என்ன செய்ய முடியும்?''

ஓசிப் தரை மீது கிடந்தான், அவனது கால் விரிந்து கிடந்தது, நடுங்குகின்ற கைகளால் தனது ஆட்டுத்தோல் அங்கியைத் தொட்டுப் பார்த்து அமைதியாகப் புகார் செய்தான்:

''புனித மாதாவே, எல்லாமே முழுக்க நனைஞ்சு போச்சு... என்னோட ஆடை முழுக்கப் பாழாப் போச்சு... ஓராண்டு பூராகூட அதை அணியலியே!..''

தரை மீது படுத்து இருந்த போது எங்களது கண்களுக்கு முன்னால் உருகிப்போனது போல அவன் மீண்டும் சிறியவனாகவும் சுருங்கியும் போயிருந்தான்.

திடீரென்று, ஒரு முழங்கையால் தன்னை உயர்த்தியபடி, உட்கார்ந்து, முனகிவிட்டு, கோபமான, உச்சத் தொனியில் கத்தினான்:

''முட்டாள்களே, எந்தச் சனியன் உங்களைப் பிடிச்சிருக்கு — நீங்க குளிச்சு, சர்ச்சுக்குப் போயாகணும், நீங்க விரும்பினா! சாத்தானுடைய படகோட்டிகளே!.. நீங்க இல்லாம ஆண்டவன் தன்னோட புத்துயிர்ப்பைக் கொண்டாட முடியாதது போல... நீங்க கொல்லப்பட்



படிப்பகம்

டிருப்பீங்க... நம்ம துணிகள் எல்லாம் கெட்டுப் போச்சு...''

நாங்கள் எல்லாரும் காலணிகளை மாற்றிக் கொண்டோம், துணிகளைப் பிழிந்து கொண்டு, களைப்புடன் தும்மியவாறு, முனகியபடி, சுற்றுப்புறத்திலிருந்து வந்த ஆட்களுடன் சூடான வார்த்தைகளைப் பறிமாறிக் கொண்டோம், ஆனால் அவன் எங்களைப் பார்த்து மிகுந்த கோபமாகத் தொடர்ந்துக் கத்தினான்:

''அவுங்க மண்டைக்குள்ளாக என்ன வச்சிருக்கணும், முட்டாள்களே! அவங்க குளிக்க விரும்புறாங்க... நீங்க உண்மையில விரும்புறது போலீஸ் உங்களிடம் வரட்டும் என்பதுதான், அவங்க உங்களைக் குளிப்பாட்டுவாங்க...''

அருகில் நின்று கொண்டிருந்தவர்களின் ஒருவன் பணிவாகச் சொன்னான்:

''போலீஸ் அனுப்பப்பட்டிருக்கு...''

''என்ன விளையாட்டு?'' ஓசிப்பை நோக்கி போயெவ் சத்தம் போட்டான். ''எதுக்காக பாவனை செய்துக்கிட்டிருக்கே?''

''நானா?''

''நீ தான்!''

''கொஞ்சம் பொறு! என்ன சொல்றே?''

''குறுக்கே போக முயற்சித்த ஆட்களிடம் பேசியது யார்?''

''யார்?''

''நீ!''

''நானா?''

இழுப்பு வந்தவனைப் போல ஓசிப் இழுத்

www.padippakam.com

தான், தளர்ந்த குரலில் திரும்பச் சொன்னான்:

"நா-னா?"

"நீ சொல்வது மிகவும் சரி," புதீரின் அமைதியாகவும் தெளிவாகவும் சொன்னான்.

மொர்த்வினியனும் அவனோடு சேர்ந்து கொண்டு அமைதியாக, வருத்தத்தோடு சொன்னான்:

"ஆமா, ஓசிப் மாமா, நீங்க பேசினீங்க, உண்மையாவே பேசினீங்க!.. மறந்து போயிட்டீங்க..."

"உண்மையில் அது எல்லாத்தையும் ஆரம்பிச்சது நீ தான்," என்று போர்வீரன் கடுமையான அதிகாரத்துடன் கூச்சலிட்டான்.

"அவனுக்கு மறந்து போச்சு!" என்று போயெவ் கோபமாகக் கத்தினான். "அவனால எப்படி மறக்க முடியும்! முடியாது! தனது பழியை யார் மீதாவது சுமத்த முயற்சிக்கிறான், தெரியுமா!"

ஓசிப் மௌனமாக இருந்தான், தனது கண்ணைச் சுருக்கிக் கொண்டு ஈரமான, பாதி உடையணிந்த ஆட்களை நோக்கினான்...

பிறகு விநோதமான ஒரு குரலுடன்—அது சிரிப்போ அழுகையோ—தனது தோள்களைக் குலுக்கிக் கொண்டும், கைகளை விரித்துக் கொண்டும், முணுமுணுக்கத் தொடங்கினான்:

"ஆக நான் செய்தேன்—முற்றிலும் உண்மை... அது அப்படித்தான். எல்லாம் எனது யோசனை. யார் அதை நினைத்தது!"

"அது அதிகம் போல இருக்கு!" என்று



படிப்பகம்

www.padippakam.com

வெற்றிப் பெருமிதத்துடன் கத்தினான் போர் வீரன்.

கொதிக்கின்ற திணைக் கஞ்சி போல சீறிக் கொண்டிருந்த நதியை நோக்கியவாறு, ஓசிப் தனது முகத்தைச் சுருக்கி வைத்துக்கொண்டு, எங்களது கண்களைக் குற்ற உணர்வோடு தவிர்த்தான்:

''அது ஓர் இருட்டடைப்பு... ஓ மாதாவே! நாங்க மூழ்காமல் போனது எப்படி? புரிஞ்சுக்கிற முடியலே... ஆண்டவனே!.. இளைஞர்களே... கோபப்படக் கூடாது, இன்னைக்கு ஈஸ்டர்... தயவு செய்து என்னை மன்னிச்சிறுங்க!.. என் மூளையில் ஏதோ ஏற்பட்டிருக்கணும்னு நினைக்கிறேன்... நிச்சயமாகத்தான்! உங்களைத் தூண்டியது நான் தான்... கிழட்டு முட்டாள் நான்...''

''அப்படியா?'' என்றான் போயெவ். ''நான் மூழ்கிப் போயிருந்தா என்ன சொல்லியிருப் பீங்க?''

வழுக்குதல் மூலம் தான் செய்து விட்ட தேவையின்மையாலும் பைத்தியக்காரத்தனத் தாலும் ஓசிப் உண்மையாக ஆச்சரியப்பட்டவன் போல எனக்குத் தோன்றியது. புதிதாகப் பிறந்த கன்றுக் குட்டி போல உடல் முழுக்க நக்கப்பட்டிருந்தாலும், தனது தலையை ஆட் டியவாறு தரையில் உட்கார்ந்திருந்தான், அவ னைச் சுற்றி தரையில் அவனது கைகள் எதையோ தேடின, யாரையும் பார்க்காமல் பச் சாதாப வார்த்தைகளை முணுமுணுத்துக் கொண் டிருந்தான்.



7—1227

படிப்பகம்

www.padippakam.com

எங்களை முன்னின்று மிகுந்த கவனத் தோடும் திறமையோடும் அதிகாரத்தோடும் அழைத்துச் சென்ற, மனிதர்களில் போராடுகின்ற அந்தத் தலைவனுக்கு என்ன நேர்ந்து விட் டது என்று நினைத்தபடி அவனைக் கவனித் தேன்.

மகிழ்ச்சியற்ற வெறுமை என் ஆன்மாவில் நிறைந்திருந்தது, ஓசிப்புக்கு அருகே குந்தி யிருந்தேன். எதையோ பாதுகாக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் அவனிடத்தில் மெது வாகச் சொன்னேன்:

''சரி, போதும், ஓசிப் மாமா...''

என்னைப் பார்த்துக் கண் சிமிட்டினான், தனது தாடியை விரல்களால் நெருடியவாறு மெதுவாகப் பதிலளித்தான்:

''இது போலப் பார்த்திருக்கிறாயா? அப்படித் தான்...''

எங்கள் எல்லாருக்கும் கேட்பது போலத் திரும்பவும் புலம்பத் தொடங்கினான்:

''என்ன நடக்கப் போகுது—ஹும்?''

...குன்றின் உச்சியில், ஏற்கெனவே இருட்டி விட்ட வானத்தின் பின்புறத்தில் மரங்களின் கருநிறத் தொகுதி எழுந்தது, ஏதோ பெரிய அரக்கனைப் போல கரைக்கு மேலாகக் குன்று குனிந்து நின்றது. மாலை நேரத்தின் நீலநிற நிழல்கள் தோன்றியிருந்தன, குன்றின் கருத்த தோலோடு கன்றிப் போன காயத் தைப் போல ஒட்டிய வீடுகளின் கூரைகளுக் குப் பின்னிருந்து அவை வெளியே எட்டிப் பார்த்தன, களிமண் பள்ளத்தாக்கின் செந்



படிப்பகம்

www.padippakam.com

நிற, ஈரமான வாயால் தலைகளை நீட்டின. அது நீர் பருகுவதற்காக ஆற்றை நெருங்கியது போல இருந்தது.

நதி இருண்டு காணப்பட்டது, பனிக்கட்டியின் கிசுகிசுப்பும் மொறுமொறுப்பும் மிகவும் மந்தமாகவும் முறையாகவும் இருந்தன; சில நேரங்களில் மிதந்து வரும் பனிக்கட்டி பன்றியின் தேடுகின்ற மூஞ்சியைப் போல கரையை முட்டியது, கண நேரத்திற்கு அசைவற்று நின்று, பிறகு தன்னை விடுவித்துக்கொண்டு மிதந்து செல்ல மற்றொன்று வந்து அதனது இடத்தைப் பிடித்துக்கொண்டது.

நீர் விரைவாக உயர்ந்து கொண்டிருந்தது, கரைகளை மோதி, அழுக்கை அப்பால் அடித்துச் சென்றது. நீரின் தெளிவற்ற நீல நிறத்தில் கரும்புகை போல அழுக்குக் கரைந்து போனது. காற்றிலே ஒரு விநோதமான ஒலி நிறைந்திருந்தது: ஏதோ மிகப் பெரிய விலங்கு நறநற வென கடிப்பது போலவும் விழுங்குவது போலவும், தனது பெரிய நாக்கினால் உதடுகளைத் துழாவுவது போலவும் இருந்தது.

நகரத்திலிருந்து இனிய ஓசை வந்தது, மணிகளின் வருத்தந்தோய்ந்த ஒலி தொலைவு காரணமாக மெதுவாகக் கேட்டது.

குன்றுக்கு மேலிருந்து சத்தம் போடும் நாய்க்குட்டிகளைப் போன்று தியாத்லவ் சகோதரர்கள் கைகளில் போத்தல்களுடன் குதித்து ஓடிக் கொண்டிருந்தார்கள், மேலும் அவர்களது பாதையின் குறுக்காக — நதிக் கரைக்கு



7*

படிப்பகம்

www.padippakam.com

இணையாகச் சென்ற—சாம்பல் நிற உடையில் ஒரு போலீஸ் அதிகாரியும், கருப்பு உடையில் இரு போலீஸ்காரர்களும் நடந்து வந்தார்கள்.

"அட ஆண்டவனே!'' என்று முனங்கிய ஓசிப், மெதுவாகத் தனது முழங்காலைத் தடவிக்கொடுத்தான்.

போலீசைப் பார்த்ததுமே சமீபத்தில் நின்று கொண்டிருந்தவர்கள் சற்றுப் பின்னுக்கு நகர்ந்தார்கள், எதிர்பார்த்த அமைதி நிலவியது, சிறிய முகமும் விறைப்பான பொன் நிற மீசையும் கொண்ட குள்ளமான அதிகாரி எங்களிடம் வந்து கரகரத்த குரலில் கண்டிப்பான, செயற்கையான குரலில் பேசினான்:

"ஆக அது நீங்கதானா, சாத்தான்களே...''

ஓசிப் முதுகுப்புறம் சாய்ந்து அவசர அவசரமாகப் பேசத் தொடங்கினான்:

"ஐயா, அது நான் தான். நான் தான் அவர்களைப் போக வைச்சேன்! எங்களை மன்னிச்சுறுங்க, இந்தப் புனித விழாவிற்காக, ஐயா...''

"உனக்கு என்ன துணிச்சல், கிழட்டுச் சாத்தானே,'' அந்த அதிகாரி உரக்கக் கத்தத் தொடங்கினான், ஆனால் அவனது சத்தம், அன்பு பாராட்டுகிற வார்த்தைகளின் இனிய ஓட்டத்தில் மறைந்து போனது.

"எங்க வீடு அங்கே நகரத்தில் இருக்கு; கரையில செய்யுறதுக்கு எதுவுமே இல்லை. ரொட்டி வாங்கக்கூட எங்ககிட்டப் பணம் இல்லே, நாளைக் கழிச்சு ஈஸ்டர் ஞாயிறு, ஐயா,



படிப்பகம்

நாங்க எல்லாரும் குளிக்கணும், நாங்க கிறிஸ் துவர்கள் ஆனதால் சர்ச் தொழுகையில் கலந் துக்கிற விரும்பினோம், ஆகவேதான் நான் சொல்றேன்: 'எழுந்திருங்க, இளைஞர்களே, ஆண்டவன் அநுமதிச்சா, நாம் ஏதோ தவ றான காரியம் செய்யப் போய்க் கொண்டிருந் தோம் என்பது போல அல்ல.' உண்மையில் என்னோட அசட்டுத் தைரியத்துக்காக நான் கஷ்டப்பட்டேன், பாருங்க, என்னோட கால் சுத்தமா துண்டு துண்டாப் போச்சு...''

''ஆமா!'' என்று கண்டிப்புடன் கத்தி னான் அதிகாரி. ''நீங்க மூழ்கியிருந்தா என்ன ஆயிருக்கும், அப்ப என்ன நடந்திருக்கும்?''

ஓசிப் ஆழ்ந்த, கவலை தோய்ந்த பெரு மூச்சுவிட்டு ஓய்வெடுத்துக் கொண்டான்:

''என்ன நடந்திருக்கும், ஐயா? ஒன்னு மில்லே, இப்படிச் சொல்றதுக்கு நீங்க மன் னிக்கிறதா இருந்தா...''

போலீஸ்காரன் எங்களைத் திட்டினான்; மௌனமாகவும் கவனமாகவும் அவன் சொல் வதைக் கேட்டார்கள். எங்களது தாயார்களை அசிங்கமாகவும் குற்றம் காணுமாறும் கேவலப் படுத்திப் பேசாதவாறும் போல இருந்தது, ஆனால் எங்களது இதயங்களில் பாதுகாக்க வேண்டிய ஏதோ முக்கியமானதைச் சொல்லிக் கொண்டிருந்தான் என்பது எல்லாருக்கும் தெ ரிந்தது.

பிறகு, எங்களது பெயர்களைக் குறித்துக் கொண்டு போய்விட்டான். வோத்கா அருந்தி

www.padippakam.com

வெதுவெதுப்பும் மகிழ்ச்சியும் மிக்கவர்களாக்கிக் கொண்டு, வீட்டுக்குச் செல்ல எங்களைத் தயார் படுத்தத் தொடங்கினோம்; பல்லை இளித்த வாறு போய்க் கொண்டிருந்த போலீஸ்காரர் களை உற்றுப்பார்த்த ஓசிப் திடீரென்று எழுந்து லேசாக நின்று, ஊக்கத்துடன் சிலு வை வைத்துக்கொண்டான்:

"அதுதான் கதை முடிவு, ஆண்டவனுக்கு நன்றி!.."

"ஆக," என்று போயெவுடைய மூக்கொலி பிரமிப்புடனும் ஏமாற்றத்துடனும் ஒலித்தது, "ஆக உன்னோட காலு—சரியாகி விட்டதா? மொத்தத்தில் நீ காலை முறித்துக் கொள்ள லே?"

"நான் முறித்துக் கொண்டிருக்கணும் என்று நீ விரும்பினியா?"

"ஏய், நீ ஒரு கோமாளி! பரிதாபமான கிண்டல் பேர்வழி நீ..."

"வாங்க, இளைஞர்களே!" என்று கட்ட ளையிட்ட ஓசிப், தனது ஈரத் தொப்பியைத் திரும்பவும் தலையில் வைத்தான்.

...அவனுக்கு அருகிலும் மற்ற எல்லா ருக்குப் பின்பும் நான் நடந்தேன்; என்னிடம் மெதுவாகவும் பாசமாகவும், அவனுக்கு மட்டும் தெரிந்த ரகசியத்தைச் சொல்வது போலப் பேசினான்:

"நீ என்ன செய்தாலும் சரி, எவ்வளவு கடினமாக முயன்றாலும் சரி, ஏமாற்றாமல், வஞ்சிக்காமல், வாழ்வது சிரமமானது. வாழ்க் கை என்பது அந்த மாதிரிதான், அபத்தம்...



படிப்பகம்

www.padippakam.com

உச்சிக்கு ஏறுவது மிகவும் அருமையா இருக்கும், ஆனா சாத்தான் எப்பவுமே ஒருத்தனுடைய முழங்கால்களைப் பிடித்துத் தொங்குவான்...''

பொழுது சாய்ந்தது. இருளில் சிவப்பு மற்றும் மஞ்சள் விளக்குகள் மினுமினுத்து, இப்படிச் சொல்வது போல இருந்தது:

''இங்கே வாங்க!..''

மலையிலிருந்து மணியோசை வந்த திசையில் நாங்கள் நடந்து கொண்டிருந்தோம், உயரமான கரைகளிலிருந்து எங்களது பாதங்கள் வரை சிற்றாறோடைகள் சலசலத்து ஓடின. அவற்றின் ஒலிகளுடன் ஓசிப்பினுடைய இனிய குரல் ஒன்று கலந்தது:

''போலீஸ்காரனை அருமையாகச் சமாளித்தேன், இல்லையா? காரியங்களைச் செய்யுறதுக்கு அது தான் வழி. ஆகவே ஒருத்தனாலும் எல்லாத்தையும் புரிஞ்சுக்க முடியாது. ஆனால் ஒவ்வொருத்தனும் தானே முக்கியமான சுருள் கம்பி என்று நினைக்கிறான், ஆமா... தன்னோட ஆத்மாதான் நிகழ்ச்சியை அமைப்பது போல ஒவ்வொருத்தனும் நினைக்கட்டும்...''

அவன் என்ன சொல்கிறான் என்பதைக் கேட்டேன், ஆனால் ஓரளவுக்குத் தான் புரிந்து கொண்டேன்.

மேலும் என்ன, குறிப்பாக புரிந்துகொள்ள நான் விரும்பவில்லை. என் ஆத்மாவிற்குள்ளாக எளிதாக இருந்தது, என் மனம் ஓய்வாக இருந்தது; நான் ஓசிப்பை விரும்பினே



படிப்பகம்

னா இல்லையா என்பது எனக்குத் தெரியாது, ஆனால் எல்லா இடத்திற்கும் நாங்கள் எங்கே போக வேண்டிய அவசியம் நேர்ந்தாலும், கால்களுக்கு அடியில் வழுக்குகிற பனிக்கட்டி நிறைந்த ஆற்றின் குறுக்காகச் செல்ல நேர்ந் தாலும் அவனைப் பின் தொடர்ந்து செல்லத் தயாராக இருந்தேன் என்பது தெரிந்தது.

மணிகள் ஒலித்தன, இப்படி நினைப்பது நல்லதாக இருந்தது:

''வசந்தத்தை வரவேற்பதற்காக எத்தனை முறையும் நான் இங்கே இருப்பேன்!..''

ஓசிப் பெருமூச்சுடன் குறிப்பிட்டான்:

''ஆனா மனிதனோட ஆன்மா – ஆன்மா வுக்கு இறக்கைகள் உண்டு—அவன் தூங்குற போது ஆன்மா பறந்து போகுது...''

இறக்கைகள் உண்டா? எவ்வளவு அதிசய மானது!..

1912

www.padippakam.com

# மனிதன் பிறந்தான்

ருஷ்யா பஞ்சத்தால் பீடிக்கப்பட்டிருந்த 1892 ஆம் ஆண்டில், சுகுமுக்கும் அச்சேம்சிராவுக்கும் நடுவே, கோதர் ஆற்றின் கரையில், கடலுக்கு அருகாமையில் நடந்தது இது—தெளிந்த மலையாற்று நீரின் குதூகலம் பொங்கும் கலகலப்புக்கு ஊடாகக் கடல் அலைகளின் ஆழ்ந்த சளப்பொலி துலக்கமாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

இலையுதிர் காலம். கோதர் ஆற்று நீரின் வெண் நுரையில் செர்ரி-லாரல் மரத்தின் மஞ்சள் பழுப்புகள் சுழன்று மினுக்கிட்டன. அவை துடியான சிறு சாமன் மீன்கள் போலத் தோற்றம் அளித்தன. நான் ஆற்றுக்கு மேலே பாறைகள் மீது உட்கார்ந்திருந்தேன். கடற் பறவைகளும் நீர்க் காகங்களும் இலைப் பழுப்புகளை மீன்கள் என்று எண்ணி ஏமாந்ததனால்தான் வலப்புறம், மரங்களுக்கு அப்பால், கடல் அலை

© தமிழ் மொழிபெயர்ப்பு, **முன்னேற்றப் பதிப்பகம், 1979.**



படிப்பகம்

www.padippakam.com

யடிக்கும் இடத்தில் இப்படிக் கோபத்துடன் கத்துகின்றன போலும் என்று எண்ணினேன்.

எனக்கு மேலே செஸ்ட்நட் மரங்கள் பொன் அணிகள் பூண்டிருந்தன. வெட்டுண்ட அங்கைகள் போன்று இருந்த செஸ்ட்நட் இலைகள் என் கால்களின் அருகே ஏராளமாகக் கிடந்தன. ஆற்றின் மறு கரையில் இருந்த ஹார்ன்பீம் மரத்தின் கிளைகள் அதற்குள் இலைகளை உதிர்த்து விட்டு மொட்டையாய் இருந்தன. அறுந்த வலை போல அவை காற்றில் தொங்கின. மஞ்சள்சிவப்பு நிற மலை மரங்கொத்தி அந்த வலையில் சிக்கிக் கொண்டது போன்று துள்ளி, கரிய அலகால் மரப் பட்டையில் அடித்துப் பூச்சிகளை வெளியே விரட்டியது. இலாகவம் உள்ள நீல டிட்மஸ் பட்சிகளும் நீலச் சாம்பல் நிறப் பட்சிகளும்—இவை வட புலத்திலிருந்து வந்த விருந்தாளிகள்—அவற்றைக் கொத்தித் தின்றன.

எனக்கு இடப் புறத்தில் மலை முடிகளின் மேல் புகை நிற முகில்கள் குவையாகக் கவிந்து மழை பெய்யும் அபாயக் குறிகாட்டின. அவற்றின் நிழல்கள் பசிய மலைச் சாரல்களில் ஊர்ந்தன. உயிரற்றவைகளாகத் தோன்றும் புன்னை போன்ற மரங்கள் சாரல்களில் வளர்ந்தன. பழங் காலப் புன்க பொந்துகளிலும் லிண்டன் மரப் பொந்துகளிலும் 'வெறியூட்டும் தேன்' கிடைக்க வாய்ப்பு இருந்தது. பண்டைக் காலத்தில், ரோமானியத் தளகர்த்தன் பாம்ப்பியசினுடைய படையினர் வெறியூட்டும் இதன் இனிப்பால் அநேகமாகக் கொல்லப் பட்டார்களாம். இரும்பு



படிப்பகம்

மனிதர்களான ரோமானியப் படையினரின் ஒரு முழு படை இதை உண்டு மயங்கி விழுந்து விட்டதாம். லாரல், அஸாலியா மலர்களின் பூந்தேனைக் கொண்டு தேனீக்கள் இந்தத் தேனை உண்டாக்குகின்றன. 'வழிப்போக்கர்கள்' பொந்துகளிலிருந்து இதை எடுத்து லவாஷ் என்னும் மெல்லிய கோதுமை ரொட்டியில் தடவித் தின்கிறார்கள்.

செஸ்ட்நட் மரங்களுக்கு அடியில் பாறைகள்மேல் அமர்ந்து நானும் இந்தக் காரியத்தில்தான் ஈடுபட்டிருந்தேன். கோபம் கொண்ட தேனீயால் கடுமையாகக் கொட்டுண்ட நான், களைப்புற்ற இலையுதிர் காலச் சூரியனின் சோம்பிய விளையாட்டைப் பார்வையிட்டவாறு, தேன் நிறைந்த பாத்திரத்தில் ரொட்டித் துண்டுகளைத் தோய்த்துத் தோய்த்துத் தின்று கொண்டிருந்தேன்.

இலையுதிர் காலத்தில் காக்கேஷியா மாபெரும் மூதறிஞர்களால்—எப்போதும் மாபெரும் பாவிகளாக இருக்கும் அவர்களால்—கட்டப்பட்ட செல்வம் கொழிக்கும் பெருங் கோயிலாக, மனச் சான்றின் கூரிய பார்வையிலிருந்து தங்கள் கடந்த காலத்தை மறைப்பதற்காகப் பொன்னையும் பைந்நீல மணியையும் மரகதத்தையும் கொண்டு அவர்கள் கட்டிய எல்லையின்றிப் பரந்த கோயிலாகக் காட்சி தந்தது. துர்க்மேனியப் பட்டினால் சாமர்க் கண்டிலும் ஷெமாகிலும் தைத்த சிறந்த இரத்தினக் கம்பளங்களை மலைகளில் எங்கும் தொங்க விட்டிருந்தார்கள். உலகம் முழுவதை

யும் கொள்ளை அடித்து எல்லாவற்றையும் இங்கே கொண்டு வந்திருந்தார்கள், பகலவ னுக்குக் காணிக்கையாக, அவனிடம் பின்வரு மாறு சொல்ல விரும்பியவர்கள் போன்று:

''உன்னுடையதை—உன்னவர்களிடமிருந்து—உனக்காக.''

...நான் ஒரு காட்சியைக் கண்ணெதிரே போலக் காண்கிறேன்:

களி பொங்கும் குழந்தைகளுடையவை போன்ற மிகப் பெரிய விழிகள் கொண்ட நரைத்த நீள்தாடிக்கார மாமனிதர்கள் மலை களிலிருந்து இறங்கி, எல்லாப் புறங்களிலும் வெவ்வேறு நிற நிதிக் குவைகளைப் புதைத்த வாறு பூமியை அலங்கரிக்கிறார்கள்; மலை முடி களைப் பருத்த வெள்ளிப்பாளங்களால் மூடு கிறார்கள், மலை விளிம்புகளைப் பல்வேறு வகை மரங்களாலான உயிருள்ள விரிப்பால் மூடிப் போர்த்துகிறார்கள். வளங் கொழிக் கும் நிலத்தின் இந்தத் துண்டு அவர்களுடைய கைவேலையால் அறிவை மயக்கும் அளவுக்கு வனப்பு வாய்ந்ததாகத் திகழ்கிறது.

உலகில் மனிதனாக இருப்பது மிகச் சிறந்த பதவி. அற்புதமானவற்றை எவ்வளவு பார்க்க முடிகிறது, அழகை மௌனமாக வியந்து பா ராட்டுகையில் இதயம் எத்தகைய வேதனை யுள்ள இனிமையுடன் அலைமோதுகிறது!

ஊம், ஆமாம், சில வேளைகளில் கடின மாக இருக்கிறது, காந்தும் வெறுப்பு நெஞ்சை நிறைக்கிறது, ஏக்கம் இதயத்தின் குருதியை ஆர்வத்துடன் உறிஞ்சிக் குடிக்கிறது. ஆனால்



படிப்பகம்

இதெல்லாம் எப்போதும் நிலையாக இருப்பதில்லை. சூரியனுக்கும் கூட மனிதர்களைக் காண அடிக்கடி மிகுந்த துயரம் உண்டாகிறது: அது அவர்களுக்காக எவ்வளவோ நிறையப் பாடுபட்டும் மனிதர்கள் நல்லபடி வாய்க்கவில்லை...

நல்லவர்களும் நிறைய இருக்கிறார்கள் என்று சொல்லவே வேண்டியதில்லை. ஆனால் அவர்களைச் செப்பம் செய்வது தேவை. புதிதாக மாற்றி அமைப்பதோ இன்னும் நல்லது.

...புதர்களுக்கு மேலே, எனக்கு இடப்புறத்தில் கரிய தலைகள் அசைந்தாடின. கடலின் அலையோசையிலும் ஆற்றின் களகளப்பிலும் சற்றே காதில் படுமாறு ஒலித்தன மனிதக் குரல்கள். இவர்கள் ‘பஞ்சத்தில் அடிபட்டவர்கள்.’ சுகுமில் சாலை போட்ட பிறகு அச்சேம்சிராவுக்கு வேலை தேடிப் போகிறவர்கள்.

நான் இவர்களை அறிந்திருந்தேன். இவர்கள் அரியோல்காரர்கள். நான் இவர்களோடு சேர்ந்து வேலை செய்துவிட்டு சேர்ந்து நேற்றுக் கணக்கு தீர்த்துக் கொண்டேன். சூரிய உதயத்தைக் கடற்கரையில் எதிர் கொள்வதற்காக இவர்களுக்கு முன்னதாக, இரவில் அங்கிருந்து கிளம்பிவிட்டேன்.

நான்கு ஆடவரும் ஒரு மாதும். அவள் தாடை எலும்புகள் புடைத்த பெண், கருவுற்றிருந்தாள். அவளுடைய வயிறு மூக்கைத் தொடுவது போலப் பிரமாண்டமாக உப்பி இருந்தது. இளநீலச் சாம்பல் நிறக் கண்கள் மிரட்சியுடன் பரக்க விழித்தன. மஞ்சள் குட்டை கட்டிய அவளுடைய தலையைப் புதர்களுக்கு

மேலே கண்டேன். பூத்த சூரியகாந்திச் செடி காற்றில் அசைவது போல அது அசைந் தாடியது. அவளுடைய கணவன் பழங்களை அளவு கடந்து தின்றதால் சுருமில் இறந்து போனான். நான் இந்த மனிதர்களுக்கு நடுவே பாரக்கில் தங்கி இருந்தேன். ருஷ்யர்களின் நல்ல வழக்கப்படி அவர்கள் தங்கள் துன்பங் களைப் பற்றி மிக நிறையவும் உரக்கவும் பேசியதால் அவர்களுடைய முறையீடுகள் ஒரு ஐந்து கிலோமீட்டர் சுற்று வட்டாரத்துக்குக் கேட் டன.

இவர்கள் தங்கள் துயரத்தால் நசுக்குண்ட சலித்துப் போன மனிதர்கள். விளைச்சல் தராத களைத்த சொந்த மண்ணிலிருந்து துயரம் இவர்களைத் துணித்து, இலையுதிர் காலச் சருகுகளைக் காற்று அடித்துச் செல்வது போல இங்கே கொண்டு வந்திருந்தது. இங்கே, பழக்கமற்ற இயற்கையின் பகட்டான செழிப்பு இவர்களை வியப்பில் ஆழ்த்தி இவர்களுடைய கண்களைக் கூசச் செய்தது. அதே சமயம் கடினமான வேலை நிலைமைகள் இவர் களைக் குற்றுயிராக்கி விட்டன. இங்கிருந்தவற் றை எல்லாம் நோக்கி, நிறம் மங்கிய, ஏங்கிய கண்களைக் கலக்கத்துடன் கொட்டியவாறு, ஒரு வரை ஒருவர் பார்த்து இரக்கத்துடன் புன்னகை செய்து தணிந்த குரல்களில் பேசிக் கொண்டார் கள்:

''ஆகா-கா, எப்பேர்ப்பட்ட நிலம்...''

''பொன் விளையும் பூமி.''

www.padippakam.com

''ம்-ஆமா-ம்... ஆனாலும் பாறையாய் இருக்கிறதே...''

''வாய்ப்பு இல்லாத நிலம்தான், சொல்லி விட வேண்டும்...''

பின்பு அவர்கள் கபீலி பள்ளம், சுகோய் கோன், மோக்ரென்கயே முதலிய சொந்த இடங்களை நினைவு கூர்ந்தார்கள். அவற்றில் ஒவ்வொரு பிடி மண்ணும் அவர்களுடைய முன்னோரின் எலும்பு மிச்சங்கள் அடங்கியதாக இருந்தது. எல்லாம் நினைவுச் சின்னமாக, பழக்கமானதாக, விலை மிக்கதாக, அவர்கள் வியர்வையைப் பெருக்கி வளர்த்ததாக இருந் தது.

அவர்களோடு இன்னும் ஒரு பெண் இருந் தாள். உயரமானவள், நேரானவள், பலகை போன்று தட்டையானவள். அவளுடைய தாடை கள் குதிரையினுடையவை போல இருந்தன. நிலக்கரிக்கு ஒப்பான கரிய கோணல் விழிகளில் பார்வை மங்கி இருந்தது.

மாலை வேளைகளில் அவள் மஞ்சள் தலைக்குட்டைக்காரியோடு பாரக்குக்குப் பின்னே சென்று, சரளைக் கற் குவியல் மேல் உட்கார்ந்து, கன்னத்தை உள்ளங்கையில் வைத்து, தலையை ஒரு பக்கம் சாய்த்து, உயர்ந்த கோபக் குரலில் பாடினாள்:

''கல்லறை வெளியின்...
பின்னே பச்சைப் புதர்களில்—
வெள்ளைத் தலைக்குட்டை...



படிப்பகம்

www.padippakam.com

விரிப்பேன் மணல் மீதிலே...
இனிய என் அன்பன்...
வந்திடானோ விரைவிலே...
இனியவன் வந்தால்...
வணங்கி எதிர் கொள்ளுவேன்...''

மஞ்சள் தலைக் குட்டைக்காரி கழுத்தை வளைத்துத் தன் வயிற்றைப் பார்த்தவாறு வழக்கமாகப் பேசாதிருந்தாள். ஆனால் சில நேரங்களில் எதிர்பாரா விதமாக, சோம்பலுட னும் சற்றுக் கம்மிய தடித்த ஆண் குரலிலும் தேம்பும் சொற்களால் தானும் பாடினாள்:

''ஆ, என் அன்பே...
ஆ, என் இன்பக் கனியே...
பாழ் விதியால்...
உன்னைக் காணேன் இனியே...''

தெற்குப் பிரதேச இரவின் புழுக்கமான காரிருளில் இந்த அழு குரல்கள் வடபுலத்தை யும் வெண்பனி அடர்ந்த வெட்ட வெளிகளை யும் பனிப் புயலின் சீழ்க்கையையும் ஓநாய் களின் தொலைதூர ஊளையையும் நினைவு படுத்தின...

பின்னர் கோணல் கண் மாதுக்குக் காய்ச் சல் அடித்தது. அவள் கித்தான் தூக்கு படுக் கையில் நகருக்கு எடுத்துச் செல்லப்பட்டாள். அவள் வெடவெடத்தாள், 'ம்மா' வென்று கத்தி னாள்–கல்லறை வெளியையும் மணலையும் பற்றிய தனது பாட்டைத் தொடர்பவள் போல.



படிப்பகம்

...காற்றில் மூழ்கி மஞ்சள் தலை மறைந்தது.

நான் சிற்றுண்டியை முடித்து, பாத்திரத்துத் தேனை இலைகளால் மூடி, பயணப் பையைக் கட்டி, கார்னல் கைத்தடியால் ஒற்றையடிப் பாதையின் கெட்டித் தரையில் இடித்தவாறு, முன்னே சென்றவர்களைத் தடம் பற்றி நிதானமாகத் தொடர்ந்து நடை போட்டேன்.

இதோ, பாதையின் குறுகலான, சாம்பல் நிறப் பகுதியை அடைந்துவிட்டேன். வலப்புறம் ஆழ் நீலக் கடல் அலையடித்துக் கொண்டிருந்தது. கண்ணுக்குப் புலப்படாத தச்சர்கள் பல்லாயிரம் இழைப்புளிகளால் அதை இழைப்பது போலவும் வெள்ளைச் சீவல் சுருள் காற்றினால் விரட்டப்பட்டுச் சரசரப்பொலியுடன் கரைக்கு ஓடிவருவது போலவும் தோன்றியது. காற்றில் ஈரமும் வெதுவெதுப்பும் உடல் நலம் உள்ள நங்கையின் மூச்சு போன்ற மணமும் நிறைந்திருந்தன. துருக்கியப் பாய்மரக் கப்பல் ஒன்று இடப் பக்கம் ஒருச் சாய்ந்து சுகுமுக்கு அலைகளில் வழுக்கிச் சென்றது. அதன் பாய் காற்றினால் உப்பியிருந்தது, சுகுமில் இருந்த மிடுக்குள்ள பொறியாளன் தன் பருத்த கன்னங்களை உப்பிக் கொண்டது போல. அவன் நிரம்ப ஆழ்ந்த மனிதன். சில ருஷ்யச் சொற்களை மட்டும் ஏனோ அவன் சிதைத்து உச்சரித்தான்.

‘‘இந்தா, சும்மா இரு! நீ பெரிய வில்ல



8—1227

www.padippakam.com

னாய் இருக்கலாம், ஆனாலும் நான் உடனே உன்னைப் போலீசிடம்...''

ஆட்களைப் போலீசிடம் அனுப்புவதை அவன் விரும்பினான். ஒருவேளை வெகு காலத்துக்கு முன்பே கல்லறைப் புழுக்கள் அவனுடைய உடலை எலும்புகள் உட்படத் தின்று தீர்த்திருக்கும் என்று எண்ண உவப்பாய் இருந்தது.

...நடப்பது காற்றில் மிதப்பது போல எளிதாக இருந்தது. இன்பமான எண்ணங்களும் பலவிதமான நினைவுகளும் மனத் திரையில் மெதுவான தட்டாமாலை சுற்றின. உள்ளத்தில் நடந்த இந்தத் தட்டாமாலை, கடல் அலைகளின் வெண் முடிகள் போன்றது. அலை முடிகள் மேற்பரப்பில் தென்பட்டன. உள்ளே, ஆழத்தில், அமைதி நிலவியது. கடல் ஆழத்தில் நீந்தும் வெள்ளி மீன்கள் போல இளமையின் ஒளி மயமான, விகுவுள்ள வருங்கால நம்பிக்கைகள் அங்கே ஓசையின்றி நீந்தின.

கடல் பாதையையும் ஈர்த்தது. அது வளைந்து நெளிந்து மணல் பகுதிக்குப் பக்கத்தில் ஊர்ந்து சென்றது. அங்கே அலைகள் பாய்ந்து வந்தன. புதர்களுக்கும் அலை முகத்தைக் காண ஆசை உண்டாயிற்று. அவை வெற்று வெளி போன்ற நீரின் நீலப் பரப்பை நோக்கித் தலை அசைப்பவை போலப் பாதைப் பட்டையின் குறுக்காக முடி தாழ்த்தின.

காற்று மலையிலிருந்து அடித்தது. மழை பெய்வதற்கான குறி இது.

...புதர்களில் கேட்டது தணிந்த முனகல்—



படிப்பகம்

www.padippakam.com

மனிதனின் முனகல், உறவுப் பிணைப்பால் உள்ளத்தை எப்போதும் குலுக்கி எடுப்பது.

புதர்களை விலக்கியவன் மஞ்சள் தலைக்குட்டைக்காரி செஸ்ட்நட் அடி மரத்தில் முதுகைச் சாய்த்தவாறு உட்கார்ந்திருக்கக் கண்டேன். அவளுடைய தலை தோள் மேல் தொங்கி இருந்தது. வாய் ஒழுங்கின்றித் திறந்து கிடந்தது. விழிகள் பிதுங்கி இருந்தன, வெறிக் களை காட்டின. அவள் பிரமாண்டமான வயிற்றின் மேல் கைகளை வைத்துக் கொண்டிருந்தாள். இயற்கைக்கு மாறாகப் பயங்கரமான முறையில் மூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். அதனால் அவளுடைய வயிறு முழுவதும் வலிப்பு வந்தது போலத் துள்ளிற்று. அவளோ அதைக் கைகளால் அழுத்தி வைத்துக் கொண்டு மஞ்சள் நிற ஓநாய்ப் பற்களைக் காட்டி 'ம்மா' வென்று கம்மலாகக் கதறிக் கொண்டிருந்தாள்.

''என்ன, யாராவது இடித்துக் கொண்டார்களோ?'' என்று அவள் பக்கம் குனிந்து கேட்டேன். அவள் சாம்பல் புழுதியில் வெறுங் கால்களை ஈ போன்று முறுக்கிக் கொண்டாள். கனத்த தலையை ஆட்டியவாறு கரகரத்தாள்:

''போடா-ஆ... வெட்கம் கெட்டவனே... போய்த்-தொலை...''

விஷயம் என்ன என்று நான் புரிந்து கொண்டேன்—நான் ஏற்கெனவே ஒரு தரம் இதைக் கண்டு இருந்தேன். சந்தேகமின்றி மிரண்டு போய், துள்ளி விலகினேன். அவள் உரக்க, நீளமாக ஊளையிட்டாள். வெடித்து



8*

படிப்பகம்

www.padippakam.com

விடும் போலிருந்த அவளது விழிகளிலிருந்து கலங்கிய கண்ணீர் துளிகள் தெறித்து உப்பிப் புடைத்த ஆழ் சிவப்பு முகத்தில் வழிந்தன.

இதனால் நான் அவளிடம் திரும்பிவர நேர்ந்தது. பயணப் பை, தேநீர்க் கொதிகலம், தேன் பாத்திரம் ஆகியவற்றைத் தரையில் வைத்துவிட்டு, அவளைத் தரையில் மல்லாக்கக் கிடத்தி அவளுடைய முழங்கால்களை மடக்க முயன்றேன். அவள் என் முகத்திலும் மார்பிலும் அறைந்து என்னை நெட்டித் தள்ளினாள். பின்பு குப்புறப் புரண்டு பெண் கரடி போன்று உறுமிக்கொண்டும் கரகரத்துக்கொண்டும் தவழ்ந்து புதர்களுக்கு உள்ளே போய்விட்டாள்:

"வழிப்பறிக்காரா... சாத்தானே..."

கைகள் மடங்கி விடவே அவள் விழுந்து முகத்தைத் தரையில் புதைத்துக்கொண்டாள். பின்பு வலிப்பு வந்தவள் போலக் கால்களை விறைப்பாக நீட்டியவாறு மீண்டும் ஊளையிட்டாள்.

நான் கிளர்ச்சியால் பரபரப்படைந்து, இந்தக் காரியம் பற்றி அறிந்திருந்த எல்லாவற்றையும் விரைவாக நினைவுபடுத்திக்கொண்டு அவளை மல்லாக்கத் திருப்பி, கால்களை மடக்கினேன். அதற்குள் அவளுடைய கருப்பை வெளியாகிவிட்டது.

"படு, இதோ பிறந்துறும்..."

நான் கடலுக்கு ஓடி, சட்டைக் கைகளைச் சுருட்டிக் கொண்டு கைகளைக் கழுவிய பின்



படிப்பகம்

www.padippakam.com

திரும்பி, பேறு கால மருத்துவன் ஆகி விட்டேன்.

அந்த மாது நெருப்பில் விழுந்த பிர்ச் மரப் பட்டை போல நெளிந்தாள், தன்னைச் சுற்றித் தரையில் கைகளால் அடித்தாள், பின்பு வாடிய புல்லைப் பிடுங்கி வாயில் அடைத்துக் கொள்ள இடை விடாது முயன்றாள். இரத்தப் பெருக்கால் சிவந்து வெறித்து நோக்கிய விழிகள் கொண்ட அவளுடைய முகம் மனிதத்தன்மையை இழந்து பயங்கரத் தோற்றம் அளித்தது. அவள் அதில் மண்ணை வாரிச் சொரிந்து கொண்டாள். அதற்குள் கருப்பை வாய் திறந்து பனிக்குடம் உடைந்து தலை வெளிப்பட்டது. நான் அவளுடைய கால்களின் இசிவை அடக்கி, குழந்தைக்கு உதவவும், அவள் வலியால் கோணிய தனது கதறும் வாய்க்குள் புல்லைத் திணித்துக் கொள்ளாதபடி பார்த்துக் கொள்ளவும் வேண்டி இருந்தது...

நாங்கள் ஒருவரை ஒருவர் கொஞ்சம் திட்டிக் கொண்டோம்—அவள் பற்களின் ஊடாகவும், நான் தணிந்த குரலிலும். அவள் வலியினாலும் சந்தேகமின்றி வெட்கத்தினாலும் வாய்க்குள் திட்டினாள். நானோ, கூச்சத்தாலும் வேதனை உண்டாகும் அளவுக்கு அவள் மேல் ஏற்பட்ட இரக்கத்தாலும் அவ்வாறு செய்தேன்...

"க-கடவுளே," என்று கரகரத்தாள் அவள். அவளுடைய நீல உதடுகள் கடிபட்டும் நுரைத்தும் இருந்தன. வெளியில் திடீரென நிறம் இழந்தன போன்ற விழிகளில் தாய்மையின்



படிப்பகம்

www.padippakam.com

தாங்க முடியாத துன்பத்தால் பொங்கிய கண்ணீர் ஆறாகப் பெருகியது. இரண்டாகப் பகுக்கப்பட்ட அவளுடைய மேனி முழுவதும் நெளிந்து துடித்தது.

"தொ-லைந்து போடா, வெட்கம்..."

பலங்குன்றிய, சுளுக்கிய கைகளால் அவள் ஓயாமல் என்னைத் தள்ளினாள். நான் உறுதியுடன் சொன்னேன்:

"அசட்டுப் பெண்ணே, பெறு, சீக்கிரம், சாக்கிரதை..."

அவள் மேல் இரக்கத்தால் எனக்குக் கொடிய வேதனை உண்டாயிற்று, அவளுடைய கண்ணீர் என் விழிகளில் தெரித்தது போலத் தோன்றியது. துயரத்தால் நெஞ்சு சாம்பிப் போயிற்று. கூச்சலிட வேண்டும் போல் இருந்தது. நான் கூச்சலிட்டேன்:

"ஊம், சீக்கிரம்!"

இதோ, என் கையில் இருந்தான் மனிதன்—சிவந்தவன். கண்ணீரின் ஊடாகத் தான் என்றாலும், நான் பார்த்தேன்—அவன் செக்கச் செவேலென்று இருந்தான், அதற்குள், உலகத்தின் மேல் அவனுக்குக் கோபம் வந்துவிட்டது, தத்தளித்தான், சண்டை பிடித்தான், தாயுடன் இன்னும் இணைந்திருந்தாலும் காட்டுக் கத்தல் கத்தினான். அவன் விழிகள் இளநீலம். துவண்ட சிவப்பு முகத்தில் மூக்கு வேடிக்கையாக நசுங்கிக் கிடந்தது. உதடுகள் அசைந்தன, நீண்டன:

"ந்யா-ஆன்... ந்யா-ஆ-ன்..."

ஒரே வழுக்கல் அவன், சற்று அசந்து மறந்



படிப்பகம்

www.padippakam.com

தால் என் கைகளிலிருந்து நழுவிப் போய் விடுவான் போல. நான் முழந்தாளிட்டு அவனைப் பார்த்துக் கெக்கலித்தேன். அவனைக் கண்டதில் எனக்கு நிரம்ப மகிழ்ச்சி! இதனால் என்ன செய்ய வேண்டும் என்பதை மறந்து விட்டேன்...

''நறுக்கு...'' என்று தணிவாகக் கிசுகிசுத்தாள் தாய், அவளுடைய விழிகள் மூடி இருந்தன, முகம் சப்பிப் போயிருந்தது, பிணத்தினது போல மண் நிறமாகக் காணப்பட்டது. நீல உதடுகளோ அநேகமாக அசையவில்லை:

''கத்தியால்... துண்டி...''

பாரக்கில் என் கத்தி திருட்டுப் போய் விட்டது. நான் தொப்பூழ்க் கொடியைக் கடித்துத் துண்டித்தேன். பயல் பெருங்கத்தல் கத்தினான். தாயோ, புன்னகைத்தாள். நான் பார்த்தேன்: அவளுடைய ஆழங்காண முடியாத விழிகள் வியப்பூட்டும்படி மலர்ந்து நீலத் தழல் வீசிச் சுடர்ந்தன, கருமை படிந்த கை ஸ்கர்ட் பையைத் தடவித் தேடிற்று. கடிக்கப் பட்டு இரத்தம் கசிந்த உதடுகள் சலசலத்தன:

''வ-வலு... இல்லை... நாடா பையில்... தொப்பூழைக் கட்டுவதற்கு...''

நாடாவை எடுத்துக் கட்டினேன். அவள் முன்னிலும் அதிக ஒளியுடன் முறுவல் செய்தாள். ஒளியாலும் எழிலாலும் இந்தப் புன்னகை என் கண்களைக் கூசச் செய்தது.

''சரிப்படுத்திக் கொள். நான் போய் குழந்தையைக் கழுவுகிறேன்...''

அவள் நிம்மதி இன்றி முணுமுணுத்தாள்:



படிப்பகம்

www.padippakam.com

‘‘இந்தா, கவனமாக... சாக்கிரதையாய் இரு என்கிறேன்...’’

இந்தச் சிவப்பு மனிதப் பிரகிருதிக்கு சாக்கிரதை எதுவும் தேவைப்படவில்லை. அவன் முட்டியை இறுக்கிக் கொண்டு தன்னோடு சண்டைக்கு இழுப்பவன் போல வாள் வாளென்று ஓயாமல் கூப்பாடு போட்டான்:

‘‘ந்யா-ஆன்... ந்யா-ஆன்...’’

‘‘நீ தான், நீ தான்! இன்னும் உறுதியாக உன்னை நிலை நாட்டிக்கொள், தம்பி, இல்லாவிட்டால் மற்றவர்கள் தாமதமின்றித் தலையை வெட்டி விடுவார்கள்...’’

எங்கள் இருவர் மீதும் குதூகலமாக நீரை வாரியடித்த நுரைத்த கடல் அலை தன்னை முதன் முறை தழுவிக்கொண்ட போது அவன் தனிப்பட்ட கோபத்துடனும் உரக்கவும் கத்தினான். பின்னர், நான் அவனுடைய மார்பையும் முதுகையும் தட்டத் தொடங்கியதும் அவன் கண்களை இடுக்கிக் கொண்டு கை கால்களை உதைத்தவாறு காதைத் துளைக்கும்படி வீரிட்டான். அலைகள் ஒன்றன் பின் ஒன்றாக அவனை முழுக் காட்டின.

‘‘கத்து, அரியோல்காரா! மூச்சு எட்டு மட்டும் கத்து...’’

நாங்கள் அவன் தாயிடம் திரும்பிய போது அவள் மீண்டும் கண்களை மூடி உதடுகளைக் கடித்தவாறு நஞ்சு வெளியாவதற்கான வலியால் துடித்துக்கொண்டு படுத்திருந்தாள். ஆயினும், இந்த வேதனைக்கு இடையிலும், முனை கல்களுக்கும் முக்கல்களுக்கும் ஊடாக என்



படிப்பகம்

www.padippakam.com

காதுகளுக்கு எட்டியது அவளுடைய மரண வேதனை நிறைந்த கிசுகிசுப்பு:

''கொடு... கொடு அவனை...''

''பொறுக்கட்டும்.''

''கொடேன்...''

நடுங்கும் கைகளால் தட்டித் தடவி, சட்டையின் மார்புப் பொத்தான்களைக் கழற்றினாள். அவளுடைய மார்பகத்தை வெளியில் எடுக்க நான் உதவினேன். அது ஒரு இருபது குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்காக இயற்கையால் நிறைக்கப் பட்டிருந்தது. துள்ளித் துடித்துக் கொண்டிருந்த குஞ்சுப் பயலை அவளுடைய கதகதப்பான உடம்பை ஒட்டினாற் போலக் கிடத்தினேன். அவன் சட்டென்று விஷயத்தைப் புரிந்துகொண்டு அலறலை நிறுத்தினான்.

''புனிதக் கன்னியே, தாயே மரியம்மா,'' என்று துணுக்குற்று முக்கியவாறு பறட்டைத் தலையைப் பயணப் பை மீது இடமும் வலமுமாக உருட்டினாள் தாய்.

திடீரென்று தணிந்த குரலில் கத்தி விட்டு மௌனமானாள். பிறகு அவளுடைய எல்லை இன்றி எழிலார்ந்த விழிகள் – பிள்ளைத் தாய்ச்சியின் புனித விழிகள் – மீண்டும் திறந்தன. அந்த நீல விழிகள் நீல வானை நோக்கின. நன்றியும் மகிழ்ச்சியும் குமிழியிடும் புன்னகை அவற்றில் ஒளிர்ந்து மறைந்தது. கையைச் சிரமத்துடன் உயர்த்தி, தனக்கும் குழந்தைக்கும் நிதானமாகச் சிலுவைக் குறி இட்டாள்...



படிப்பகம்

www.padippakam.com

‘‘போற்றி உனக்கு, புனிதத் தேவ மாதாவே... ஓ, போற்றி உனக்கு...’’

கண்களின் ஒளி மறைந்தது, விழிகள் ஆழ்ந்தன. தாய் அநேகமாக மூச்சுக் கூட விடாமல் நெடு நேரம் பேசாதிருந்தாள். பின்பு காரியப் பாங்கான, உறுதியான குரலில் சொன்னாள்:

‘‘தம்பி, என் பயணப் பையைத் திற...’’

அவிழ்த்துத் திறந்தேன். அவள் என்னை உற்றுப்பார்த்து, பலவீனமாக முறுவலித்தாள். வற்றிய கன்னங்கள் மீதும் வியர்த்த நெற்றி மீதும் செம்மை இலேசாகப் படர்ந்தது போல் இருந்தது.

‘‘அப்பால் போயேன் சற்றே...’’

‘‘நீ ரொம்பத்தானே அலட்டிக் கொள்ளாதே...’’

‘‘சரி, சரி... அப்பாலே போ...’’

புதர்களில் சற்று தூரம் நகர்ந்தேன். இருதயம் களைத்துப் போனது போல் இருந்தது, ஆனால் நெஞ்சகத்தில் ஏதா இனிய பறவைகள் மெல்லெனப் பாடிக் கொண்டிருந்தன. கடலின் ஓயாத அலையோசையுடன் சேர்ந்து இந்தப் புள்ளொலி ஓர் ஆண்டுக் காலம் கேட்டுக் கொண்டிருக்கலாம் போல அவ்வளவு நன்றாக இருந்தது...

அருகே எங்கோ சிலம்பிக் கொண்டிருந்தது ஓர் ஓடை—ஒரு மங்கை தன் காதலனைப் பற்றித் தோழியிடம் கதை சொல்லிக் கொண்டிருந்தது போல...

புதர்களுக்கு மேலே எழுந்தது தலை.



படிப்பகம்

www.padippakam.com

அதில் மஞ்சள் தலைக்குட்டை சரியாகக் கட்டி யிருந்தது.

"அடடா, நீ நேரத்துக்கு முன்னே அலட்டிக் கொள்ளத் தொடங்கி விட்டாயே!"

செடியின் கிளையைத் தாங்கலாகப் பிடித் துக்கொண்டு அவள் உட்கார்ந்திருந்தாள். அவ ளது குருதியை யாரோ முற்றும் உறிஞ்சிக் குடித்துவிட்டது போன்று சாம்பல் பூத்த முகம் ஒரு துளி கூட இரத்தம் இன்றி வற்றிக் கிடந் தது. கண்களின் இடத்தில் பிரமாண்டமான நீல எரிகள் இருந்தன. அவள் கனிவுடன் கிசு கிசுத்தாள்:

"எப்படித் தூங்குகிறான், பார்..."

அவன் நன்றாகத் தான் தூங்கினான், ஆனால் என் கருத்துப்படி மற்றக் குழந்தை களை விட எவ்வகையிலும் மேலாக அல்ல. வித்தியாசம் ஏதாவது இருந்தால் அது சூழ லைப் பொருத்திருந்தது. புதருக்கு அடியில், பளிச்சிடும் வண்ணங்கள் கொண்ட இலையுதிர் காலப் பழுப்புகளின் குவியல் மீது கிடந்தான். இத்தகைய செடிகளும் மரங்களும் அரியோல் மாநிலத்தில் வளர்வதில்லை.

"தாயே, நீ படுத்துக்கொள்ளேன்..."

"இல்-லை," என்று தலையை அசைத் தாள் அவள், தொய்ந்த கழுத்தும் தானு மாக. "நான் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத் திக்கொள்ள வேண்டும், பின்பு நடந்து போக வேண்டும், அதற்குத் தான், அதன் பே ரென்ன..."

"அச்சேம்சிராவுக்கா?"



படிப்பகம்

''ஆ-ஆமாம்! எங்களவர்கள் இதற்குள் ரொம்பத் தொலை போயிருப்பார்கள்...''

''உன்னால் நடக்க முடியுமா என்ன?''

''தேவமாதா இருக்கிறாளே? துணை செய் வாள்...''

நல்லது, இவள் தேவமாதாவோடு சேர்ந்து போகிறாள் என்றால் நான் வாயை மூடிக் கொள்ள வேண்டியதுதான்!

திருப்தியின்றி உப்பிய சிறு முகத்தின் மீது புதருக்கு அடியில் பார்வை செலுத்தினாள் அவள். அன்பு ஒளிரும் இதமான கதிர்கள் அவளது விழிகளிலிருந்து பொழிந்தன. அவள் உதடுகளை நக்கிக்கொண்டு கைகளின் மெது வான அசைவால் மார்பைத் தடவினாள்.

நான் நெருப்பு மூட்டிக் கற்களை நெருக்க மாக இணைத்துத் தேநீர்க் கொதிகலத்தை அவற்றின் மேல் வைத்தேன்.

''தாயே, இதோ தேநீர் பருகத் தரு கிறேன்...''

''ஓ? குடிக்கக் கொடு, தம்பி... என் மார் பெல்லாம் வறண்டு கிடக்கிறது...''

''ஆமாம், அதென்ன, ஊர்க்காரர்கள் உன் னை விட்டுவிட்டு போய் விட்டார்கள்?''

''அவர்கள் விடவில்லை—எதற்காக? நான் தான் பின் தங்கி விட்டேன். அவர்கள் குடித் திருந்தார்கள். அவர்கள் போனதே நல்லது, இல்லாவிட்டால் அவர்களுக்கு முன்னால் நான் எப்படி நீட்டிப் படுத்திருக்க முடியும்...''

என்னை ஒரு பார்வை பார்த்து விட்டு

www.padippakam.com

முழங்கையால் முகத்தை மூடிக் கொண்டாள், பின்பு இரத்தத்தை உமிழ்ந்து விட்டுக் கூச்சத் துடன் குறுநகை செய்தாள்.

''தலைச்சனா?''

''ஆமாம்... நீ—யார்?''

''ஒருவகையில் பார்த்தால் மனிதன்...''

''சந்தேகம் இல்லாமல் மனிதன்! கலியா ணம் ஆகிவிட்டதா?''

''இன்னும் அதற்கு நான் தகுதி பெற வில்லை...''

''புளுகுகிறாயா?''

''எதற்காக!''

அவள் விழிகளைத் தாழ்த்திக் கொண்டு சற்று யோசனை செய்தாள்:

''அப்படியானால் பெண்டுகள் காரியம் உனக்கு எப்படித் தெரிந்தது?''

இப்போது—புளுகுவேன் என்று எண்ணிக் கொண்டேன்.

''இதற்குப் படித்தேன். மாணவன்—கேள் விப்பட்டிருக்கிறாயா?'' என்று சொன்னேன்.

''கேள்விப்படாமல் என்ன! எங்கள் ஊர்ப் பாதிரியாரின் மூத்த மகனும் மாணவன் தான், பாதிரியாகப் படிக்கிறான்...''

''நானும் அந்த மாதிரித்தான். நல்லது, தண்ணீர் கொண்டுவரப் போகிறேன்...''

நங்கை தலையை மகன் பக்கம் சாய்த்து, அவன் மூச்சு விடுகிறானா என்று உற்றுக் கேட் டாள். பின்பு கடலின் புறம் பார்வை செலுத்தி னாள்.

''எனக்கு உடம்பு கழுவிக்கொண்டால் நல்



படிப்பகம்

லது, தண்ணீர் எப்படிப்பட்டதோ தெரியவில்லை... என்ன தண்ணீர் இது? உப்புக்கரிக்கிறது, கசக்கவும் செய்கிறது...''

''இதனாலேயே உடம்பு கழுவிக்கொள். நல்ல தண்ணீர்!''

''மெய்யாகவா?''

''மெய்யாக. ஓடை நீரை விட இது வெது வெதுப்பானதும் கூட. இங்கே ஓடைத் தண்ணீர் பனிக்கட்டி போல் குளிரும்...''

''நீ தெரிந்தவன் சொல்லுகிறாய், அப்படியே செய்கிறேன்.''

ஓர் அப்காசியன் குதிரையை மெது நடையாக ஓட்டியவாறு உறங்கி வழிந்தபடிச் சவாரி செய்து கொண்டு வந்தான். அவனுடைய தலை மார்பின் மேல் தொங்கியது. சிறு குதிரையின் உடல் முழுதிலும் தசைநார்கள் விரைத்து நின்றன. அது காதுகளை நாற்புறமும் திருப்பிக் கரிய வட்ட விழியால் எங்கள் பக்கம் நோக்கிச் செருமிற்று. சவாரிக்காரன் மென் மயிர்த் தோல் தொப்பி அணிந்த தலையைச் சாக்கிரதையாக உயர்த்தி எங்கள் பக்கம் கண்ணோட்டி விட்டு மறுபடி தலையைத் தாழ்த்திக் கொண்டான்.

''இந்தப் பக்கத்து மனிதர்கள் பாங்கில்லாதவர்கள். இவர்களைப் பார்க்கப் பயமாகவும் இருக்கிறது,'' என்று தணிவாகச் சொன்னாள் அரியோல்காரி.

நான் போனேன். பாதரசம் போன்று ஒளியும் உயிர்த் துடிப்பும் உள்ள நீர்த் தாரை கற்களில் தத்தியவாறு பண் மிழற்றிக் கொண்



படிப்பகம்

டிருந்தது. இலையுதிர் காலப் பழுப்புகள் அதில் களிப்புடன் கரணம் அடித்துக் கொண்டிருந்தன. அற்புதம்! நான் கைகளையும் முகத்தையும் கழுவிக் கொண்டு கொதிகலம் நிறையத் தண்ணீர் முகந்து கொண்டேன். திரும்பிய நான் அந்த மாது கலவரத்துடன் சுற்றுமுற்றும் கண்ணோட்டியவாறு தரையில், பாறைகள் மீது தவழ்வதைப் புதர்களின் ஊடாகக் கண்டேன்.

''உனக்கு என்ன வேண்டும்?''

அவள் பயந்து போனாள். அவளுடைய முகம் சாம்பல் நிறமாயிற்று. அவள் எதையோ தனக்கு அடியில் மறைத்தாள். நான் விஷயத்தைப் புரிந்து கொண்டேன்.

''என்னிடம் கொடு, நான் புதைக்கிறேன்...''

''ஐயோ, தம்பி! அது எப்படி? குளியறை முகப்பில், தரைக்கு அடியில் புதைக்க வேண்டும் நம் வழக்கப்படி...''

''இங்கே குளியறை எப்போது கட்டி முடியும் என்று யோசித்துப் பார்!''

''நீ கேலிப் பேச்சு பேசுகிறாய். நானோ அஞ்சுகிறேன்! ஏதாவது விலங்கு தின்று விட்டாலோ... நஞ்சுப் பொதியைப் பூமிக்கு அல்லவா கொடுக்க வேண்டும்...''

அவள் ஒரு பக்கம் திரும்பிக்கொண்டு ஈரமான, கனத்த முடிச்சை என்னிடம் கொடுத்துவிட்டு, தணிவாக, கூச்சத்துடன் வேண்டிக் கொண்டாள்:

''இந்தா, நீ—இதை கொஞ்சம் நன்றாக

வே, அதிக ஆழமாகப் புதை, இயேசுவுக்காக, என் மகன் மேல் இரக்கம் கொண்டு, காரியத்தை நல்லபடியாகச் செய்...''

...நான் திரும்பிய போது அவள் கடலிலிருந்து வருவதைக் கண்டேன். கையை முன்னே நீட்டியவாறு தள்ளாடி நடந்தாள். அவளுடைய ஸ்கர்ட் இடுப்பு வரை நனைத்திருந்தது. ஆனால் முகத்தில் லேசாகச் செம்மை படரத் தொடங்கி இருந்தது. அது உள்ளிருந்து ஒளி வீசுவது போலத் தோன்றியது. நான் அவளைத் தாங்கலாகப் பிடித்து நெருப்பருகே கொண்டு விட்டேன். வியப்பு மேலிட எண்ணிக் கொண்டேன்:

''எப்பேர்ப்பட்ட விலங்கு ஆற்றல் இவளிடம்!''

பிறகு இருவரும் தேனுடன் தேநீர் பருகினோம். அவள் என்னிடம் தணிந்த குரலில் கேட்டாள்:

''படிப்பை விட்டு விட்டாயா?''

''விட்டு விட்டேன்.''

''காசை எல்லாம் குடித்துக் கரியாக்கி விட்டாயோ?''

''கொஞ்சங் கூட மீதம் வைக்காமல், தாயே!''

''எப்படிப்பட்ட ஆள்தான் நீ! எனக்கு நினைவு இருக்கிறது, சுகுமில் இயக்குநரோடு நீ சாப்பாட்டுக்காகச் சண்டை பிடித்தாயே, அப்போது கவனித்தேன். அப்போதே நினைத்துக் கொண்டேன், இந்த ஆள் குடிகாரன், எதற்கும் அஞ்சாதவன் என்று...''

www.padippakam.com

வீங்கிய உதடுகளில் ஒட்டிக் கொண்டிருந்த தேனைச் சுவையுடன் நக்கியவாறு நீல விழிகளால் புதரடியில் ஓரப் பார்வை செலுத்திய வண்ணமாக இருந்தாள். அங்கே புது அரியோல்காரன் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தான்.

"இவன் எப்படித் தான் வாழப் போகிறானோ?" என்று பெருமூச்சுடன் என்னை ஏற இறங்கப் பார்த்தவாறு கூறினாள். "நீ எனக்கு உதவினாய், நன்றி... ஆனால் இது இவனுக்கு நல்லது தானா? அறியேன்..."

அவள் தேநீர் பருகி, உணவு அருந்தி விட்டுச் சிலுவைக் குறி இட்டுக் கொண்டாள். நான் என் சாமான்களை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்த போது அவள் தூக்க மயக்கத்துடன் ஆடி விழுந்தவாறு கண்ணயர்ந்தாள், மீண்டும் நிறம் மங்கி விட்ட விழிகளால் தரையைப் பார்த்தபடி எதைப் பற்றியோ எண்ணமிட்டாள். பின்பு எழுந்திருக்க முயன்றாள்.

"நீ என்ன, புறப்பட்டு விட்டாயா?"

"ஆமாம்."

"இந்தா, தாயே, சாக்கிரதை!"

"ஆனால் தேவ மாதா தான் துணை செய்வாளே?.. கொடு அவனை இப்படி!"

"இவனை நான் தூக்கிக் கொண்டு வருகிறேன்..."

நாங்கள் விவாதித்தோம். அவள் விட்டுக் கொடுத்தாள். இருவரும் தோளோடு தோள் சேர்த்து இணையாக நடந்தோம்.

அவள் குற்றம் செய்தவள் போன்று முறு





படிப்பகம்

www.padippakam.com

வலித்து, ''நான் விழுந்து விடாமல் இருப்ப தற்காக,'' என்று கூறி என் தோள் மேல் கையை வைத்தாள்.

ருஷ்ய நிலத்தின் புதிய வாழ்நன், எப்படி இருக்கும் என்று தெரியாத விதியினன், என் கைகளில் படுத்து ஆழ்ந்து நெடு மூச்சிழுத்தான். சீவல் சுருள்களின் வெள்ளை வலைப் பின்னல்கள் பூண்ட கடல் அலையடித்துச் சீறியது. புதர்கள் கிசுகிசுத்தன, பிற்பகலுக்கு மாறிய சூரியன் ஒளி வீசியது.

நாங்கள் மெதுவாக நடந்தோம். சில வேளைகளில் தாய் நின்றாள், ஆழ்ந்து மூச்சிழுத்து, தலையை நிமிர்த்திச் சுற்றுமுற்றும், கடலின் மீதும் காட்டின் மீதும் மலைகளின் மீதும் கண்ணோட்டினாள், பின்பு மகனுடைய முகத்தைப் பார்த்தாள். துன்பக் கண்ணீரால் உள்ளும் புறமும் கழுவப் பெற்ற அவளுடைய விழிகள் மீண்டும் அற்புதமாகத் தெளிந்து தீராத அன்பின் நீல நெருப்பாய் ஒளிர்ந்து சுடர்ந்தன.

ஒரு முறை நடுவில் நின்று, அவள் சொன்னாள்:

''கடவுளே, என் ஆண்டவனே! எவ்வளவு நன்றாய் இருக்கிறது எங்கும், என்ன அழகு! இப்படியே எல்லாம் நடந்தேறினால் நல்லது, எல்லாம், உலகத்தின் எல்லை விளிம்பு வரையில், நடந்தேறினால் நல்லது. இவன், என் மகன், வளரட்டும், கட்டில்லாமல், தாயின் அரவணைப்பில் வளர்ந்து பெரியவன் ஆகட்டும், என் கண்ணின் கருமணி...''



படிப்பகம்

www.padippakam.com

கடல் ஒலித்துக் கொண்டிருந்தது, இடையறாது ஒலித்துக் கொண்டிருந்தது...

1912

படிப்பகம்

www.padippakam.com

# முதல் காதலைப் பற்றி

...அப்போதுதான் விதி என்னைப் பயிற்றும் நோக்கத்துடன் முதல் காதலின் துன்பமும் இன்பமும் கலந்த உளக்கொந்தளிப்புகளை நான் அநுபவிக்குமாறு வைத்தது.

நண்பர் குழாம் அகா ஆற்றில் படகுகளில் செல்ல ஏற்பாடு செய்தது. இந்த உல்லாசப் பயணத்துக்கு க. தம்பதியரை அழைக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப் பட்டது. அவர்கள் அண்மையில் பிரான்சிலிருந்து திரும்பி வந்திருந்தார்கள், ஆனால் நான் அவர்களை இன்னும் அறிமுகம் செய்து கொள்ளவில்லை. மாலையில் அவர்கள் வீட்டுக் குப் போனேன்.

அவர்கள் ஒரு பழைய கட்டடத்தின் நிலவ றையில் வசித்து வந்தார்கள். வீட்டுக்கு எதிரே சேற்று நீர்க் குட்டம் வீதியின் இரு மருங்கு களையும் இணைத்தவாறு தேங்கிக் கிடந்தது.

© தமிழ் மொழிபெயர்ப்பு, **முன்னேற்றப் பதிப்பகம், 1979.**



படிப்பகம்

www.padippakam.com

வசந்த காலம் முழுவதிலும் அநேகமாகக் கோடைக் காலம் அனைத்திலும் கூட அது உலர்ந்ததில்லை. காகங்களும் நாய்களும் அதை முகம் பார்க்கும் கண்ணாடியாகப் பயன் படுத்தின. பன்றிகள் அதில் முழுக்காடின.

ஓரளவு சிந்தனையில் ஆழ்ந்திருந்த நான் அறிமுகம் அற்றவர்களின் வீட்டில் மலையிலிருந்து உருளும் கல் போலத் திடுமெனப் புகுந்து, அதில் வசித்தவர்களுக்கு விந்தையான தடுமாற்றம் ஏற்படுத்தினேன். நடுத்தர உயரமுள்ள ஒரு பருத்த மனிதன் அடுத்த அறையை அடைத்தவாறு கருங்கும்மென்று என் முன்னே நின்றான். அவன் சணல் நிறப் புதர்த் தாடி வைத்திருந்தான். அவனுடைய இள நீல விழிகளின் பார்வையில் நல்லியல்பு ததும்பியது.

ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டு வெடுக்கெனக் கேட்டான்:

"உங்களுக்கு என்ன வேண்டும்?"

அதோடு, போதிக்கும் தொனியில் கூறினான்:

"உள்ளே வருவதற்கு முன்னால் கதவைத் தட்ட வேண்டும்!"

பெரிய வெள்ளைப் பறவை போன்ற ஒன்று அவனுடைய முதுகுக்குப் பின்னால், அறையின் மங்கலில் பதற்றத்துடன் நடமாடுவதும் துடிதுடிப்பதுமாக இருந்தது. மகிழ்ச்சி பொங்கும் குரல் கணீரென ஒலித்தது:

"அதிலும், மணமானவர்களின் இருப்பிடத்துக்குள் வந்தால்..."



படிப்பகம்

www.padippakam.com

எனக்கு வேண்டியவர்கள் அவர்கள் தானா என்று நான் கோபத்துடன் கேட்டேன். வசதியுள்ள கடைக்காரன் போல இருந்த மனிதன் ஆமென்றதும் நான் வந்த காரணத்தை விளக்கினேன்.

அந்த ஆள் சிந்தனையுடன் கம்பீரமாகத் தாடியைத் தடவியவாறு ''உங்களை இளார்க் அனுப்பியதாகச் சொல்கிறீர்களா?'' என்று உசாவியவன், அக்கணமே துணுக்குற்று, பம்பரமாய்த் திரும்பி வலியுடன் வீரிட்டான்:

''ஐயோ, ஓல்கா!''

இடுப்புக்குச் சற்றுக் கீழே இருப்பதால் பெயர் குறிப்பது அநாகரிகமாகக் கருதப்படும் உடற் பகுதியில் யாரோ அவனைக் கிள்ளி விட்டதாக அவனுடைய கையின் வலிப்பு கண்டது போன்ற இயக்கத்தைக் கொண்டு அனுமானித்தேன்.

நிலையைப் பிடித்துக் கொண்டு அவனது இடத்தில் நின்றாள் வடிவமைந்த மேனியளான ஒரு மங்கை. நீல விழிகளால் என்னை நோக்கிப் புன்னகை செய்து கொண்டிருந்தாள் அவள்.

''நீங்கள் யார்? போலீஸ்காரரா?''

''இல்லை, காற்சட்டைகள் மட்டுந்தான் இப்படி,'' என்று மரியாதையாக விடை இறுத்தேன். அவள் குலுங்கிச் சிரித்தாள்.

நான் நெடு நாள்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த அதே புன்னகை அவளுடைய விழிகளில் சுடர்ந்தமையால் அவளது கேள்வி எனக்கு வருத்தம் தரவில்லை. அவளுக்குச் சிரிப்பு மூட்டியது என்னுடைய ஆடை போலும்.



படிப்பகம்

www.padippakam.com

நான் போலீஸ்காரனுக்குரிய நீலக் காற்சட்டை அணிந்து இருந்தேன். சட்டையின் இடத்தில் குசினிக்காரன் வெள்ளை உடுப்பை மாட்டிக் கொண்டிருந்தேன். இது மிகவும் செளகரிய மானது, கோட்டின் பாத்திரத்தை இலாவகமாக வகிக்கிறது. அதோடு, கொக்கிப் பொத்தான் களால் இது கழுத்து வரை மூடி விடுவதால் சட் டை தேவையில்லை. வேறு ஒருவனுடைய வேட் டைப் பூட்சுகளும் இத்தாலியக் கொள்ளைக் காரனது போன்ற அகலத் தொப்பியும் என் னுடைய ஆடையணிகளுக்கு அருமையாக முத் தாய்ப்பு வைத்தன.

என் கையைப் பற்றி அறைக்குள் இழுத்து நாற்காலி அருகே தள்ளி, என் முன்னே நின்று கொண்டு அவள் கேட்டாள்:

‘‘எதனால் நீங்கள் இப்படிக் கோமாளித் தனமாக உடை அணிந்திருக்கிறீர்கள்?’’

‘‘ஏன் கோமாளித்தனமாக என்கிறீர்கள்?’’

‘‘கோபித்துக் கொள்ளாதீர்கள்,’’ என்று நட்புடன் மொழிந்தாள் அவள்.

வேடிக்கையான பெண். இவள் மேல் கோ பித்துக்கொள்ள யாரால் முடியும்?

தாடிக்காரன் கட்டில் மேல் அமர்ந்து கா கிதத்தில் புகையிலைத் தூளைப் போட்டு சிக ரெட்டு சுருட்டினான். அவனைக் கண்களால் குறித்து அவளிடம் கேட்டேன்:

‘‘இவர் தகப்பனாரா, அல்லது தமைய னாரா?’’

‘‘கணவர்!’’ என்று உறுதியுடன் விடை அளித்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

''என் கேட்டீர்கள்?'' என்று சிரிப்புடன் வினவினாள்.

நான் சற்று யோசித்து, அவளை உற்றுப் பார்த்துக் கூறினேன்:

''மன்னியுங்கள்!''

இந்த மாதிரிச் சுருக்கமான தோரணையில் உரையாடல் ஓர் ஐந்து நிமிடங்களுக்குத் தொடர்ந்தது. ஆனால், இந்த நங்கையின் முட்டை வடிவான குறுகிய முகத்தையும் அவளுடைய அன்பு ததும்பும் விழிகளையும் நோக்கியவாறு இந்த நிலவறையில் ஐந்து மணிகள், நாள்கள், ஆண்டுகள் அசையாமல் உட்கார்ந்திருக்க என்னால் முடியும் என்று நான் உணர்ந்தேன். அவளுடைய சிறிய வாயின் கீழுதடு மேலுதட்டைக் காட்டிலும் பருமனாக இருந்தது, சற்று வீங்கியது போல. அடர்ந்த செம்பழுப்புக் கூந்தல் குட்டையாகக் கத்திரிக்கப்பட்டு ஆடம்பரமான மென்மயிர்த் தொப்பி போலத் தலை மீது கவிந்திருந்தது. ரோஜா நிறக் காதுகள் மேலும் மெல்லிய செம்மை படர்ந்த கன்னிக் கன்னங்கள் மீதும் தலைமயிர்ச் சுருள்கள் சிதறிக் கிடந்தன. அவளுடைய கரங்கள் மிக அழகானவை—அவள் நிலையைப் பிடித்துக்கொண்டு அறை வாயிலில் நின்ற போது தோள் வரை திறந்த அந்தக் கரங்களை நான் கண்டேன். லேஸ் வைத்த அகன்ற கைகளுள்ள வெள்ளைச் சட்டையும் நன்கு தைத்த வெள்ளை ஸ்கர்ட்டுமாக ஏதோ சிறப்பான எளிமையுடன் அவள் உடை அணிந்திருந்தாள். ஆனால் அவளிடம் எல்லாவற்றையும் விடக்



படிப்பகம்

www.padippakam.com

கவனத்தை ஈர்த்தன அவளுடைய நீல விழி கள். ஒரே மகிழ்ச்சியும் அன்பும் பொங்க, நட் பார்ந்த ஆவல் ததும்ப அவை சுடர்ந்தன. இன்னொரு விவரமும் சந்தேகத்துக்கு இடம் அற்றது! இருபது வயது இளைஞனுடைய இத யத்துக்கு — வாழ்க்கையின் பண்பின்மையால் புண்படுத்தப்பட்ட இதயத்துக்கு — முற்றிலும் இன்றியமையாத இளநகை அவள் முகத்தில் மிளிர்ந்தது.

''இதோ மழை கொட்டப் போகிறது,'' என்று சிகரெட்டுப் புகையால் தாடிக்குப் புகை ஏற்றிய வாறு அறிவித்தான் அவளுடைய கணவன்.

நான் வெளியே பார்த்தேன்: மேகங்கள் அற்ற வானில் தாரகைகள் சுடர்ந்தன. நாம் இந்த ஆளுக்கு இடைஞ்சல் செய்கிறோம் என்று அப்போது நான் புரிந்து கொண்டு வெளி யேறினேன். என்னிடமே மறைத்தவாறு நெடுங் காலமாக நான் தேடிக் கொண்டிருந்த நப ரைச் சந்தித்த பின் ஏற்படுவது போன்ற உள் ளார்ந்த உவகை ஊற்றெடுக்கும் மனநிலையில் நடந்தேன்.

நீல விழிகளின் பரிவு ததும்பும் ஒளிர்வை வியந்து பாராட்டியவாறு இரவு முழுதும் திட லில் சுற்றிக்கொண்டிருந்தேன். இந்தச் சிறு நங்கை வயிறார உண்ட பூனையினைப் போன்ற நல்லியல்புள்ள விழியினனான தாடிக்காரச் சடனுக்கு ஏற்ற மனைவி அல்லவே அல்ல என்ற அசைக்க முடியாத உறுதி பொழுது புலர்கையில் எனக்கு ஏற்பட்டு விட்டது. எனக்கு அவள் மேல் இரக்கம் கூட உண்டாயிற்று—



படிப்பகம்

பாவம்! ரொட்டிப் பொருக்குகள் தாடியில் சிக்கிக்கொண்டிருக்கும் ஆளோடு அவள் வாழ வேண்டி இருக்கிறதே...

மறுநாள் நாங்கள் கலங்கிய அகா ஆற்றில் உல்லாசப் பயணம் புறப்பட்டோம். பல நிறச் சுண்ணக் களிமண்ணின் அகன்ற படிவுகள் செறிந்த செங்குத்துக் கரைகளின் கீழ் எங்கள் படகுகள் சென்றன. உலகு படைக்கப்பட்ட நாள் முதல் யாவற்றிலும் சிறந்த பகலாகத் திகழ்ந்தது அது. விழாக் கோலம் பூண்டு பளிச்சிட்ட வானில் சூரியன் அற்புதமாக ஒளி வீசியது. முதிர்ந்த ஸ்டிராபெரிப் பழங்களின் இன் மணம் ஆற்றுக்கு மேலே கமழ்ந்தது. தாங்கள் உண்மையில் அருமையானவர்கள் என்பதை எல்லா மனிதர்களும் நினைவுபடுத்திக் கொண்டார்கள். இதனால் அவர்கள் மீது மகிழ்ச்சி நிறைந்த அன்பு என் உள்ளத்தில் ஊறித் ததும்பியது. என் இதய அணங்கின் கணவன் கூட அருமையான ஆளாக எனக்குத் தென்பட்டான்: எந்தப் படகில் அவனுடைய மனைவி அமர்ந்திருந்தாளோ, எதில் நான் துடுப்பு தள்ளினேனோ, அதில் அவன் உட்காரவில்லை. நாள் முழுவதும் அவன் எடுத்துக் காட்டான அறிவுடன் நடந்து கொண்டான். பிரிட்டிஷ் பிரதமரான முதியவர் கிளாட்ஸ்டனைப் பற்றி மிக ஏராளமான சுவையுள்ள கதைகளை முதலில் சொன்னான், பின்பு முதல் தரமான பாலை ஒரு கலயம் நிறையக் குடித்தான், புதர் அடியே படுத்து குழந்தை

www.padippakam.com

போன்று அமைதியான தூக்கத்தில் மாலை வரை ஆழ்ந்திருந்தான்.

எங்கள் படகு சந்திப்பு இடத்தை முதலில் அடைந்தது என்று கூறவே தேவை இல்லை. என் அணங்கை நான் கைகளில் தூக்கிக் கொண்டு படகிலிருந்து இறங்கிய போது அவள் சொன்னாள்:

''நீங்கள் தாம் எவ்வளவு பலசாலி!''

நகரத்தின் எந்த மணிக் கூண்டையும் குப் புறக் கவிழ்த்த எனக்கு வல்லமை இருப்பதாக நான் உணர்ந்தேன். அவளைத் தூக்கிக் கொண்டு நகரம் வரையில்–ஏழு கிலோமீட்டர் கள்–நடக்க என்னால் முடியும் என்று அவளி டம் கூறினேன்.* அவள் என்னைப் பார்வை யால் வருடியவாறு மெல்லென நகைத்தாள். அவளுடைய விழிகள் பகல் முழுதும் என் முன் ஒளிர்ந்த வண்ணமாய் இருந்தன. அவை எனக் காகவே ஒளிர்கின்றன என்று எனக்குத் திண் ணமான உறுதி ஏற்பட்டது.

தான் முன்பு கண்டிராத, அக்கறைக்கு உரிய விலங்கை முதன் முறை சந்தித்த நங் கைக்கும் நங்கையின் அன்பு இன்றியமையாது தேவைப்பட்ட உடல் நலம் வாய்ந்த இளைஞு னுக்கும் முற்றிலும் இயல்பான விரைவுடன் அப்புறம் காரியங்கள் நடந்தன.

விரைவில் நான் அவளைப் பற்றிய விவரங் களைத் தெரிந்து கொண்டேன். தோற்றத்தில்

---

* நிச்சயமாக என்னால் முடிந்திருக்காது.–**ஆ-ர்.**



படிப்பகம்

www.padippakam.com

கன்னி போன்று இருந்தாலும் அவள் எனக்குப் பத்து வயது பெரியவள். பெலஸ்தோக் 'உயர்குல மங்கையர்' கல்லூரியில் பயின்றவள். பணிக்கால அரண்மனைக் காவல் தலைவனுடைய மணமகளாக இருந்தாள், பாரிசில் வசித்தாள், ஓவியம் வரையவும் பேறுகாலப் பணி புரியவும் கற்றாள். அவளுடைய தாயும் பேறு காலப் பணிமகளாக இருந்ததாகவும் நான் பிறந்த போது என்னைத் தன் கைகளில் ஏற்றதாகவும் பிற்பாடு தெரிய வந்தது. இந்த நிகழ்ச்சியில் ஊழின் முன் முடிவு ஏதோ இருந்ததாக எண்ணி நான் பெரிதும் பூரித்துப் போனேன்.

கலை மற்றும் இலக்கிய அறிஞர்களுடனும் நாடுகடந்த ருஷ்யர்களுடனும் பழக்கம், அவர்களில் ஒருவனோடு தொடர்பு, பாரிஸ், பீட்டர்ஸ்பர்க், வியன்னா நகர நிலவறைகளிலும் முகட்டறைகளிலும் அரை நாடோடி, அரைப் பட்டினி வாழ்க்கை—இவை எல்லாம் கல்லூரி மாணவியை விநோதமான முறையில் சிக்கலானவளாகவும் அபூர்வமாக வகையில் அக்கறைக்கு உரியவளாகவும் ஆக்கி இருந்தன. அவள் உல்லாசப் பறவை, டிட்மௌஸ் பறவை போன்று துடியானவள். அறிவுக்கூர்மை உள்ள இள மங்கையின் தீவிர ஆவலுடன் வாழ்க்கையையும் மனிதர்களையும் அவள் நோக்கினாள், பிரெஞ்சுப் பாட்டுக்களை உற்சாகமாகப் பாடினாள், அழகாக சிகரெட்டு பிடித்தாள், திறமையாகப் படம் வரைந்தாள், அரங்கில் மோசமில்லாமல் நடித்தாள், நன்றாக உடை



படிப்பகம்

www.padippakam.com

கள் தைக்கவும் தொப்பிகள் தயாரிக்கவும் வல்லவளாக இருந்தாள். பேறு காலப் பணியை அவள் மேற்கொள்ளவில்லை.

"நான் நான்கு தடவைகள் பிரசவம் பார்த்தேன். இவற்றில் எழுபத்தைந்து சத விகிதம் சாவுகள் நிகழ்ந்தன," என்று அவள் கூறினாள்.

இந்தக் காரணத்தால் மக்கள் தொகை அதிகரிப்பில் சுற்று வழி உதவி செய்வதை அவள் அடியோடு விட்டு விட்டாள். மரியாதைக்குரிய இந்தக் காரியத்தில் அவள் நேரடியாகப் பங்காற்றியதற்குச் சான்றாக விளங்கினாள் அவளுடைய பெண்—ஏறக்குறைய நான்கு வயதான இனிய, அழகிய சிறுமி. நன்றாகத் தெரிந்த, போதிய அளவு தெவிட்டிப் போன மனிதனைப் பற்றிப் பேசுவது போன்ற தோரணையில் அவள் தன்னைப் பற்றிப் பேசினாள். ஆனால் தன்னைப் பற்றிப் பேசுகையில் சில வேளைகளில் அவள் வியப்படைந்தவள் போலத் தோன்றுவாள், அவளுடைய விழிகள் அழகாக ஆழ்நிறம் கொள்ளும், லேசான கூச்சப் புன்னகை அவற்றில் ஒளிரும், மினுக்கிடும். குழப்பம் அடைந்த குழந்தைகள் இவ்வாறு புன்னகை செய்வதுண்டு.

அவளுடைய கூரிய, திட்பம் வாய்ந்த அறிவை நான் நன்றாக உணர்ந்தேன். பண்பாட்டில் அவள் என்னை விட உயர்ந்தவள் என்பதைப் புரிந்து கொண்டேன். மனிதர்களிடம் அவள் கடைப்பிடித்த தாராளமும் பெரியமனிதத் தன்மையும் உள்ள போக்கைக்



படிப்பகம்

www.padippakam.com

கண்டேன்; தெரிந்த எல்லாக் குமரிகளையும் மாதர்களையும் விட அவள் ஒப்பிட இயலாத அளவு அதிகக் கவர்ச்சி உள்ளவளாக இருந் தாள். அவள் சொன்ன கதைகளின் அசட்டை யான தொனி என்னை வியப்பில் ஆழ்த் தியது. எனக்கு இப்படித் தோன்றியது: புரட்சி மனப்பான்மை கொண்ட என் நண்பர்கள் அறிந்த யாவற்றையும் இவள் அறிந்திருக் கிறாள், அவற்றுக்கு மேற்கொண்டும் எதை யோ, அதிக முக்கியத்துவம் உள்ள எதையோ, அறிந்திருக்கிறாள். ஆனால், சில வேளை களில் ஆபத்தானவை என்றாலும் இனிமை யான, தான் அநுபவித்த குழந்தை விளை யாட்டுகளை வயது வந்தவனது போன்ற புன்ன கையுடன் கவனித்தவாறு, எதிலும் தான் நேராகப் பங்கெடுத்துக் கொள்ளாமல் எல்லா வற்றையும் இவள் தொலைவிலிருந்து நோட்ட மிடுகிறாள்.

அவள் வசித்த நிலவறை இரண்டு அறை களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒன்று சிறு சமை யற்கட்டு, மற்றது பெரிய அறை. சமையற்கட்டு முன்னறையாகவும் பயன்பட்டது. பெரிய அறை யில் வீதிப் பக்கம் மூன்று சன்னல்களும் குப்பை கூளங்கள் நிறைந்து அழுக்காய் இருந்த முற்றத்தின் பக்கம் இரண்டு சன்னல்களும் இருந்தன. அது செம்மானின் தொழிற் கூடத் துக்கு ஏற்ற இடமாக இருந்ததே தவிர, மா பெரும் புரட்சியின் புனித நகரான பாரிசில், மோலியர், பமார்ஷே, ஹியூகோ போன்ற இலக் கிய ஆசிரியர்களும் மேதை வாய்ந்த வேறு



படிப்பகம்

சான்றோர்களும் இருந்த நகரான பாரிசில் வாழ்ந்த நாகரிக நங்கைக்கு ஏற்றதாக இல்லை. ஓவியத்துக்கும் அதன் சட்டத்துக்கும் இன்னும் பல விஷயங்களில் பொருத்தமின்மை இருந்தது. இந்த எல்லா விஷயங்களும் எனக்குக் கடுமையாக எரிச்சலூட்டின, வேறு பல உணர்ச்சிகளோடு அந்த நங்கை மீது அனுதாபத்தைத் தூண்டின. ஆனால் எவை என் கருத்துப்படி அவளுக்கு அவமதிப்பவையாகத் தோன்ற வேண்டுமோ அவற்றில் எதையும் அவள் பொருட்படுத்தவில்லை.

அவள் காலை முதல் மாலை வரை வேலை செய்து கொண்டிருந்தாள். காலையில் சமையல்காரியாகவும் வெள்ளாட்டியாகவும் உழைத்தாள். பின்பு சன்னலோரமாகப் பெரிய மேசை அருகே அமர்ந்து நகரவாசிகளுடைய உருவப் படங்களின் போட்டோக்களைப் பார்த்துப் பென்சிலால் எழுதினாள், நிலப்படங்கள் வரைந்தாள், நில வரைபடங்களுக்கு வண்ணங்கள் தீட்டினாள், மாவட்டம் பற்றிய புள்ளி விவரத் தொகுப்புகள் தயாரிப்பதில் கணவனுக்கு உதவி செய்தாள். திறந்த நிலவறைச் சன்னலிலிருந்து அவளுடைய தலை மேலும் மேசை மீதும் தெருப் புழுதி சொரிந்தது, வழிப்போக்கர்களுடைய கால்களின் பருத்த நிழல்கள் காகிதங்களின் மேல் வழுக்கிச் சென்றன. அவள் வேலை செய்து கொண்டே பாடினாள். உட்கார்ந்து அலுத்துப் போன போது நாற்காலியுடன் நடனம் ஆடினாள், அல்லது பெண்ணோடு விளையாடினாள். அழுக்

www.padippakam.com

குப் பிடித்த வேலைகள் ஏராளமாக இருந்துங் கூட, பூனை போன்று எப்போதும் துப்புர வாக இருந்தாள்.

அவளுடைய கணவன் நற்பண்பு உள்ள வன், சோம்பேறி. மொழி பெயர்த்த நவீ னங்களை, சிறப்பாகத் தந்தை டியூமாவின் நவீனங்களை, படுக்கையில் படுத்தவாறு படிப் பதை அவன் விரும்பினான். ''இது மூளை உயிரணுக்களைப் புதுக்குகிறது,'' என்றான். ''கண்டிப்பான விஞ்ஞான நோக்கு நிலை யிலிருந்து'' வாழ்க்கையைப் பார்வையிடுவது அவனுக்குப் பிடித்தது. மதியச் சாப்பாட்டை அவன் ''உணவு ஏற்பு'' என்று அழைத் தான். சாப்பிட்ட பின் கூறினான்:

''உணவுக் கூழ் இரைப்பையிலிருந்து உட லின் உயிரணுக்களுக்கு எடுத்துச் செல்லப்படு வதற்கு முழு அமைதி தேவை.''

பின்பு, தாடியில் ஒட்டிக் கொண்டிருந்த ரொட்டிப் பொருக்குகளைத் தட்டிப் போக்க மறந்து, படுக்கையில் படுத்து, டியூமாவையோ கஸவியே த மான்தப்பேனையோ சில நிமி டங்கள் ஆழ்ந்து படித்தான். பிறகு ஒரு இரண்டு மணி நேரத்துக்கு மூக்கால் இசைப் பாங்குடன் சீழ்க்கை அடிப்பது போலக் குறட் டை விட்டான். அவனது மென்மையான வெளிர் மீசை கண்ணுக்குப் புலப்படாத ஏதோ ஒன்று அதில் ஊர்வது போல மெதுவாக அசைந்தது. உறங்கி விழித்ததும் விட்டத்து வெடிப்புகளை நெடுநேரம் சிந்தனையுடன் பார்த்துக் கொண்



படிப்பகம்

www.padippakam.com

டிருந்தான். திடீரென்று ஒரு விஷயத்தை நினைவு கூர்ந்தான்.

"நேற்று குஸ்மா பார்னெலின் கருத்துக்குத் தவறான விளக்கம் அல்லவா தந்தான்!"

உடனே குஸ்மாவின் தவற்றை எடுத்துக் காட்டுவதற்காகக் கிளம்பியவன் மனைவியிடம் சொன்னான்:

"இதோ பார், மாய்தான் வட்டத்தில் குதிரை இல்லாத விவசாயிகள் பற்றிய கணக்கீட்டை நீ எனக்காகத் தயவு செய்து முடித்து வை. நான் இதோ வந்து விடுகிறேன்!"

கிட்டத்தட்ட நள்ளிரவில், சில சந்தர்ப்பங்களில் இன்னும்கூட நேரம் கழித்து, மிகுந்த மனநிறைவுடன் திரும்பினான்.

"கேட்டாயா, இன்றைக்குக் குஸ்மாவை நொறுக்கி விட்டேன் நொறுக்கி! அந்தப் பித்தலாட்டக்காரனிடம் மேற்கோள்களை நினைவு வைத்துக் கொள்ளும் திறமை வெகுவாக வளர்ச்சி அடைந்திருக்கிறது, ஆனால் இதில் கூட நான் அவனுக்குச் சளைத்தவன் அல்ல. இன்னொன்று தெரியுமா – கிழக்கு நாடுகள் பற்றிய கிளாட்ஸ்டனுடைய கொள்கையை இந்த விசித்திரப் பிரகிருதி அறவே புரிந்துகொள்ளவில்லை!"

பினேயையும் ரிஷேயையும் மூளை ஆரோக்கியத்தையும் பற்றி அவன் ஓயாமல் பேசினான். மோசமான பருவ நிலையில் வீட்டில் தங்கி, தன் மனைவியின் மகளுக்குப் போதனை அளிப்பதில் ஈடுபட்டான். இந்த மகள்





படிப்பகம்

இரண்டு காதல் நிகழ்ச்சிகளின் நடுவே வழியில் எங்கோ தற்செயலாகப் பிறந்தவள்.

"லேலியா, நீ சாப்பிடும் போது நன்றாக மெல்ல வேண்டும். இது உணவுக் கூழை எளிதில் தன்மயமாகக் கூடிய இரசாயனப் பொருள்களின் கலவையாக விரைவில் மாற்ற இரைப்பைக்கு உதவி, உணவின் செரிமானத்தை இலேசாக்குகிறது."

மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு தன்னை "முழு அமைதி நிலைக்குக்" கொண்டுவருகையில் குழந்தையைப் படுக்கையில் கிடத்தி அதற்குக் கதை சொன்னான்:

"ஆயிற்றா, இரத்த வெறியனும் அதிகார வேட்டை கொண்டவனுமான முதலாம் நெப்போலியன் போனபார்ட் ஆட்சியை வஞ்சகமாகக் கைப்பற்றிய போது..."

இந்த விரிவுரைகளைக் கேட்டு அவனுடைய மனைவி வலிப்பு வந்தவள் போலக் கண்ணீர் மல்கக் கெக்கலி கொட்டினாள். ஆனால் அவள் மேல் கோபப்படவில்லை, அதற்கு அவனுக்கு நேரம் இல்லை, ஏனென்றால் விரைவில் தூங்கி விட்டான். சிறுமி அவனுடைய பட்டுத் தாடியுடன் விளையாடிக் கொண்டிருந்து விட்டு, பந்தாய்ச் சுருண்டு உறங்கிப் போனாள். இந்தக் குழந்தையோடு நான் நெருங்கிய நட்பு கொண்டேன். ஆட்சியை வஞ்சகமாகக் கைப்பற்றிய இரத்த வெறியனையும் அவன் மேல் ஜோசபீன் பொகார்னே கொண்டிருந்த துயரில் முடிந்த காதலையும் பற்றி பலெஸ்லாவ் ஆற்றிய விரிவுரைகளைக் காட்டி

www.padippakam.com

லும் நான் சொன்ன கதைகளை அவள் அதிக ஆர்வத்துடன் கேட்டாள். இது வேடிக் கையான பொறாமையை பலெஸ்லாவுக்கு ஏற் படுத்தியது.

“பெஷ்கோவ்! நான் எதிர்ப்பு தெரிவிக் கிறேன்! எதார்த்தத்தை அணுகும் போக்கின் அடிப்படைக் கோட்பாடுகளைக் குழந்தைக்கு முதலில் புகட்டுவது இன்றியமையாதது. அப் புறந்தான் எதார்த்தத்தை அறிமுகப்படுத்த வேண்டும். உங்களுக்கு ஆங்கிலம் தெரிந்திருந்து **குழந்தை உள்ளத்தின் நல இயல்** என்ற நூலைப் படிக்க முடிந்திருந்தால்...”

ஆங்கிலத்தில் அவன் அறிந்திருந்தவை இரண்டே சொற்கள்தாம் போலும்: குட் பை.

அவன் எனக்கு இரு மடங்கு மூத்தவன், ஆனாலும் எல்லாவற்றிலும் சடைநாய்க் குட்டி போல ஆவல் காட்டினான். ஊர் வம்பு பேசுவ தையும் ருஷ்யப் புரட்சிக் குழுக்களுக்கு மட்டும் இன்றி அயல்நாட்டுப் புரட்சிக் குழுக்களுக்கும் உள்ள எல்லா இரகசியங்களும் தனக்கு நன் றாகத் தெரியும் என்று காட்டிக்கொள்வதை யும் அவன் விரும்பினான். ஆனால் ஒன்று, அவன் உண்மையாகவே தகவல்களைத் தெரிந்து வைத்திருப்பது சாத்தியமே. மர்ம மான ஆட்கள் அவனிடம் அடிக்கடி வந்தார் கள். தற்செயலாகக் கோமாளி வேடம் போட நேர்ந்த துன்பியல் நடிகர்கள் போன்று அவர் கள் எல்லாரும் நடந்து கொண்டார்கள். சட்டப் புறம்பான மறைமுக நடவடிக்கைகளில் ஈடு பட்டிருந்த சபுனாயெவ் என்பவனை அவ



படிப்பகம்

www.padippakam.com

னுடைய வீட்டில் நான் ஒரு நாள் கண்டேன். இந்த ஆள் செம்பழுப்புப் பொய்த் தலை முடியும் பல நிற உடையுமாக இலங்கினான். தலைமுடியைத் திறமை இன்றி மாட்டி இருந் தான். உடை சிரிப்பூட்டும் வகையில் அவ னுக்குக் குறுகலாகவும் குட்டையாகவும் இருந் தது.

ஒரு நாள் பலெஸ்லாவின் வீட்டுக்குப் போன வன், துடியான ஒரு மனிதனைக் கண் டேன். அவன் தலை சிறியதாக இருந்தது. பார்வைக்கு மயிர்வினைஞனை மிகவும் ஒத் திருந்தான். கட்டம் போட்ட காற்சட்டையும் சாம்பால் நிறக் கோட்டும் கறுமுறுக்கும் சோடு களும் அணிந்திருந்தான். பலெஸ்லாவ் என் னைச் சமையலறைக்குள் தள்ளி நெருக்கிய வாறு இரகசியமாகக் கூறினான்:

"இவர் முக்கியமான வேலைக்காகப் பாரி சிலிருந்து வந்திருக்கிறார். கரலேன்கோவைப் பார்ப்பது இவருக்கு இன்றியமையாதது. ஆக வே நீங்கள் போய் இதற்கு ஏற்பாடு செய்யுங் கள்..."

நான் போனேன். ஆனால் வந்த ஆள் வீதியில் கரலேன்கோவுக்குக் காட்டப்பட்ட போது அவர் கூர்ந்த நோக்குடன் சொன்னாராம்:

"தயை செய்து வேண்டாம். இந்தப் பகட்ட னுக்கு என்னை அறிமுகப்படுத்தாதீர்கள்!"

பாரிஸ்காரனுக்காகவும் "புரட்சிக் குறிக் கோளுக்காகவும்" பலெஸ்லாவ் மனத்தாங்கல் கொண்டான். கரலேன்கோவுக்குக் கடிதம் எழுத இரண்டு நாள்கள் முயன்றான், சீற்றமும்



படிப்பகம்

www.padippakam.com

கடுமையும் நிறைந்தவை முதல் அன்பாகக் கடிந்து கொள்பவை வரை எல்லா வித நடைகளையும் கையாண்டு பார்த்தான். பிறகு தன் கடித வரைவு இலக்கிய மாதிரிகள் அனைத்தையும் கணப்பறையில் போட்டு எரித்து விட்டான். மாஸ்கோ, நீழ்னி நோவ்கரத், விளாதீமிர் முதலிய நகரங்களில் கைதுகள் விரைவில் தொடங்கின. கட்டம் போட்ட காற்சட்டைக்காரன் பிற்காலத்தில் பிரபலமடைந்த லந்தேஸென் கார்ட்டிங் என்ற உளவாளி என்பது அப்புறம் தெரியவந்தது. நான் பார்த்த முதல்—வரிசைக் கிரமப்படி—உளவாளி அவனே.

இவ்வளவு எல்லாம் இருந்தாலும் என் காதலியின் கணவன் நல்ல பிள்ளை, ஓரளவு மெல்லுணர்ச்சிகளுக்கு வசப்படுபவன், "விஞ்ஞான மூட்டை முடிச்சுக்களை" நகைக்கத் தக்க விதத்தில் சுமப்பவன். அவன் அப்படித்தான் சொன்னான்:

"அறிவுஜீவியின் வாழ்க்கைப் பயன் பொது மக்கள் திரளில் தன்னலமின்றி விநியோகிக்கும் நோக்கத்துடன் விஞ்ஞான மூட்டை முடிச்சுக்களை இடையறாமல் திரட்டிக் குவிப்பது ஆகும்..."

என்னுடைய காதல் ஆழமாகிக்கொண்டு போய்த் துன்பமாக மாறியது. நிலவறையில் உட்கார்ந்து என் இதயராணி மேசை மீது குனிந்தவாறு வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவளை அணைத்துத் தூக்கி,



படிப்பகம்

www.padippakam.com

இந்தப் பாழும் நிலவறையிலிருந்து எங்காவது கொண்டுபோய் விட வேண்டும் என்ற ஆசையால் ஏக்கம் நிறைந்த வெறி கொண்டேன். அதுவோ, அகன்ற இரட்டைக் கட்டில், சிறுமி உறங்கிய கனத்த பழங்கால நீள் சோபா, புழுதி படிந்த புத்தகங்களும் காகிதங்களும் குவியல்களாகக் கிடந்த மேசைகள் ஆகியவற்றால் அடைசலாய் இருந்தது. யாருடைய கால்களோ சன்னலின் அருகாகத் தோன்றித் தோன்றி மறைந்தன. தெரு நாயின் மூஞ்சி சில வேளைகளில் சன்னல் வழியே உள்ளே பார்த்தது. அறைக்குள் ஒரே புழுக்கம். வெயிலில் சூடேறிய சேற்றின் நாற்றம் வீதியிலிருந்து குப்பென்று அடித்தது. இந்தச் சூழ்நிலையில் சிறிய மங்கை உருவம் மெல்லெனப் பாடியவாறு பென்சிலாலோ பேனாவாலோ வரைந்தது, இனிய கருநீல விழிகள் என்னை நோக்கி அன்பு ததும்ப முறுவலித்தன. மதி மருளும், பைத்தியமாகும் அளவுக்கு நான் இந்த நங்கையைக் காதலித்தேன், வன்மமும் ஏக்கமும் பொங்க அவளுக்காக வருந்தினேன்.

‘‘உங்களைப் பற்றி இன்னும் ஏதாவது சொல்லுங்கள்,’’ என்பாள் அவள்.

நான் சொன்னேன். ஆனால் சில நிமிடங்களுக்குப் பின் அவள் கூறுவாள்:

‘‘இப்போது நீங்கள் சொல்வது உங்களைப் பற்றி அல்ல!’’

எனக்கே இது புரிந்தது, எதைப் பற்றி நான் சொல்லுகிறேனோ அதெல்லாம் நான் அல்ல, நான் கண்மூடித்தனமாகக் குழப்பி



படிப்பகம்

விட்ட வேறு எதுவோ என்று. எனக்கு நேர்ந்த அநுபவங்களும் நிகழ்ச்சிகளும் சேர்ந்து கலந்த இந்தப் பல நிறச் சிடுக்கில் நான் என்னைத் தேடிக் காண வேண்டும். ஆனால் என்னால் தேடிக் காண முடியவில்லை, காண நான் அஞ்சவும் செய்தேன். நான் என்பது யார், எது? இந்தக் கேள்வி என்னைப் பெரிதும் நாணச் செய்தது. வாழ்க்கை மீது நான் ஆத்திரம் கொண்டிருந்தேன். தற்கொலை முயற்சி என்னும் இழிவுபடுத்தும் முட்டாள்தனம் செய்யும்படி அது என்னைக் கட்டாயப்படுத்தியது. நான் மனிதர்களைப் புரிந்து கொள்ளவில்லை. அவர்களது வாழ்க்கை சரி என்று நிரூபிக்கப்படாததாகவும் முட்டாள்தனம் உள்ளதாகவும் அழுக்கானதாகவும் எனக்குத் தோன்றியது. அன்றாட வாழ்வின் எல்லா இருண்ட மூலைகளிலும், வாழ்க்கையின் எல்லா மர்மங்களது ஆழத்திலும் பார்வை செலுத்துவது எதனாலோ அவசியமாகி விட்ட மனிதனுக்குரிய பண்பட்ட ஆவல் எனக்குள் கொதித்துப் பொங்கியது, ஆவல் காரணமாகக் குற்றம் செய்ய நான் வல்லவன் என்று சில வேளைகளில் உணர்ந்தேன். அப்புறம் எனக்கு என்ன நேரும் என்று தெரிந்து கொள்ளும் ஒரே நோக்கத்திற்காகக் கொலை செய்யவும் நான் தயாராய் இருந்தேன்.

நான் என்னைத் தேடிக் கண்டு கொண்டால், அருவருப்பான மனிதன், எவையோ விந்தையான உணர்ச்சிகளாலும் எண்ணங்களாலும் இயன்ற அடர்ந்த, உறுதியான வலை

யில் சிக்கித் தடுமாறுபவன் என் இதய நங்கை முன் நிற்பான், அறிவிழந்த அந்த பயங்கர மனிதன் அவளுக்கு அச்சம் உண் டாக்கி விரட்டி விடுவான் என்று எனக்குத் தோன்றியது. என்னை ஏதாவது செய்வது எனக்கு அவசியமாய் இருந்தது. உண்மை யான என்னை நான் உணர்வதற்கு உதவ வல்லவள் இந்த நங்கையே என்றும் அதோடு அவள் ஏதோ மாயம் செய்யத் திறனுள்ளவள் என்றும் அதற்குப் பின் நான் வாழ்க்கையின் இருண்ட உளப்பதிவுகளிலிருந்து விடுபட்டு விடு வேன், உள்ளத்திலிருந்து எதையோ என் றென்றைக்கும் வெளியே எறிந்து விடுவேன், அப்போது என் உள்ளம் மாபெரும் வலிமை யும் மாபெரும் உவகையும் வாய்ந்த நெருப் பினால் சுடர் வீசும் என்றும் நான் நம்பி னேன்.

அவள் தன்னைப் பற்றிப் பேசிய அசட் டையான தொனியும் மற்றவர்கள் விஷயத்தில் அவள் கடைப்பிடித்த பெரிய மனிதப் பாங்கும் இவள் அசாதாரணமானதை அறிந்திருக்கிறாள் என்ற நம்பிக்கையை எனக்குள் புகுத்தின. வாழ்க்கையின் எல்லாப் புதிர்களுக்கும் விடை இவளிடம் இருக்கிறது, அதனால் தான் இவள் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்கிறாள், எப் போதும் தன்னம்பிக்கை கொண்டிருக்கிறாள் என்று எண்ணினேன். அவளிடம் எது எனக் குப் புரியவில்லையோ அதற்காக ஒருவேளை நான் அவளை அதிகமாகக் காதலித்தேன் போலும், ஆனால் இளமைக்குரிய முழு வலி

www.padippakam.com

மையுடனும் காமப்பற்றுடனும் நான் அவளைக் காதலித்தேன். இந்தக் காமப்பற்றை அடக்கிக்கொள்வது எனக்கு வேதனை தரும் வகையில் கடினமாக இருந்தது—அது என் புலன்களில் கனல் மூட்டி என்னை வலிமை குன்றச் செய்தது. நான் அதிக எளிமையும் பண்பின்மையும் கொண்டிருந்தால் எனக்கு அதிக நலமாய் இருந்திருக்கும். ஆனால், பெண்ணோடு உறவு உடல்கள் கூடும் செயலுக்குள் அடங்கி விடுவதில்லை என்று நான் நம்பினேன். இந்தச் செயலை அதன் கீழ்த்தரமான பண்பின்மையும் விலங்கு எளிமையும் கொண்ட வடிவத்தில் நான் அறிந்திருந்தேன். நான் வலிமையும் போதிய சிற்றின்ப விருப்பமும் உள்ள இளைஞனாக இருந்தேன், எளிதில் உணர்ச்சி வசப்படும் கற்பனை கொண்டிருந்தேன், ஆயினும் இந்தச் செயல் எனக்கு அநேகமாக அருவருப்பு ஊட்டியது.

எனக்குள் இந்த இன்பக் கற்பனைக் கனவு எவ்வாறு உருவாகி நிலைபெற முடிந்ததோ அறியேன், ஆனால் எனக்குத் தெரிந்ததற்கு அப்பால் தெரியாத ஒன்று உள்ளது, பெண்ணுடன் உறவு குறித்த உயர்ந்த, மர்ம உட்பொருள் அதில் பொதிந்திருக்கிறது, முதல் அணைப்பிற்குப் பின்னே மாண்பும் மகிழ்ச்சியும் பயங்கரமும் கூட உள்ள ஒன்று மறைந்திருக்கிறது, இந்த மகிழ்ச்சியை அநுபவித்த பின் மனிதன் முற்றிலும் மறு பிறப்பு எய்தி விடுகிறான் என்று நான் அசையாத உறுதி கொண்டிருந்தேன்.



படிப்பகம்

இந்தக் கற்பனைகளை படித்த நவீனங் களிலிருந்து நான் எடுத்துக் கொள்ளவில்லை, எதார்த்தத்திற்கு முரண்படும் உணர்விலிருந்து இவற்றைப் பயிற்றி வளர்த்துக் கொண்டேன் என்று எனக்குத் தோன்றுகிறது, ஏனெனில்:

"நான் உலகிற்கு வந்தது இசையா திருக்கவே."

தவிரவும், என் உள்ளத்தில் விந்தையான, தெளிவற்ற ஒரு நினைவு பதிந்திருந்தது: எதார்த்தத்தின் எல்லைகளுக்கு வெளியே எங் கோ, தொடக்கக் குழந்தைப் பருவத்தில் எப் போதோ, ஒரு வகையான பலத்த உள அதிர்ச்சி யை, புலன் உணர்ச்சியின் இனிய நடுக்கத் தை, இன்னும் சரியாகச் சொன்னால், உயிர் உடல் ஒருங்கிசைவின் முன்னுணர்வை நான் அநுபவித்தேன். காலைக் கதிரவனின், உதய சூரியனின் ஒளிமிக்க உவகையை நான் துய்த் தேன். ஒருகால் இது நிகழ்ந்தது, நான் இன் னும் தாயின் கருப்பையில் இருந்த நாள்களில் போலும். அவளுடைய நரம்பு ஆற்றலின் இந்த இன்ப அதிர்ச்சி வெப்பத் தாக்கின் மூலம் எனக்கு வழங்கப்பட்டது போலும். இந்தத் தாக்கு என் உள்ளத்தை உருவாக்கி உயிர் நெருப்பை அதில் முதன்முதலில் மூட்டியது போலும். ஒருவேளை, என் தாயின் இந்த வியப் பூட்டும் இன்பக் கணம், மாதினிடம் அசா தாரணமானதைத் துடிப்புடன் எதிர்பார்க்கும் இயல்பாக என் ஆயுள் முழுவதற்கும் என் னில் பிரதிபலித்திருக்கலாம்.

தெரியாத போது நாம் கற்பனை செய்து

www.padippakam.com

கொள்கிறோம். மனிதன் ஆற்றிய யாவற்றிலும் அறிவு மிக்க சாதனை நங்கையைக் காதலிக்கவும் அவளுடைய அழகை வழிபடவும் உள்ள திறமைதான். மாதின் மீது உண்டாகும் காதலிலிருந்தே உலகில் அழகியவை யாவும் தோன்றி உள்ளன.

ஒரு நாள் நீந்திக் குளிக்கையில் சரக்குக் கப்பலின் பின் பகுதியிலிருந்து நீரில் குதித்த போது என் மார்பு நங்கூர மூலையில் இடித்துக்கொண்டது. ஒரு கால் கயிற்றில் மாட்டிக் கொள்ளவே நான் நீரில் தலைகீழாகத் தொங்கினேன். எனக்குத் தண்ணீர் புரையேறி விட்டது. பார வண்டிக்காரன் என்னை நீரிலிருந்து தூக்கினான். முதலுதவி அளித்து என் வயிற்றிலிருந்து நீர் வெளியேற்றப்பட்ட போது என் தோல் முழுதும் தார் தாராகப் பிய்ந்து போயிற்று. தொண்டையிலிருந்து இரத்தம் வந்தது. பனிக் கட்டியை விழுங்கியவாறு நான் படுக்கையில் கிடக்க வேண்டியதாயிற்று.

என் காதலி என்னிடம் வந்து, கட்டிலில் அமர்ந்து, எனக்கு இப்படி நேர்ந்தது எவ்வாறு என்று விவரமாக விசாரித்து, இலேசான இனிய கரத்தால் என் தலையை வருடத் தொடங்கினாள். அவளுடைய விழிகள் ஆழ் நிறம் கொண்டு கலவரத்துடன் நோக்கின.

நான் கேட்டேன், நான் அவளைக் காதலிப்பதை அவள் காண்கிறாளா என்று.

''ஆமாம்,'' என்று எச்சரிக்கையுடன் புன்ன



படிப்பகம்

www.padippakam.com

கை செய்தவாறு அவள் விடை இறுத்தாள். ‘‘காண்கிறேன். நானும் உங்களைக் காத லிக்கத் தொடங்கினேன், என்றாலும் இது மிகவும் மோசம்.’’

அவளுடைய சொற்களுக்குப் பின் நிலம் அனைத்தும் அதிர்ந்து நடுங்கியது, தோட்டத் தில் மரங்கள் களி பொங்கத் தட்டாமாலை சுற்றின. எதிர்பாராமையாலும் வியப்பினாலும் உவகையாலும் நான் பேச்சிழந்து அவளது மடியில் தலையைப் புதைத்துக் கொண்டேன். அவளை இறுகத் தழுவிக் கொண்டிராவிட்டால் சோப்புக் குமிழி போலப் பறந்து வெளியே போயிருப்பேன்.

‘‘அசையாதீர்கள், அது உங்களுக்குக் கெடு தல்!’’ என்று கண்டிப்பாகக் கூறி என் தலை யைத் தலையணை மேல் மீண்டும் கிடத்த முயன்றாள். ‘‘அப்புறம், கிளர்ச்சி அடையாதீர் கள், இல்லாவிட்டால் நான் போய் விடுவேன்! நீங்கள் பொதுவாகவே மிகவும் முரட்டுத் துணிச் சல் உள்ள ஆள். இந்த மாதிரி மனிதர்கள் உண்டு என்று நான் நினைக்கவில்லை. நம் உணர்ச்சிகளையும் உறவுகளையும் பற்றி உங் களுக்கு உடம்பு சரியானதும் பேசுவோம்.’’

இதை எல்லாம் அவள் மிகவும் அமைதி யாகக் கூறினாள், ஆழ் நிறம் அடைந்த விழி களால் சொல்லுக்கடங்காத பரிவுடன் இளநகை செய்தாள். விரைவில் அவள் போய் விட்டாள். என் உள்ளத்திலோ, வருங்கால நம்பிக்கை வானவில் நிற விளக்காக ஒளி பரப்பியது. இப்போது, அவளுடைய நல் உதவியுடன்



படிப்பகம்

www.padippakam.com

வேறு உணர்ச்சிகள், எண்ணங்களின் மண்டலத் துக்குப் பறந்து சென்று விடுவேன் என்ற இன்ப உறுதி எனக்கு ஏற்பட்டது.

சில நாள்கள் சென்ற பின் நான் பள்ளத் தாக்கின் விளிம்போரமாகத் திடலில் உட் கார்ந்திருந்தேன். கீழே புதர் காற்றில் சல சலத்தது. சாம்பல் நிற வானம் மழைக் குறி காட்டி அச்சுறுத்தியது. அவள் காரியப் பாங் கில், வறண்ட சொற்களில் பேசிக் கொண் டிருந்தாள். எங்களுடைய வயது வித்தியாசத் தையும் நான் கல்வி பெற வேண்டும் என் பதையும் ஒரு மாதையும் அவள் மகளையும் நான் கழுத்தில் கட்டிக்கொள்வது தருணத் துக்கு முந்திய செயல் என்பதையும் அவள் எடுத்து உரைத்தாள். இவை யாவும் கொடிய வை என்றாலும் உண்மையான விவரங்கள். தாய்மைப் பாங்குடன் இவை கூறப்பட்டன, இனிய நங்கை மீது காதலையும் மரியாதை யையும் இன்னும் அதிகமாகத் தூண்டின. அவளுடைய குரலையும் கனிவுள்ள சொற் களையும் கேட்க எனக்கு ஏக்கமாகவும் இனி மையாகவும் இருந்தது. என்னுடன் ஒருவர் இந்த மாதிரிப் பேசியது இதுவே முதல் தடவை.

நான் பள்ளத்தாக்கின் திறப்பில் பார்வை செலுத்தினேன். காற்றால் அசைத்து ஆடிய செடிகள் அங்கே பச்சை ஆறு பெருகுவது போலக் காட்சி தந்தன. இந்த நபரின் அன் புக்கு என் உள ஆற்றல்கள் அனைத்தாலும் கைம்மாறு செய்வேன் என்று நான் ஆணை யிட்டு உறுதி பூண்டேன்.



படிப்பகம்

“ஏதேனும் முடிவு செய்வதற்கு முன் நாம் நன்றாக ஆலோசிக்க வேண்டும்,” என்ற மெல்லிய குரலைக் கேட்டேன். அவள் கொட்டை மரத்தின் ஒடிந்த கொம்பினால் முழங்கால் மேல் அடித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய பார்வை பச்சைக் குன்றுகள் போன்ற தோட்டங்களில் மறைந்திருந்த நகரத்தின் திசையில் திரும்பி இருந்தது.

“தவிரவும், நான் பலெஸ்லாவோடு பேசியாக வேண்டும். அவன் ஏற்கெனவே ஓரளவு உணர்கிறான், நிரம்பச் சிடுசிடுக்கிறான். எனக்கோ குடும்பச் சச்சரவுகள் பிடிக்கா.”

எல்லாவற்றிலும் துயரம் ததும்பியது, எல்லாம் மிக நன்றாய் இருந்தன. ஆனால், நகைப்புக்கிடமான அற்ப விஷயம் ஒன்று அவசியம் ஆகிவிட்டது.

என் காற்சட்டை இடுப்பில் அகலமாய் இருந்தது. நான் இடுப்புப் பகுதியை மடித்து ஒரு மூன்று அங்குல நீளம் உள்ள பெரிய பித்தலைக் குண்டூசியால் குத்தி இருந்தேன்—ஏழைக் காதலர்களின் நற்காலம், இப்போது அந்த மாதிரிக் குண்டூசிகள் இல்லை. பாழும் குண்டூசியின் கூரிய முனை என் தோலை ஓயாமல் மெல்ல மெல்லப் பறண்டிய வண்ணமாக இருந்தது. சற்று அசாக்கிரதையாக அசைய வேண்டியதுதான், குண்டூசி முழுவதும் என் விலாவில் பாய்ந்து விடும். நான் வெளியே தெரியாதபடி அதை எடுத்து விட்டேன். உடனே கலவரத்துடன் உணர்ந்தேன், ஆழ்ந்த சிறாய்ப்புக்களிலிருந்து இரத்தம் மள

மளவென்று பெருகிக் காற்சட்டையை நனைத் திருந்ததை. நான் உள்ளாடை அணியவில்லை. குசினிக்காரன் உடுப்பு குட்டையானது, இடுப்பு வரை தான் வந்தது. உடம்போடு ஒட்டிக் கொண்டிருந்த ஈரக் காற்சட்டையுடன் நான் எப்படி எழுந்து நடப்பேன்?

நிகழ்ச்சியின் நகைப்புக்குரிய தன்மையைப் புரிந்து கொண்டு அதன் வருத்தம் தரும் வடிவத்தால் ஆழ்ந்த கோபம் அடைந்த நான் மட்டுமீறிக் கிளர்ச்சி பொங்க, தன் பாத் திரத்தை மறந்து விட்ட நடிகனைப் போன்ற செயற்கைக் குரலில் ஏதோ பேசத் தலைப் பட்டேன்.

என் பேச்சை முதலில் கவனமாகவும் பின்பு வெளிப்படையான விளங்காமையுடனும் சில நிமிடங்கள் கேட்டு விட்டு அவள் சொன்னாள்:

“எத்தகைய ஆடம்பரச் சொற்கள்! நீங்கள் திடீரென்று வேறு ஆளாக மாறி விட்டீர் கள்.”

இந்த வார்த்தைகள் என்னை முடிவாக வீழ்த்தி விட்டன. கழுத்து நெரிபட்டவன் போல நான் பேசாதிருந்தேன்.

“போக நேரம் வந்து விட்டது. மழை பெய்யப் போகிறது!”

“நான் இங்கே இருக்கிறேன்.”

“எதற்காக?”

நான் அவளுக்கு என்ன பதில் சொல்லி யிருக்க முடியும்?

“நீங்கள் என் மேல் கோபம் கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

விட்டீர்களோ?'' என் முகத்தை அன்புடன் நோக்கியவாறு கேட்டாள் அவள்.

''இல்லவே இல்லை! என் மேல்.''

''உங்கள் மேலும் கோபம் கொள்ள வேண்டாம்,'' என்று கூறி எழுந்து நின்றாள்.

என்னாலோ, எழுந்திருக்க முடியவில்லை. வெதுவெதுப்பான குட்டத்தில் உட்கார்ந்திருந்த எனக்கு விலாவிலிருந்து பெருகும் என் இரத்தம் ஓடை போன்று களகளப்பது போலவும் மறு கணமே நங்கை இந்த ஒலியைக் கேட்டு, ''என்ன இது?'' என்று வினவுவாள் என்பது போலவும் பிரமை உண்டாயிற்று.

''போய் விடு!'' என்று அவளை மனத்துக்குள் வேண்டினேன்.

அவள் இன்னும் சில அன்பு கனிந்த சொற்களைக் கருணை கூர்ந்து எனக்குப் பரிசளித்து விட்டு, வடிவமைந்த கால்கள் மேல் இனிமையாக அசைந்தவாறு பள்ளத்தாக்கின் விளிம்பு ஓரமாக நடந்தாள். அவளுடைய ஒசியும் சிறு உருவம் தொலைவில் செல்லச் செல்ல அளவில் குறைவதை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். எனது முதல் காதல் இன்பம் அற்றதாக இருக்கும் என்ற உணர்வின் தாக்குதலால் குப்புற வீழ்த்தப்பட்டு, தரையில் படுத்தேன்.

சந்தேகமின்றி அவ்வாறே நிகழ்ந்தது: அவளுடைய கணவன் கண்ணீரையும் மெல்லுணர்ச்சி உமிழ்நீரையும் இரக்க மூட்டும் சொற்களையும் அகன்ற பெருக்காகக் கொட்டினா



படிப்பகம்

www.padippakam.com

னாம். இந்தப் பிசுபிசுத்த பெருக்கில் நீந்தி என் பக்கம் வர அவள் துணியவில்லையாம்.

“அவன் ஒன்றுக்கும் ஏலாதவன், நீங்களோ, வலியவர்!” என்று விழிகளில் நீர் மல்கக் கூறினாள் அவள். “அவன் சொல்லுகிறான், ‘நீ என்னை விட்டுப் போனால் வெயில் இல்லாத பூச்செடி போல நான் வாடி மடிந்து போவேன்’ என்று.”

அந்தப் பூச்செடியின் குட்டைக் கால்களையும் பெண்களுடையவை போன்ற தொடைகளையும் தர்பூசனி போல உருண்டையான வயிற்றையும் நினைவு கூர்ந்து நான் கெக்கலி கொட்டினேன். அவனுடைய தாடியில் ஈக்கள் வாசம் செய்தன. அதில் அவற்றுக்குத் தீனி எப்போதும் இருந்தது.

அவள் புன்னகைத்து, மொழிந்தாள்:

“ஆமாம், அவன் சொன்னது வேடிக்கையாக ஒலிக்கிறது, ஆனாலும் அவன் மிகவும் வேதனைப்படுகிறான்!”

“நானும் தான்.”

“ஓ, நீங்கள் இளைஞர், நீங்கள் வலியவர்...”

இந்த சந்தர்ப்பத்தில்தான் வலு இல்லாதவர்களின் பகைவனாக என்னை நான் முதன் முறையாக உணர்ந்தேன். வலுவற்றவர்களின் சூழலில் வலியவர்கள் எவ்வளவு வருந்தத் தக்க முறையில் நிர்க்கதியானவர்கள் என்பதையும் அழிவு விதிக்கப்பட்டவர்களின் பயனற்ற உயிர் வாழ்தலைக் காக்கும் பொருட்டு இதயத்தினுடையவும் அறிவினுடையவும் விலை



11—1227

படிப்பகம்

www.padippakam.com

மிக்க ஆற்றல் எவ்வளவு நிறையச் செல விடப்படுகிறது என்பதையும் பிற்காலத்தில் அதிக முக்கியமான சந்தர்ப்பங்களில் நான் மிக அடிக்கடி காண நேர்ந்தது.

விரைவில் அரை நோயாளியாக, மூளைக் கோளாறுக்கு நெருங்கிய நிலையில், நான் நகரத்திலிருந்து வெளியேறி, ஓர் இடத்தில் தரிக்காமல் ருஷ்யாவின் சாலைகளில் இரண்டு ஆண்டுகள் சுற்றித் திரிந்தேன். வோல்காப் பிரதேசம், தோன், உக்ரைன், கிரிமியா, காக் கேஷியா ஆகியவற்றைப் பார்வையிட்டேன். எண்ணற்ற அநுபவங்களுக்கும் நிகழ்ச்சிகளுக் கும் உள்ளானேன், அதிக முரடாகி, முன் னிலும் அதிக வன்மம் பாராட்டினேன். ஆயி னும் இந்த நங்கையின் இன்னுருவை (அவ ளை விட மேலானவர்களும் அதிக அறிவுள்ள வர்களுமான பெண்களைப் பார்த்தேன் என்றா லும்) அழியாமல் உள்ளத்தில் காப்பாற்றி வைத்திருந்தேன்.

இரண்டு ஆண்டுகளுக்குச் சற்று கூடுதலான காலத்துக்குப்பின், இலையுதிர் பருவத்தில் நான் திப்ளிசில் இருந்த போது அவள் பாரி சிலிருந்து திரும்பி விட்டதாகவும் தான் இருந்த நகரிலேயே நான் இருப்பதை அறிந்து மகிழ்ந்ததாகவும் கேள்விப்பட்டு, இருபத்து மூன்று வயது வலிய இளைஞனான நான், வாழ்க்கையில் முதன் முதலாக உணர்விழந் தேன்.

நான் அவளிடம் போகத் தயங்கிக் கொண்



படிப்பகம்

www.padippakam.com

டிருந்தேன், ஆனால் விரைவில் அவளே நண்பர்கள் மூலம் என்னை அழைத்தாள்.

அவள் முன்னிலும் அழகாகவும் இனிமையாகவும் இருப்பதாக எனக்குத் தோன்றியது. முன் இருந்த அதே மங்கை உருவம், கன்னங்களில் அதே மெல்லிய செம்மை, கரு நீல விழிகளில் அதே அன்பு கனிந்த ஒளிர்வு. அவளுடைய கணவன் பாரிசில் தங்கி விட்டானாம். அவளுடன் மகள் மட்டுந்தான் இருந்தாள், சுறுசுறுப்பும் ஒயிலும் வாய்ந்தவள், ஆட்டுக் குட்டி போல.

நான் அவளுடைய வீட்டை அடைந்த போது நகர் மீது இடியும் மின்னலுமாகப் புயல் வீசியது, பெருமழை சோவென்று கொட்டத் தொடங்கிற்று, செயிண்டு டேவிட் மலையிலிருந்து பிரசண்டமான ஆறு வீதிக் கற்களைப் பெயர்த்து உருட்டிக்கொண்டு பெருக்கெடுத்து ஓடியது. காற்றின் ஊளையும் நீரின் சீற்றம் மிக்க சளப்பொலியும் ஏதோ இடிபாடுகளின் தடதடப்பும் வீட்டை அதிர வைத்தன. சன்னல் கண்ணாடிகள் கணகணத்தன, நீல ஒளி அறையில் பாய்ந்தது, சுற்றிலும் இருந்தவை எல்லாம் அடியற்ற ஈர அகாதத்தில் விழுந்து விட்டன போலப் பிரமை உண்டாயிற்று.

பயந்து போன சிறுமி படுக்கையில் புதைந்து கொண்டாள். நாங்கள் வானின் மின்னல், இடியதிர்ச்சிகளால் கண்கள் கூச, சன்னல் அருகே நின்று எதனாலோ இரகசியமாகப் பேசிக் கொண்டோம்.



படிப்பகம்

www.padippakam.com

“இந்த மாதிரி இடிப் புயலை முதல் தடவையாகப் பார்க்கிறேன்,” என்று காதல் நங்கையின் சொற்கள் அருகே ஒலித்தன.

திடீரென்று அவள் கேட்டாள்:

“என்ன, என் மேல் உங்களுக்கு இருந்த காதல் நோய் தீர்ந்ததா?”

“இல்லை.”

அவள் வியப்படைந்தாள் போலும். முன் போன்றே இரகசியமாகச் சொன்னாள்:

“அட கடவுளே, நீங்கள் தாம் எப்படி மாறி விட்டீர்கள்! முற்றிலும் வேறு மனிதர் ஆகி விட்டீர்கள்.”

சன்னலோரமாக இருந்த நாற்காலியில் மெதுவாக அமர்ந்து, மின்னலின் பயங்கர ஒளியால் கண்கள் கூச, திடுக்கிட்டு விழிகளைச் சுருக்கிக்கொண்டு, கிசுகிசுத்தாள்:

“உங்களைப் பற்றி இங்கே நிறையப் பேசுகிறார்கள். எதற்காக இங்கே வந்தீர்கள்? உங்கள் வாழ்க்கை எப்படி நடந்தது என்று எனக்கு விவரமாகச் சொல்லுங்கள்.”

ஆண்டவனே, இவள்தான் எவ்வளவு சின்னவள், அழகானவள்!

நான் பாவமன்னிப்பு கேட்பவன் போல என் அநுபவங்களை நள்ளிரவு வரை அவளுக்கு விவரித்துக் கொண்டிருந்தேன். இயற்கையின் பயங்கர நிகழ்ச்சிகள் எனக்கு எப்போதும் கிளர்ச்சி ஊட்டின, உவகைப் பெருக்கால் என் உள்ளத்தை நிறைத்தன. நான் நன்றாகக் கதை சொன்னேன் போலும். அவளுடைய கவனமும் அகலத் திறந்த விழிகளின் இறுக்க



படிப்பகம்

www.padippakam.com

முள்ள பார்வையும் இதை எனக்கு உறுதிப் படுத்தின. எப்போதாவது மட்டுமே அவள் கிசுகிசுத்தாள்:

"இது பயங்கரம்."

எனக்கு — கடந்த காலத்தில் — எப்போதும் ஓரளவு மனத்தாங்கல் விளைத்தது, மூத்தவளுக்கு இயல்பான ஆதரவு காட்டும் பாவனையில் அவள் புன்னகை செய்தது ஆகும். ஆனால் இப்போது எனக்கு விடை கொடுக்கையில் அவள் அவ்வாறு புன்னகைக்கவில்லை என்பதைப் போகும் பொழுது கவனித்தேன். கூர்மையான நிலா அரிவாள் தார் தாராகக் கிழிந்த மேகங்களை அறுக்கும் காட்சியை நோக்கியவாறு ஈர வீதிகளில் நடக்குங்கால் எனக்குக் களிப்பினால் தலை கிறுகிறுத்தது. மறு நாள் ஒரு கவிதை எழுதித் தபால் மூலம் அவளுக்கு அனுப்பினேன். பிற்காலத்தில் அவள் அதை அடிக்கடி ஒப்பித்ததால் கவிதை என் நினைவில் பதிந்து விட்டது:

"அம்மணி!
தங்கள் அன்புக்கும் கனிந்த பார்வைக்கும்
அடிமை ஆனான் தேர்ந்த மாயக்காரன்,
அற்பப் பொருள்கள், ஒன்றும் அற்றவை,
அவற்றைக் கொண்டு சிறு மகிழ்ச்சிகள் அமைக்கும்
இன் கலை கைவரப் பெற்றவன்!
ஏற்பீர் மகிழ் தரும் அடிமையை!
ஒரு கால், சிறு மகிழ்ச்சிகளைக் கொண்டு
பேரின்பத்தை அவன் படைத்திடலாம்—

www.padippakam.com

ஆக்கவில்லையா ஒருவன், அண்டத்தை
அற்பச் சடப்பொருள் துகள்களைக் கொண்டு?
மெய்தான்! மகிழ்வின்றி அமைந்துளது அண்டம்!
அற்பப் பொருக்குகள் இதன் இன்பங்கள்!
எனினும் இதில் குறைவல்ல விநோதங்கள்,
காட்டாக, தங்கள் பணிவுள்ள அடியான்.
இனும் இதில் உண்டு எழிலார்ந்த ஒன்று,
இங்கு நான் குறிப்பது தங்களையேதான்!
தாங்கள்!
ஆனால்—பேச்சிலேன்!
மலர்களில் வறிய உலகின்
அனைத்திலும் சிறந்த நன் மலராம்
தங்கள் இதயத்தின் முன்
சொற்களாம் கூரற்ற ஆணிகள் பொருள்
தருமோ?''

இதைச் செய்யுள் என்று சொல்ல முடியாது தான், ஆனால் மகிழ்ச்சியுடனும் உளமாரவும் இயற்றப் பெற்றது இது.

உலகில் எல்லாரிலும் சிறந்தவள், ஆகையால் எனக்கு இன்றியமையாதவள் என்று யார் எனக்குத் தோன்றினாளோ அவளுக்கு எதிரே இப்போது நான் மீண்டும் உட்கார்ந்திருந்தேன். அவள் இள நீல உடை அணிந்திருந்தாள். அவளுடைய உருவத்தின் வனப்பு வரைகளை மறைக்காமல் மணம் கமழும் மென்மையான மேகத் திரையாக அவளைப் போர்த்திருந்தது இந்த உடை. இடைக் குஞ்சங்களுடன் விளையாடியவாறு அசாதாரணமான சொற்களை அவள் என்னிடம் கூறினாள். ரோஜா நிற நகங்கள் உள்ள அவளுடைய



படிப்பகம்

சிறு விரல்களின் இயக்கத்தைக் கவனித்துக் கொண்டிருந்த எனக்கு நான் தேர்ந்த இசை ஞனால் அன்பு கூர்ந்து சுருதி சேர்க்கப் பெறும் வயலின் வாத்தியம் என்னும் உணர்வு ஏற்பட் டது. எனக்கு உயிரை விட்டு விட விருப்பம் ஏற்பட்டது, இந்த நங்கையை மூச்சால் எப் படியாவது இழுத்து என் உள்ளத்தில் எப் போதும் இருக்கும்படி வைக்க ஆசை உண் டாயிற்று. களைப்பூட்டும்படி, வலிக்கும் அள வுக்கு வெகுவாக முறுக்கேறி என் உடல் இசைத்தது. என் இருதயம் இதோ வெடித்து விடும் என்று எனக்குத் தோன்றியது.

அப்போதுதான் அச்சேறிய எனது முதல் கதையை அவளுக்குப் படித்துக் காட்டினேன். அவள் அதை எப்படி மதிப்பிட்டாள் என்பது நினைவில்லை. அவள் வியப்படைந்தாள் போ லும்:

‘‘அப்படியா? நீங்கள் உரைநடை எழுதத் தொடங்கிவிட்டீர்களா?!’’

கனவின் ஊடாகப் போல, எங்கோ தொலை விலிருந்து என் காதுக்கு எட்டியது அவளு டைய குரல்:

‘‘இந்த ஆண்டுகளில் நான் உங்களைப் பற்றி நிறைய எண்ணமிட்டேன். நீங்கள் இவ் வளவு நிறையத் துன்பப்பட நேர்ந்தது என் காரணமாகவா என்ன?’’

அவள் வாழும் உலகில் துன்பமானதோ பயங்கரமானதோ எதுவும் இல்லை என்று பொருள்படும் ஏதோ சொற்களை நான் கூறி னேன்.



படிப்பகம்

''நீங்கள் எவ்வளவு இனியவர்...''

அவளைக் கட்டித் தழுவ எனக்கு அறிவு இழக்கும் அளவுக்கு ஆசை உண்டாயிற்று, ஆனால் என் கைகள் மட்டித்தனமாக நீண்டவை, அர்த்தமின்றிக் கனமானவை. அவளுக்கு வலி ஏற்படுத்த அஞ்சி அவளது மேனியைத் தீண்டத் தயங்கினேன். அவள் முன் நின்று இதயத்தின் பலத்த அதிர்ச்சிகளுக்கு ஏற்ப ஆடியவாறு முணுமுணுத்தேன்:

''என்னோடு வாழுங்கள்! தயை செய்து என்னோடு வாழுங்கள்!''

அவள் மெல்லென — கூச்சத்துடனும் — நகைத்தாள். அவளுடைய இனிய விழிகள் என் கண்கள் கூசும்படி ஒளி வீசின. அவள் அறையின் மூலைக்குப் போய் அங்கிருந்து கூறினாள்:

''இப்படிச் செய்வோம்: நீங்கள் நீழ்னி நோவ்கரதுக்குப் போங்கள், நான் இங்கே தங்கி, ஆலோசனை செய்த பின் உங்களுக்கு எழுதுகிறேன்...''

நான் படித்த நவீனம் ஒன்றின் கதாநாயகன் செய்தது போன்று மரியாதையாகச் சிரம் தாழ்த்து அவளை வணங்கி விட்டு வெளியேறினேன். காற்றில் மிதந்தேன்.

குளிர் காலத்தில் அவள் மகளுடன் நீழ்னி நோவ்கரத் நகரில் என்னிடம் வந்து சேர்ந்தாள். ''ஏழை மணந்தால் இரவும் சுருங்கும்'' என்று கிண்டலும் ஏக்கமும் தொனிக்கும் ஒரு

ருஷ்யப் பழமொழி உண்டு. இந்தப் பழமொழியின் ஆழ்ந்த உண்மையை நான் சொந்த அநுபவத்தால் சோதித்துத் தெரிந்து கொண்டேன்.

நாங்கள் ஒரு தனி வீட்டை மாதம் இரண்டு ரூபிள் வாடகைக்கு எடுத்தோம். பாதிரியின் தோட்டத்தில் இருந்த பழைய குளியலறை அது. நான் முன்னறையிலும் என் மனைவி குளியலறையிலும் இடம் வைத்துக் கொண் டோம். குளியலறையே விருந்தறையாகவும் பயன்பட்டது. வீடு குடும்ப வாழ்க்கைக்கு அவ் வளவு ஏற்றதாக இல்லை. குளிர் காலத்தில் அதன் மூலைகளிலும் துளை விளிம்புகளிலும் பனி உறைந்து விட்டது. இரவு நேரங்களில் வேலை செய்கையில் நான் என்னிடம் இருந்த எல்லா உடைகளையும் போட்டுக்கொண்டு அவற் றுக்கு மேலே விரிப்பையும் போர்த்துக் கொண்டேன். அப்படியும் கடுமையான கீல் வாத நோய்க்கு ஆளானேன். அந்தக் காலத் தில் நான் சிறந்த உடல் நலமும் தாங்கு திறனும் பெற்றிருந்தேன், அதைக் குறித்துப் பெருமையும் அடித்துக்கொண்டேன். அந்த நிலையில் நான் இவ்வாறு நோய்க்கு ஆளானது அநேகமாக இயற்கைக்குப் புறம்பாக இருந்தது.

குளியலறையில் குளிர் குறைவாக இருந் தது, ஆனால் நான் கணப்பை மூட்டியதும் பூஞ்சணம், சோப்பு, நீராவிக் குளியலில் பயன் படும் மிலாறுகள் ஆகியவற்றின் திணறச் செய் யும் நாற்றம் எங்கள் இருப்பிடம் முழுவதிலும் நிறைந்து விட்டது. அற்புதமான விழிகள்

www.padippakam.com

கொண்ட நேர்த்தியான வெண்களிமண் பொம்மை போன்ற சிறுமி இதனால் எரிச்சல் அடைந்தாள். அவளுக்குத் தலை வலித்தது.

வசந்த காலத்திலோ சிலந்திகளும் மர வண்டுகளும் பெருந் திரள்களாகக் குளியலறைக்கு வருகை தரலாயின. தாயும் மகளும் அவற்றைக் கண்டு அஞ்சி நடுங்கினார்கள். ரப்பர் சோட்டினால் பூச்சிகளைக் கொல்வது எனக்கு அவசியமானது. எல்டர் மரங்களும் காட்டு ராஸ்ப்பெரிப் புதர்களும் செழித்து வளர்ந்து சிறு சன்னல்கள் மேல் படர்ந்தன. அறை எப்போதும் மங்கலாக இருந்தது. புதர்களைப் பிடுங்கி எறியவோ குட்டையாக வெட்டவோ கூட குடிகாரனும் சஞ்சல சித்தம் உள்ளவனுமான பாதிரி அநுமதிக்கவில்லை.

அதிக வசதியான இருப்பிடத்தைத் தேடிக் கண்டுபிடித்திருக்கலாம் தான். ஆனால் நாங்கள் பாதிரிக்குக் கடன்பட்டிருந்தோம், என்னையும் அவனுக்குப் பிடித்திருந்தது, எனவே அவன் எங்களைப் போக விடவில்லை.

''பழகிக் கொள்ளுங்கள்!'' என்றான் அவன். ''இல்லாவிட்டால் கடனைச் செலுத்தி விட்டுப் போங்கள், ஆங்கிலேயர்களிடம் வேண்டுமானாலும் சரி.''

பாதிரிக்கு ஆங்கிலேயர்களைப் பிடிக்கவில்லை. அவன் சொன்னான்:

''இந்த மக்கள் சோம்பேறிகள். பேஷன்ஸ் சீட்டாட்டம் ஒன்று தவிர இவர்கள் எதையுமே கண்டுபிடிக்கவில்லை, இவர்கள் சண்டை போடத் திறமை இல்லாதவர்கள்.''



படிப்பகம்

www.padippakam.com

அவன் பூதாகாரமான சரீரமும் வட்டமான சிவந்த முகத்தில் செம்பட்டைத் தாடியும் உள்ளவன். பெருங் குடியன் ஆதலால் மாதா கோயிலில் வழிபாடு நடத்தி வைக்க அவனால் முடியவில்லை. மெலிந்த மேனியும் கூரிய மூக்கும் கரு முடியும் காக்கையின் சாயலும் கொண்டிருந்த தையல்காரி மேல் உள்ள மையலால் அவன் கண்ணீர் வரும் அளவுக்குத் துன்பப்பட்டான்.

அவள் செய்த துரோகங்களை என்னிடம் விவரிக்கையில், தாடியில் வழிந்த கண்ணீரை உள்ளங்கையால் துடைத்துக் கொண்டு அவன் கூறினான்:

''அவள் வஞ்சகி என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் புனிதத் தியாகி பிமியா மாவை எனக்கு நினைவுபடுத்துகிறாள். அதற்காகத்தான் காதலிக்கிறேன்!''

நான் மாதாகோயில் காலண்டரைக் கவனமாகப் பார்த்தேன். இந்தப் பெயர் உள்ள புனிதர் எவரும் அதில் இல்லை.

எனது மதநம்பிக்கை இன்மையால் ஆத்திரம் அடைந்து மத நம்பிக்கைக்கு ஆதரவாகப் பின் வருவன போன்ற வாதங்களைக் கூறி அவன் என் உள்ளத்தை உலுக்கினான்:

''நீங்கள் தம்பி, நடைமுறை நோக்கிலே இதை ஆலோசித்துப் பாருங்கள்: நம்பாதவர்கள் பதிற்றுக் கணக்கானவர்கள், நம்புகிறவர்களோ கோடிக் கணக்கானவர்கள், இது ஏன்? ஏனென்றால் எப்படி மீனால் தண்ணீர் இல்லாமல் வாழ முடியாதோ, அப்படியே ஆன்மா



படிப்பகம்

www.padippakam.com

மாதாகோயிலுக்கு வெளியே வாழ்வதில்லை. நிரூபணம் ஆகி விட்டதா? வாருங்கள், இதற்காகக் குடிப்போம்!''

''நான் குடிப்பதில்லை, எனக்குக் கீல்வாதம்.''

உப்பிட்ட மீன் துண்டில் முள் கரண்டியைப் பாய்ச்சி அச்சுறுத்தும் பாங்கில் உயர்த்திய படி அவன் சொன்னான்:

''இதுவும் நம்பாமையின் விளைவு தான்!''

இந்தக் குளியலறையில் குடி வைத்ததற்காகவும் சாப்பிட இறைச்சியும் சிறுமிக்கு விளையாட்டுப் பொருளும் வாங்க முடியாததற்காகவும் இந்தப் பாழாய்ப் போகிற, கேலியாகக் குத்திக் காட்டும் ஏழ்மைக்காகவும் காதல் நங்கையின் முன் எனக்கு வந்த துன்புறுத்தும் வெட்கத்தில் உறக்கம் கூடப் பிடிக்கவில்லை. ஏழ்மை என்ற குறை தனி மனிதன் என்ற முறையில் எனக்குக் கலக்கமோ துன்பமோ ஏற்படுத்தவில்லை, ஆனால் என் இனிய, சிறிய கல்லூரி மாணவிக்கும் சிறப்பாக அவளுடைய புதல்விக்கும் இந்த வாழ்க்கை இழிவு படுத்துவதாகவும் உயிரை வாட்டுவதாகவும் இருந்தது.

இரவு வேளைகளில் என் இடத்தில் மேசை அருகே அமர்ந்து மன்னிப்பு மனுக்களையும் அப்பீல் விண்ணப்பங்களையும் ரத்து விண்ணப்பங்களையும் பிரதிகள் எடுக்கும் போதும் கதைகள் எழுதும் போதும் நான் பற்களை நெறுநெறுத்து என்னையும் பிற மனிதர்களையும் விதியையும் காதலையும் சபிப்பேன்.



படிப்பகம்

தான் கஷ்டப்படுவதை மகன் காண்பதை விரும்பாத தாய் போன்று பெருந்தன்மை யுடன் நடந்து கொண்டாள் என் காதல் நங் கை. இந்த இழிந்த வாழ்க்கையின் போது குறை கூறும் ஒரு சொல் கூட அவளுடைய வாயிலிருந்து வெளிவரவில்லை. நிலைமைகள் எவ்வளவு கடினம் ஆயினவோ அவ்வளவு அதிக உற்சாகமாக அவளுடைய குரலும் அதிக மகிழ்ச்சியுடன் அவளுடைய சிரிப்பும் ஒலித் தன. அவள் காலையிலிருந்து மாலை வரை பாதிரிகள், அவர்களது காலஞ்சென்ற மனைவி கள் ஆகியோரின் உருவப் படங்கள் தீட்டினாள், மாவட்டங்களின் நிலப் படங்கள் வரைந்தாள் —இந்த நிலப் படங்களுக்காக ஏதோ பொருட் காட்சியில் மாவட்ட நிர்வாகத்துக்குப் பொற் பதக் கம் பரிசாகக் கிடைத்தது. உருவப் படங்களுக் கான ஆர்டர்கள் தீர்ந்ததும், வெவ்வேறு துணி களின் துண்டுகள், வைக்கோல், கம்பிகள் ஆகி யவற்றைக் கொண்டு மிக மிக நாகரிகமான பாரிஸ் மோஸ்தர் தொப்பிகளை எங்கள் வீதி மங்கையருக்காகவும் மாதருக்காகவும் அவள் தயாரித்தாள். பெண்களின் தொப்பிகளைப் பற்றி எனக்கு எதுவுமே புரியாது. ஆனால் அவற்றில் படு வேடிக்கையான எதுவோ மறைந் திருந்தது போலும். தான் தயாரித்த விசித் திரமான தலைக்கோலத்தைக் கண்ணாடிக்கு முன் நின்று அளவு பார்க்கையில் தொழிற் சிற்பி வலிப்பு வந்தவள் போல மூச்சுத் திண றும் வரை சிரித்தாள். ஆனால் இந்தத் தொப்பிகள் ஆர்டர் கொடுத்தவர்களை விந்

தையான முறையில் பாதித்ததைக் கண்டேன். பல வண்ணக் கோழிக் கூடுகள் போன்ற தொப்பிகளால் தலை அலங்காரம் செய்து கொண்டு ஏதோ தனிப்பட்ட மிடுக்குடன் வயிறு களைத் துருத்தியவாறு அவர்கள் வீதியில் நடந்தார்கள்.

நான் வழக்குரைஞரிடம் வேலை செய்து கொண்டே வரிக்கு இரண்டு கோப்பெக்குகள் சன்மானம் பெற்று உள்ளூர்ச் செய்தித் தாளுக்கு சிறு கதைகள் எழுதி வந்தேன். மாலை நேரங்களில் தேநீர் பருகுகையில் வீட் டுக்கு விருந்தினர்கள் எவரும் வந்திராவிட்டால் என் மனைவி ஜார் இரண்டாம் அலெக்சாந் தரைப் பற்றிச் சுவையான கதைகளை எனக் குச் சொன்னாள். அவன் பெலஸ்தோக் மகளிர் கல்லூரிக்கு வருகை தந்து உயர் குல மங்கை யருக்கு மிட்டாய்கள் வழங்குவானாம், இவற் றைத் தின்ற சில கன்னியர் மாயமான விதத் தில் கருவுறுவார்களாம். அடிக்கடி யாரேனும் அழகிய பெண் ஜாரோடு பெலவேழ் அடர் காட்டுக்கு வேட்டைக்குப் போய் மறைந்து விடு வாளாம், பின்பு தலைநகர் பீட்டர்ஸ்பர்கில் அவளுக்குத் திருமணம் நடைபெறுமாம்.

என் மனைவி பாரிஸ் நகரைப் பற்றிக் கருத்தை ஈர்க்கும் விதத்தில் எனக்கு விவரித் தாள். புத்தகங்கள் வாயிலாக, சிறப்பாக மக் ஸிம் தியூ-கான் இயற்றியுள்ள சிறந்த நூலின் வாயிலாக அந்த நகரை நான் ஏற்கெனவே அறிந்திருந்தேன். என் மனைவி மான் மார்ட்டர் உணவு விடுதிகளிலும் லத்தீன் வட்டா



படிப்பகம்

www.padippakam.com

ரத்தின் பரபரப்பு மிக்க வாழ்க்கையிலும் பாரிசை ஆராய்ந்து அறிந்திருந்தாள். அவள் சொன்ன கதைகள் மதுவைக் காட்டிலும் அதிகமாக எனக்குக் கிளர்ச்சி ஊட்டின. நான் பெண்ணுக்குப் போற்றிப் பாடல்கள் சில இயற்றினேன். பெண் மீது உள்ள காதலின் வலிமையினாலேயே வாழ்க்கையின் அழகு அனைத்தும் படைக்கப்பட்டிருக்கிறது என்று நான் உணர்ந்தேன்.

தனக்கே நேர்ந்த காதல் அநுபவங்கள் பற்றி அவள் கூறிய கதைகள் எனக்கு எல்லாவற்றையும் விட அதிகமாகப் பிடித்திருந்தன, கவர்ச்சியாய் இருந்தன. வியப்பூட்டும் சுவையுடனும் ஒளிவு மறைவு இன்றியும் இந்த அநுபவங்களை அவள் விவரித்தாள். அவளுடைய ஒளிவு மறைவின்மை சில சந்தர்ப்பங்களில் எனக்கு மிகுந்த கூச்சம் உண்டாக்கியது. தன் மணமகனான ஜெனரலின் கேலிக்குரிய உருவத்தை, நுண்மையாகக் கூராக்கப்பட்ட பென்சிலால் படம் வரைவது போல, எளிய சொற்களில் சற்றே நகையாடியவாறு அவள் சித்திரித்தாள். அந்த ஜெனரல் காட்டெருதை ஜாருக்கு முன்னதாகச் சுட்டு விட்டு, காயமடைந்த எருதை நோக்கி, “மன்னித்துக் கொள்ளுங்கள் மாட்சிமை தங்கிய பேரரசர் பிரானே!” என்று கத்தினானாம்.

நாடு கடந்த ருஷ்யர்களைப் பற்றி அவள் கதைகள் சொன்னாள். மற்றவர்கள் பால் பெரிய மனிதப் போக்கைக் காட்டும் மறைமுகப் புன்னகையை அவளுடைய சொற்களில் நான்



படிப்பகம்

www.padippakam.com

எப்போதும் உணர்ந்தேன். சில வேளைகளில் அவளுடைய ஒளிவு மறைவின்மை வெகுளித் தனமான வெட்கமின்மைக்கு இழிந்தது. அவள் பூனையினது போன்ற கூரிய ரோஜா நிற நாக்கினால் உதடுகளை ருசியுடன் நக்கிக் கொண்டாள், அவளுடைய விழிகள் ஏதோ சிறப்பான வகையில் சுடர்ந்தன. பிறர் பால் அருவருப்புப் பொறி அவற்றில் ஒளிர்வதாகச் சில வேளைகளில் எனக்குத் தோன்றியது. ஆனால், பொம்மைகளுடன் தன்னை மறந்து விளையாடும் சிறுமியாகவே அவளை நான் அடிக்கடி கண்டேன்.

ஒரு முறை அவள் சொன்னாள்:

''காதலில் ஆழ்ந்த ருஷ்யன் எப்போதும் சற்று அதிகமாகப் பேசுகிறான். சொற் பெருக்கு காரணமாக அவனைச் சகிப்பது கடினம் ஆகிறது, சில வேளைகளில் அவன் மேல் வெறுப்பு உண்டாகிறது. அழகாகக் காதலிக்க வல்லவர்கள் பிரெஞ்சுக்காரர்கள் மட்டுந்தாம். காதல் அவர்களுக்கு அநேகமாக வழிபாட்டு முறை.''

இதன் பின் நான் அவள் விஷயத்தில் சொற் செட்டையும் மேற்கொள்ளத் தொடங்கி னேன்.

பிரெஞ்சு மாதரைப் பற்றி அவள் சொன் னாள்:

''ஆர்வம் பொங்கும் இதயக் கனிவை அவர் களிடம் எப்போதும் காண முடியாது, ஆனால் குதூகலமான, நுட்பமாகப் பண்படுத்தப்பட்ட சிற்றின்பப் பற்றினால் அவர்கள் இதற்கு அழ



படிப்பகம்

www.padippakam.com

காக ஈடு கட்டி விடுகிறார்கள். காதலை அவர் கள் கலையாக மதிக்கிறார்கள்.''

இவற்றை எல்லாம் அவள் மிக ஆழ்ந்த முறையில், படிப்பினை நல்கும் தொனியில் கூறினாள். இவை எனக்குத் தேவையாய் இருந்த அறிவியல்கள் அல்லதாம், ஆயினும் இவை அறிவியல்களாக இருந்ததால் அவளு டைய சொற்களை நான் ஆர்வத்துடன் செவி மடுத்தேன்.

''ருஷ்ய மாதருக்கும் பிரெஞ்சு மாதருக் கும் இடையே, பழங்களுக்கும் பழ மிட்டாய் களுக்கும் இடையே உள்ள அதே வேறுபாடு உள்ளது,'' என்று ஒரு முறை நிலவு வீசிய இர வில் தோட்டத்துப் பந்தரில் உட்கார்ந்தவாறு அவள் சொன்னாள்.

அவளும் மிட்டாயாகத் தான் இருந்தாள். எங்கள் மண வாழ்க்கையின் முதல் நாள்களில் ஆண் பெண் உறவு பற்றி இன்பக் கற்பனை வாதியான எனது கருத்துக்களை, இயல்பாகவே உற்சாகப் பெருக்குடன் நான் விளக்கிய போது அவளுக்குப் பெருத்த வியப்பு உண்டாயிற்று.

''இதை நீங்கள் ஆழ்ந்த முறையிலா சொல் லுகிறீர்கள்? நீங்கள் மெய்யாகவே இப்படி நினைக்கிறீர்களா?'' என்று இள நீல நில வொளியில் என் கைகளில் சாய்ந்தவாறு வின வினாள் அவள்.

அவளுடைய ரோஜா மேனி ஒளி ஊடுருவக் கூடியதாகத் தோன்றியது. வாதா மலரின் வெறியூட்டும், சற்று கசப்பான மணம் அதி லிருந்து வந்தது. அவளுடைய மெல் விரல்கள்



12—1227

படிப்பகம்

www.padippakam.com

என் மயிர்ப் பிடரியைச் சிந்தனையுடன் வருடின. கலவரத்துடன் அகலத் திறந்த விழிகளால் என் முகத்தை உற்று நோக்கி நம்பிக்கை இன்றி முறுவலித்தாள்.

''ஆ, என் கடவுளே!'' என்று கத்தி, தரையில் குதித்து, அறையில் ஒளியிலிருந்து நிழலுக்குச் சிந்தனையுடன் நடக்கத் தொடங்கினாள். நிலவொளியில் அவளுடைய மழமழப்பான தோல் மென்மையாகப் பளிச்சிட்டது. வெறுங் கால்கள் தரையில் ஓசையின்றிப் பட்டன. பின்பு, மீண்டும் என்னிடம் வந்து, அங்கைகளால் என் கன்னங்களைத் தடவி, தாயின் தோரணையில் சொன்னாள்:

''நீங்கள் கன்னியுடன் வாழ்க்கை தொடங்கி இருக்க வேண்டும்,—ஆம், ஆம்! என்னோடு அல்ல...''

நான் அவளை அணைத்துத் தூக்கிக் கொண்ட போது அவள் அழத் தொடங்கி, மெல்லிய குரலில் கூறினாள்:

''நான் உங்களை எப்படிக் காதலிக்கிறேன் என்பதை நீங்கள் உணர்கிறீர்கள், அல்லவா? உங்களோடு நான் அநுபவிக்கும் இவ்வளவு இன்பத்தை முன்பு ஒருபோதும் அநுபவித்தது இல்லை. இது உண்மை, நம்புங்கள்! இந்த மாதிரிக் கனிவுடனும் பரிவுடனும் இந்த மாதிரிக் கவலையற்ற இதயத்துடனும் முன்பு ஒருபோதும் நான் காதலித்தது கிடையாது. உங்களோடு இருப்பதில் எனக்கு ஆச்சரியப்படும் அளவுக்கு இன்பம் உண்டாகிறது, ஆனாலும் நான் சொல்லுகிறேன்: நாம் தவறு செய்து



படிப்பகம்

www.padippakam.com

விட்டோம். உங்களுக்கு எப்பேர்ப்பட்டவள் வேண்டுமோ அப்பேர்ப்பட்டவள் அல்லள் நான்! அல்லவே அல்லள்! நான்தான் தவறு செய்து விட்டேன்.''

அவளைப் புரிந்து கொள்ளாமல் அவளுடைய சொற்களால் நான் மிரண்டு போனேன். கொஞ்சல்களின் இன்பத்தால் அவளுடைய மனநிலையை விரைவில் மாற்றி விட்டேன். ஆயினும் இந்த விந்தைச் சொற்கள் என் நினைவில் தங்கிவிட்டன. இதற்குச் சில நாள்களுக்குப் பின் அவள் பேரின்பக் கண்ணீர் மல்க மீண்டும் துயரத்துடன் இந்தச் சொற்களைத் திரும்பக் கூறினாள்:

''அட, நான் மட்டும் கன்னியாய் இருந்தால்!..''

எனக்கு நினைவு இருக்கிறது, அந்த இரவில் தோட்டத்தில் பனிப் புயல் வீசியது. எல்டர் மரக் கிளைகள் சன்னல் கண்ணாடியில் இடித்தன. புகைபோக்கியில் காற்று ஓநாய் போல ஊளையிட்டது. எங்கள் அறையில் இருட்டும் குளிருமாக இருந்தது. பிய்ந்த சுவர்க் காகிதங்கள் சரசரத்தன.

கொஞ்சம் பணம் சம்பாதித்ததும் நாங்கள் தெரிந்தவர்களை அழைத்துச் சிறப்பான விருந்துகள் கொடுத்தோம். இறைச்சி உண்டோம், வோத்காவும் பீரும் அருந்தினோம், பேஸ்ட்ரிகள் சுவைத்தோம், மொத்தத்தில், இன்பம் துய்த்தோம். என் பாரிஸ் நகர நங்கை ஆர்



படிப்பகம்

www.padippakam.com

வத்துடன் நிறையச் சாப்பிட்டாள், ருஷ்ய உணவு வகைகளை விரும்பினாள்: சிச்ருக்—மாட்டு இரைப்பையில் பக்வீட் பொங்கலும் வாத்துக் கொழுப்பும் வைத்த வெஞ்சனம்—மீன் கொழுப்பும் கெளிற்று இறைச்சியும் கொண்டு செய்த பணியாரம், ஆட்டு இறைச்சி சேர்ந்த உருளைக் கிழங்கு சூப் முதலியவை இவற்றில் சில.

'பேராசைக்கார வயிறுகள்' திருக்கூட்டம் ஒன்றை அவள் அமைத்தாள். வயிறார உண்ணவும் நன்றாக மது பருகவும் ஆசை கொண்ட பலர் இதில் இருந்தார்கள். இவர்கள் உணவு வகைகளின் ருசி சம்பந்தமான மர்மங்களை அழகியல் நோக்கில் நுட்பமாக அறிந்திருந்தார்கள், சொல்லாற்றலுடன் சளைக்காமல் பேசினார்கள். நானோ, வேறு விதமான மர்மங்களில் ஆர்வம் கொண்டிருந்தேன், கொஞ்சமாகச் சாப்பிட்டேன். மீதூண் சுவைக்கும் நிகழ் முறையில் எனக்குக் கவர்ச்சி ஏற்படவில்லை. என் அழகியல் தேவைகளின் வட்டத்துக்கு வெளியே இருந்தது அது.

"இவர்கள் வெற்று ஆட்கள்!" என்று 'பேராசைக்கார வயிறுகள்' பற்றி நான் கூறினேன்.

"நன்றாகக் குலுக்கிக் கொட்டினால் எந்த மனிதனும் வெற்று ஆள் தானே," என்று பதில் அளித்தாள் அவள். "'ஆடைகளுக்குள் நாம் எல்லாரும் அம்மணமானவர்களே!' என்றார் ஹேய்னே."

ஐயுறவுவாதப் பாங்குள்ள மேற்கோள்களை அவள் நிறையத் தெரிந்து வைத்திருந்தாள்,



படிப்பகம்

ஆனால் திறமையாகவும் சந்தர்ப்பப் பொருத்த மாகவும் அவற்றை அவள் எப்போதும் கையாள வில்லை என்று எனக்குத் தோன்றியது.

நெருங்கிய ஆடவர்களைக் "குலுக்கிக் கொட்டுவது" அவளுக்கு நிரம்பப் பிடித்தது. இதை அவள் மிக எளிதாகச் செய்தாள். சோர் வறியாத குதூகலமும் சமயோசித சாமர்த் தியமும் பாம்பு போன்று வளைந்து நெளியும் இலாகவமும் வாய்ந்த அவள் மிக உயர்ந்த தரம் அல்லாத மனக் கிளர்ச்சிகளைத் தூண்டி விட்டுத் தன்னைச் சுற்றிலும் ஆரவாரம் நிறைந்த உற்சாகப் பெருக்கை விரைவில் ஏற் படுத்தினாள். ஒருவன் அவளோடு சில நிமி டங்கள் உரையாடினால் போதும், அவனுடைய காதுகள் சிவக்கும், பின்பு அவை ஊதா ஆகி விடும், கண்கள் கனிவுடன் ஈரமாகி முட்டைக் கோசைப் பார்க்கும் ஆட்டினது போன்ற பார் வையுடன் அவளை நோக்கும்.

"காந்தக் கவர்ச்சியுள்ள பெண்மணி!" என்று வியந்து பாராட்டினான் எவனோ உதவிச் சான்றதிகாரி. இவன் உருப்படாத பிரபு வம் சத்தினன். பாலுண்ணியும் மாதாகோயில் கும் மட்டம் போன்ற பெரு வயிறும் உள்ளவன்.

லித்சேய் என்னும் பிரபு வம்சப் பள்ளி யின் முன்னாள் மாணவனும் யாரஸ்லாவல் நகரத்தானும் ஆன ஒரு சணல் முடியன் அவள் மீது செய்யுள்கள் இயற்றினான்—எப் போதும் மூவசைச் சீரில். எனக்கு அவை வெறுக்கத் தக்கவையாகத் தோன்றின. அவ

www.padippakam.com

ளோ, அவற்றைப் படித்துக் கண்ணீர் வரும் வரை கெக்கலித்தாள்.

"நீ இவர்களை எதற்காகத் தூண்டு கிறாய்?" என்று கேட்டேன்.

"தூண்டில் போட்டு மீன் பிடிப்பது போல வே இது சுவையானது. இதற்குப் பெயர்தான் காதல் பசப்பு என்பது. தன்னை மதிக்கும் ஒரு பெண்கூடக் காதல் பசப்பை விரும்பாமல் இருக்க மாட்டாள்."

சில வேளைகளில் அவள் என் விழிகளை விழி பொருந்த நோக்கி, புன்னகையுடன் கேட் டாள்:

"பொறாமைப்படுகிறாயோ?"

இல்லை, நான் பொறாமைப்படவில்லை. ஆனால் இதெல்லாம் நான் வாழ்வதற்குச் சற்று இடைஞ்சலாய் இருந்தது. கொச்சைப் பேர் வழிகளை எனக்குப் பிடிக்காது. நான் குதூ கலமான ஆள். சிரிப்பு மனிதர்களின் மிகச் சிறந்த பண்பு என்பதை நான் அறிந்திருந் தேன். சர்க்கஸ் கோமாளிகள், திறந்த மேடை நகைச்சுவை நடிகர்கள், நாடக அரங்கின் விகடர் கள் ஆகியவர்களை இயல்பான திறமை இல் லாதவர்களாக நான் மதித்தேன். அவர்களை விட நன்றாகச் சிரிப்பு மூட்ட என்னால் முடி யும் என்று உறுதியாக உணர்ந்தேன். எங்கள் விருந்தாளிகளை வயிறுகள் புண்ணாகும் அளவுக்குப் பல முறை சிரிக்க வைத்திருந்தேன்.

"அட கடவுளே!" என்று வியந்து பாராட்டி னாள் என் மனைவி. "எப்பேர்ப்பட்ட நகைச்



படிப்பகம்

www.padippakam.com

சுவை நடிகர் ஆகி இருக்கலாம் நீங்கள்! நாடக நடிகர் ஆக அரங்கேறுங்கள்!''

தொழில் முறை அற்ற குழுவினரின் நாடகங்களில் அவளும் திறமையாக நடித்தாள். பெரிய மன்ற நிர்வாகிகள் அவளை நடிக்க அழைத்தார்கள்.

''நான் அரங்கை விரும்புகிறேன், ஆனால் திரை மறைவை அஞ்சுகிறேன்,'' என்றாள் அவள்.

விருப்பங்களிலும் எண்ணங்களிலும் சொற்களிலும் அவள் உண்மையைக் கடைப்பிடித்தாள்.

''நீ அளவு கடந்து மிக நிறையத் தத்துவச் சிந்தனை செய்கிறாய்,'' என்று எனக்குப் போதித்தாள். ''சாராம்சத்தில் வாழ்க்கை எளியது, கரடு முரடானது. அதில் ஏதோ தனிப்பட்ட உட்பொருளைத் தேடி அதைச் சிக்கலாக்குவது தேவை இல்லை. அதன் கரட்டு முரட்டுத் தனத்தை மென்மை ஆக்கக் கற்பதுதான் தேவை. இதற்கு மேல் எதையும் சாதித்து விட முடியாது.''

அவளுடைய தத்துவத்தில் மாதர் நோயியல் அளவுக்கு மேல் இருந்ததை நான் உணர்ந்தேன். அவளுக்குத் திருமறையாகப் பயன் பட்டது **பேறு கால மருத்துவ நூல்** என்று எனக்குத் தோன்றியது. கல்லூரிப் படிப்பை முடித்தபின் தான் படித்த முதலாவது விஞ்ஞான நூல் ஒன்று தனக்கு எப்படித் திகைப் பூட்டியது என்று அவளே எனக்கு விவரித்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

"வெகுளிப் பெண்ணான நான் தலையில் செங்கல் தாக்கியது போல உணர்ந்தேன். மேகங் களிலிருந்து நான் சேற்றில் தள்ளப்பட்டது போல எனக்குத் தோன்றியது. எதை எற் கெனவே என்னால் நம்ப முடியவில்லையோ, அதன் மேல் இரக்கத்தால் நான் அழுதேன், ஆனால் கடுமையானது என்றாலும் திண்ண மான தரையை விரைவில் காலடியில் தொட்டு உணர்ந்தேன். இதனால் கடவுள் மீது இன் னும் அதிக இரக்கம் உண்டாயிற்று. நான் கட வுளை மிக நன்றாக, நெருக்கமாக உணர்ந்து வந்தேன். திடீரென்று அவர் சிகரெட்டுப் புகை போலக் காற்றில் பரவிக் கரைந்து விட் டார். அவரோடு கூடவே காதலின் சுவர்க்க போகம் பற்றிய கனவும் மறைந்துவிட்டது. கல் லூரி மாணவிகளான நாங்கள் எல்லாருமே, காதலைப் பற்றி மிக நிறையச் சிந்தித்தோம், மிக நன்றாகப் பேசினோம்!"

கல்லூரியிலும் பாரிசிலும் அவளுக்கு ஏற்பட் டிருந்த எல்லாவற்றையும் மறுக்கும் நிகிலிசம் என்னை மோசமாகப் பாதித்தது. சில சம யம், இரவில் வேலை முடிந்து மேசை அரு கிலிருந்து எழுந்ததும் நான் அவளைப் பார்க் கச் செல்வேன்—படுக்கையில் அவள் இன்னும் சிறியவளாக, ஒயிலுள்ளவளாக, அழகியாகக் காணப்பட்டாள்—பார்த்து, அவளுடைய முறிவு ஏற்பட்ட உள்ளத்தையும் சிடுக்கான வாழ்க்கை யையும் பற்றிப் பெருந் துயரத்துடன் எண்ணி மிட்டேன். அவள் மேல் உண்டான இரக்கம் என் காதலை இன்னும் தீவிரம் ஆக்கியது.



படிப்பகம்

www.padippakam.com

எங்களுடைய இலக்கியச் சுவைகள் சமரசப் படுத்த முடியாதபடி வெவ்வேறு புறங்களில் சென்றன: பல்ஸாக்கையும் பிளாபேரையும் நான் பேரின்பத்துடன் படித்தேன். அவளுக்கோ போல் பெவால், அக்நாவ் பெய்லியே, போல் த-கோக் ஆகியோரின் நூல்கள் பிடித்திருந் தன, சிறப்பாக **மங்கை ழிரோ, என் மனைவி.** இந்த நூலை எல்லாவற்றிலும் நுண்ணறி வார்ந்ததாக அவள் கருதினாள். எனக்கோ, அது **தண்டனைகள் குறித்த சட்டத் தொகுப்பு** போன்று சலிப்பூட்டுவதாக இருந்தது. இவை எல்லாம் இருப்பினும் எங்கள் உறவுகள் மிக நன்றாக அமைந்தன. ஒருவர் மீது ஒருவர் அக்கறையை நாங்கள் இழக்கவில்லை, காமப் பற்று அவிந்து விடவில்லை. ஆனால் இணை வாழ்க்கையின் மூன்றாம் ஆண்டில் நான் ஒரு விஷயத்தைக் கவனிக்கலானேன்—என் உள் ளத்தில் ஏதோ ஒன்று கடும் வன்மத்துடன் நெறுநெறுத்தது, நாளுக்கு நாள் அதிக உரக்க வும் அதிக உறுத்தலுடனும். நான் இடைய றாமல் ஆர்வத்துடன் கல்வி பயின்றேன், புத்த கங்கள் படித்தேன், இலக்கியப் பணியில் ஆழ்ந்து ஈடுபடலானேன். நானும் மனைவியும் அதிக மாகச் சம்பாதிக்கத் தொடங்கினோம், எனவே பகல், மாலை விருந்துகளை மேலும் அடிக்கடி கொடுக்க எங்களால் முடிந்தது. குறைவாக அக்கறைக்கு உரியவர்களான விருந்தாளிகளின் எண்ணிக்கை இதனால் வளர்ந்து கொண்டு போயிற்று, அவர்கள் எனக்கு வர வர அதிக இடைஞ்சல் செய்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

என் மனைவிக்கு வாழ்க்கை ஒரு வகையான பொம்மைக் காட்சிசாலையாக எதனாலோ தோன்றியது. "கைகளால் தொடாதிருக்கும்படி வேண்டப்படுகிறது" என்ற எச்சரிக்கைக் குறிப்பு ஆண்கள் மேல் இருக்கவில்லை, ஆதலால் அவள் சில வேளைகளில் மட்டுமீறி அசாக்கிரதையாக அவர்களை அணுகினாள். அவளுடைய ஆவலை அவர்கள் தங்களுக்கு அளவு கடந்து சாதகமாக மதிப்பிட்டார்கள். இந்தக் காரணத்தால் தப்பெண்ணங்கள் ஏற்பட்டன. இவற்றை நான் போக்க வேண்டி இருந்தது. சில சந்தர்ப்பங்களில் போதிய தன்னடக்கம் இன்றியும், ஒருவேளை எப்போதும் மிகத் திறமைக் குறைவுடனும் நான் இதைச் செய்தேன். நான் காதைப் பிடித்து முறுக்கிய ஒரு மனிதன் என் மேல் குறை சொன்னான்:

"ஊம், நல்லது, நான் குற்றவாளிதான், ஒப்புக் கொள்கிறேன்! ஆனால் என்னைக் காதைப் பிடித்துத் திருகுவதாவது! நான் என்ன, சின்னப் பையனா? இந்தக் காட்டானுக்கு இரண்டு மடங்கு மூத்தவன் ஆயிற்றே நான்! இவன் என்னடா என்றால், என் காதைப் பிடித்து முறுக்குகிறான்! அட, அடித்திருக்கலாமே! அது கொஞ்சத்துக்குக் கொஞ்சம் நாகரிகமாய் இருக்குமே!"

மனைவியின் அன்பனை அவனுடைய தன் மதிப்பின் அளவுக்கு ஏற்பத் தண்டிக்கும் கலை எனக்குக் கைவரவில்லை போலும்.

நான் எழுதிய கதைகள் விஷயத்தில் என் மனைவி பெரிதும் அசட்டை காட்டினாள்.



படிப்பகம்

www.padippakam.com

அவ்வாறு அவள் செய்தது சிறிது காலம் வரை எனக்குக் கொஞ்சமேனும் வருத்தம் தரவில்லை. நான் ஆழ்ந்த இலக்கியவாதி ஆவேன் என்ற நம்பிக்கை எனக்கே இன்னும் ஏற்படாத காலம் அது. விந்தையான ஏதோ தன்னை மறந்த நிலையின் வெப்ப அலைகளது பெருக்கை அப்போதே அடிக்கடி உணர்ந்து வந்தாலும் செய்தித்தாளில் நான் செய்த வேலையைப் பிழைப்புக்கு வழி என்று மட்டுமே கருதி வந்தேன். ஆனால் ஒரு நாள், இரவில் எழுதிய **இஸெர்கீல் கிழவி** என்னும் கதையைக் காலையில் நான் அவளுக்குப் படித்துக் காட்டிய போது, அவள் ஆழ்ந்து தூங்கி விட்டாள். முதல் நிமிடத்தில் இதனால் என் மனம் புண்படவில்லை. நான் படிப்பதை நிறுத்தி விட்டு அவளை நோக்கியவாறு சிந்தனையில் ஆழ்ந்தேன்.

அற்றலைந்த நீள் சோபா முதுகில் எனக்கு இனிய சிறிய தலையைச் சாய்த்து, வாயைச் சற்றே திறந்தவாறு அவள் குழந்தை போல அமைதியாகவும் சீராகவும் மூச்சு விட்டாள். எல்டர் மரக் கிளைகளின் ஊடாகக் காலை வெயில் அறைக்குள் எட்டிப்பார்த்தது. காற்று மலர்கள் போன்ற பொன் நிறப் புள்ளிகள் நங்கையின் மார்பு மீதும் முழங்கால்கள் மேலும் படிந்திருந்தன.

மனத் தாங்கலின் ஆழ்ந்த ஊசிக் குத்தல் வலியால் துடித்தவாறு, என் எழுத்துத் திறன் பற்றிய சந்தேகம் நெஞ்சில் குமைய, நான்



படிப்பகம்

www.padippakam.com

எழுந்து ஓசைப்படுத்தாமல் தோட்டத்துக்குச் சென்றேன்.

கடினமான அடிமை உழைப்பிலும் அழுக்கிலும் ஒழுக்கக் கேட்டிலும் வறுமையிலுமோ, அல்லது நடை பிணம் போன்ற, போலித் தற்பெருமை கொண்ட, கொச்சைத்தனம் நிறைந்த செல்வச் செழிப்பிலோதான் மாதர்களை நான் வாழ்ந்த நாள்கள் முழுவதிலும் கண்டிருந்தேன். குழந்தைப் பருவத்தில் எனக்கு ஏற்பட்டிருந்த நேர்த்தியான ஒரே உளப்பதிவு அரசி மார்கோ* பற்றியது. ஆனால் வேறு வித உளப்பதிவுகளின் முழு மலைத் தொடர் அதிலிருந்து என்னைப் பிரித்தது. இஸெர்கீலின் வாழ்க்கைக் கதை மாதருக்குக் கட்டாயம் பிடிக்கும், விடுதலை வேட்கையையும் அழகு ஆர்வத்தையும் அவர்களது உள்ளங்களில் எழுப்பும் என்று நான் எண்ணினேன். ஆனால்—இதோ, எனக்கு மிக நெருங்கியவள் என் கதையால் பாதிக்கப்படவில்லை—தூங்குகிறாள்!

ஏன்? வாழ்க்கையால் என் நெஞ்சில் உருக்கி வார்க்கப்பட்ட மணி போதிய நாதம் உள்ளது அல்லவோ?

இந்த மாது என் இதயத்தால் என் தா

* அரசி மார்கோ—மார்கரெட் வலுவா (1553—1615). நவார், பிரான்சு நாட்டு அரசி. பிரான்சின் அரசன் இரண்டாம் ஹென்றிக்கும் காதரைன் மெடிசிக்கும் பிறந்தவள். அலெக்சாந்தர் டியூமாவினது ஒரு நவீனத்தின் கதாநாயகி.—ப-ர்.



படிப்பகம்

www.padippakam.com

யின் இடத்தில் ஏற்கப்பட்டிருந்தாள். படைப்பு ஆற்றலைத் தூண்டும் வெறியூட்டும் தேனை எனக்குப் பருகக் கொடுக்க இவள் வல்லவள் என்று நான் எதிர்பார்த்தேன், நம்பினேன். வாழ்க்கைப் பாதைகளில் என்னுள் ஏற்றப் பட்டிருந்த முரட்டுத்தனத்தை இவளுடைய செல்வாக்கு மென்மைப்படுத்தும் என்று நான் எதிர்பார்த்தேன்.

இது நடந்தது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு. உள்ளத்தில் புண்முறுவலுடன் இதை இப்போது நான் நினைவுகூர்கிறேன். ஆனால், விரும்பிய நேரத்தில் உறங்க மனிதனுக்கு உள்ள விவாதத்துக்கு இடமற்ற உரிமை அந் தக் காலத்தில் என்னைப் பெரிதும் வருந்தச் செய்தது.

துயர் தரும் விஷயம் பற்றி மகிழ்ச்சியுடன் பேசினால் வருத்தம் மறைந்து விடும் என்று நான் நம்பினேன்.

உலகத்தில் ஒருவன் நுட்பமான தந்திரத் துடன் செயலாற்றுகிறான், மனிதர்களுடைய துன் பங்களைக் காண்பதில் அவனுக்கு இன்பம் உண்டாகிறது என்று நான் எண்ணினேன். அன்றாட வாழ்க்கையின் துன்ப நிகழ்ச்சிகளை உருவாக்கும் ஓர் ஆவி நிலவுகிறது, அது வாழ்க்கையைச் சாமர்த்தியமாகக் கெடுக்கிறது என்று எனக்குத் தோன்றியது. துன்ப நிகழ்ச்சி களின் கண்ணுக்குப் புலப்படாத படைப்பாளி யை எனது சொந்தப் பகைவனாகக் கருதி,



படிப்பகம்

www.padippakam.com

அவனுடைய சூழ்ச்சிகளில் சிக்காமல் இருக்க முயன்று வந்தேன்.

எனக்கு நினைவு இருக்கிறது, **புத்தரும் அவருடைய வாழ்க்கையும் போதனையும் சங்கமும்** என்ற ஓல்டென்புர்கின் நூலில் "எல்லா உயிர் வாழ்தலினதும் சாராம்சம் துக்கமே" என்ற வாக்கியத்தைப் படித்த போது எனக்கு ஆழ்ந்த சீற்றம் பொங்கியது. நான் வாழ்க்கையில் இன்பங்களை மிக நிறைய அநுபவித்து விடவில்லை என்றாலும் அதன் கடுந் துன்பங்கள் விதியாக அல்ல, தற்செயலானவையாக எனக்குத் தோன்றின. ஆர்ச்பிஷப் கிரிசான்பின் **கீழை நாட்டு மதம்** என்ற சிறந்த நூலைக் கவனமாகப் படித்த பின், அச்சம், சோர்வு, துன்பம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பிரபஞ்சம் பற்றிய போதனைகள் எனக்கு அறவே ஏற்புடையவை அல்ல என்று இன்னும் அதிக ஆத்திரத்துடன் உணர்ந்தேன். மத ஆனந்த பரவச மனநிலையின் பயனின்மையால் நான் அவமதிக்கப்பட்டேன். துன்பத்தின் மீது அருவருப்பு எல்லா வகையான துன்ப நிகழ்ச்சிகள் மீதும் உள்ளார்ந்த வெறுப்பை எனக்கு ஏற்படுத்தியது. அவற்றை நகைச்சுவை இசைக் கூத்துகளாக மாற்ற நான் ஓரளவு நன்றாகப் பழகி விட்டேன்.

எனக்கும் என் மனைவிக்கும் இடையே "குடும்பத் துன்ப நாடகம்" உருவாயிற்று, ஆனால் நாங்கள் இருவரும் அதன் வளர்ச்சியை ஒன்று சேர்ந்து எதிர்த்தோம் என்று மட்டும் சொல்வதற்காக இதை எல்லாம் பேசாமலும்



படிப்பகம்

www.padippakam.com

இருந்திருக்கலாம் தான். என்னை நானே தேடிக் காண்பதற்காக நான் சென்ற வழியின் அக்கறைக்குரிய வளைவு நெளிவுகளைக் குறிப்பிட எனக்கு விருப்பம் உண்டானதாலேயே நான் கொஞ்சம் தத்துவம் பேசினேன்.

என் மனைவியும் தன் குதூகல சுபாவம் காரணமாகக் குடும்பத் துன்ப நாடகம்—அளவு மீறி ''உளவியல் பாதிப்புகளுக்கு உள்ளான'' ருஷ்ய ஆடவரும் பெண்டிரும் ஈடுபட வெகுவாக விரும்பும் நாடகம்—ஆட இயலாதவளாக இருந்தாள்.

ஆனால் சணல் முடியனான முன்னாள் லித்சேய் மாணவனின் சோர்வூட்டும் மூவசைச் செய்யுள்கள் எப்படியும் அவள் மீது இலையுதிர் கால மழை போலப் பாதிப்பு நிகழ்த்தியேவிட்டன. அவன் தபால் காகிதப் பக்கங்களில் அழகிய கையெழுத்தில் செய்யுள்களைக் கவனமாக எழுதி நிறைத்து, புத்தகத்திலும் தொப்பியிலும் சர்க்கரைப் பாத்திரத்திலும்—நாற்புறமும் அவற்றை மறைவாகச் செருகி வைத்தான். கச்சிதமாக மடித்த இந்தக் காகிதங்களைக் கண்டு நான் அவற்றை மனைவியிடம் பின்வரும் சொற்களோடு கொடுத்தேன்:

''தங்கள் இதயத்தைத் தாக்குவதற்கான இந்த அடுத்த முயற்சியை ஏற்றுக் கொள்ளுங்கள்!''

கியூபிடின்* காகித பாணங்கள் முதலில்

* மன்மதன் போன்ற ரோமானியக் காதற் கடவுள்.—**மொ-ர்.**



படிப்பகம்

www.padippakam.com

அவளைப் பாதிக்கவில்லை. அவள் நீண்ட செய்யுள்களை எனக்குப் படித்துக் காட்டி னாள். குறிப்பிடத்தக்க வரிகளைக் கண்டதும் இருவரும் சேர்ந்து நகைத்தோம்:

''இரவுபகல் எந்நேரமும் சேர்ந்திருப்போம்,
உறவுதனை நெஞ்சத்தடியில் பார்த்திருப்போம்.
அங்கத்து அசைவினையும் காட்டிடுவீர்,
மங்கைநீர் புறாப்போல அகலிடுவீர்,
பருந்தாய் நானும் பறந்திடுவேன்,
பார்த்திடத் தானும் சிறந்திடுவேன்.''

ஆனால் ஒருநாள் முன்னாள் லித்சேய் மாணவனின் இம்மாதிரி அறிக்கை ஒன்றைப் படித்துக் காட்டி விட்டு அவள் சிந்தனையுடன் சொன்னாள்:

''எனக்கு இவன் மேல் இரக்கம் உண்டா கிறது!''

எனக்கு நினைவு இருக்கிறது, நான் இரக்கப் பட்டது அவன் மேல் அல்ல. அந்தக் கணம் முதல் அவள் மூவசைச் செய்யுள்களை எனக்கு உரக்கப் படித்துக் காட்டுவதை நிறுத்திவிட்டாள்.

கவிஞன் என்னை விட ஒரு நான்கு வயது பெரியவன், கட்டுக் குட்டானவன். வாயே திறக்க மாட்டான், போதைதரும் பானங்களில் மிகுந்த பற்று உள்ளவன், ஆணி அடித்தாற் போல உட்கார்ந்திருப்பதில் சூரன். விழா நா ளில் பகல் இரண்டு மணிக்கு விருந்துக்கு வந்து இரவு இரண்டு மணி வரை அசைவின்றி ஊமையாய் உட்கார்ந்திருக்க அவனால் முடிந்



படிப்பகம்

www.padippakam.com

தது. என்னைப் போலவே அவன் ஒரு வழக்கு ரைஞரிடம் எழுத்தனாக இருந்தான். நல்ல மனிதரான வழக்குரைஞரைத் தன் மறதிக் குணத்தால் பெரு வியப்பில் ஆழ்த்தினான். வேலையில் அசட்டையாய் இருந்தான். சற்றுக் கரகரத்த கட்டைக் குரலில் அடிக்கடி இப்படிச் சொன்னான்:

“பொதுவாக, இவையெல்லாம் வெட்டிப் பேச்சு!”

“ஆனால் எதுதான் வெட்டிப் பேச்சு இல்லை?”

“உங்களுக்கு எப்படிச் சொல்வது?” என்று கவர்ச்சி அற்ற சாம்பல் நிற விழிகளை விட்டத்தின் பக்கம் உயர்த்தி, சிந்தனை ததும்பக் கேட்டான், அப்புறம் ஒன்றும் பேசவில்லை.

எதனாலோ அவன் மற்றவர்களுக்குக் காட்டுவதற்காகவே போல, சிறப்பாகத் தாங்கக் கடினமான விதத்தில் சலிப்பூட்டினான். எனக்கு எல்லாவற்றையும் விட அவனது இந்தப் போக்கினால் அதிக எரிச்சல் உண்டாயிற்று. அவனுக்குக் குடியினால் போதை மெதுவாகவே ஏறிற்று. போதை ஏறியதும் கிண்டலாக மூக்கால் செருமினான். இந்தத் தன்மைகளைத் தவிர வேறு எதையும் நான் அவனிடம் காணவில்லை, ஏனென்றால், நிலவும் ஒரு சட்டத்தின் படி மனைவியை நைச்சியம் பண்ணும் மனிதன் கணவனின் நோக்கில் எப்போதும் கெட்டவன்.

உக்ரைனில் ஓர் இடத்திலிருந்து பணக்கார உறவினன் ஒருவன் முன்னாள் லித்சேய் மா



படிப்பகம்

www.padippakam.com

ணவனுக்கு மாதா மாதம் ஐம்பது ரூபிள் அனுப்பி வந்தான். அந்தக் காலத்தில் இது பெரிய தொகை. விழா நாள்களில் முன்னாள் லித்சேய் மாணவன் என் மனைவிக்கு மிட்டாய்கள் வாங்கி வந்து கொடுத்தான். அவளுடைய பிறந்த நாளில் ஒரு அலாரம் கடிகாரம் பரிசளித்தான்—வெண்கல அடிமரத் துண்டின் மேல் ஆந்தை பச்சைப் பாம்பைக் குத்திக் கிழிப்பது போன்ற உருவம் அமைந்தது.

அந்த அசிங்கம் பிடித்த கருவி வேண்டியதற்கு ஒரு மணி ஏழு நிமிடங்கள் முன்னதாக என்னை எப்போதும் எழுப்பித் தொலைத்தது.

என் மனைவி முன்னாள் லித்சேய் மாணவனோடு காதல் பசப்பை நிறுத்தி விட்டு, ஓர் ஆடவனின் உளச் சீரைக் குலைத்ததில் தன்னைக் குற்றவாளியாக எண்ணிய மாதுக்கு ஏற்ற கனிவை அவனிடம் காட்டத் தொடங்கினாள். அவளுடைய கருத்துப்படி இந்தத் துயரக் கதை எதில் போய் முடிய வேண்டும் என்று நான் அவளிடம் கேட்டேன்.

''தெரியாது,'' என்று விடை இறுத்தாள் அவள். ''எனக்கு அவன் விஷயத்தில் குறிப்பான உணர்ச்சி எதுவும் இல்லை, ஆனால், அவனைக் குலுக்கிக் கொட்ட ஆசையாய் இருக்கிறது. அவனுக்குள் எதுவோ உறங்கிக் கிடக்கிறது, அதைத் தட்டி எழுப்ப என்னால் முடியும் என்று தோன்றுகிறது.''

அவள் உண்மை சொல்கிறாள் என்பதை நான் அறிந்திருந்தேன். ஒவ்வொருவராக எல்



படிப்பகம்

www.padippakam.com

லாரையும் தட்டி எழுப்ப அவளுக்கு ஆசையாய் இருந்தது. இதில் அவள் மிக எளிதாக வெற்றி பெற்று வந்தாள். ஒரு அன்பனை எழுப்பி னாள்—அவனுக்குள் ஏதோ விலங்கு விழிப் படைந்தது. ஆண்களை மயக்கி வந்த கிரேக்கப் புராண அணங்கான செர்ஸியை அவளுக்கு நினைவு படுத்தினேன். ஆனால் ஆண்களைக் "குலுக்கிக்கொட்டும்" அவளுடைய ஆர்வத்தை இது மட்டுப்படுத்தவில்லை. ஆடுகள், எருதுகள், பன்றிகள் ஆகியவற்றின் மந்தை என்னைச் சுற்றிலும் நாளுக்கு நாள் பெருகி வந்ததை நான் கண்டேன்.

தெரிந்தவர்கள் எனது அன்றாடக் குடும்ப வாழ்க்கை பற்றிய திடுக்கிடச் செய்யும் சோகக் கதைகளைத் தாராள மனத்துடன் என்னிடம் கூறினார்கள். நான் ஒளிவு மறைவு இன்றியும் முரட்டுத்தனமாகவும் நடந்து கொண்டேன், கதை கட்டியவர்களை எச்சரித்தேன்:

"நான் உங்களை அடிப்பேன்!"

சிலர் தங்கள் செய்கைக்குப் பொய்யாக நியாயம் கற்பிக்க முயன்றார்கள்; மனத் தாங்கல் கொண்டவர்கள் வெகு சிலர், அவர் களும் நிரம்ப மனத்தாங்கல் கொள்ளவில்லை. என் மனைவி என்னிடம் சொன்னாள்:

"நான் சொல்வதைக் கேள் — முரட்டுத் தனத்தால் நீ எதையும் சாதிக்கப் போவதில் லை, ஆட்கள் இன்னும் மோசமாகப் பேசுவது தான் விளையும்! நீ பொறாமைப்படவில்லை யே?"

ஆம், நான் இளைஞனாகவும் மிகுந்த



படிப்பகம்

www.padippakam.com

தன்னம்பிக்கை கொண்டவனாகவும் இருந்த தால் பொறாமைப்படவில்லைதான். ஆனால், சில உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் அனுமானங்களையும் ஒருவன் காதல் நங்கை யிடம் மட்டுமே கூறுகிறான், வேறு யாரிடமும் கூறுவதில்லை. பெண்ணோடு உறவாடுகையில் குறித்த நேரத்தில் ஒருவன் தனக்குத்தானே அந்நியனா ஆகி, தெய்வ நம்பிக்கை உள்ள வன் தன் கடவுள் முன்னர் தன்னை வெளிப் படுத்துவது போல அவளுக்கு முன் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறான். பெரிதும் எனக்கு உரிய, எனக்கு மட்டுமே சொந்தமான இந்த எல்லா விவரங்களையும் அந்தரங்கக் கணங்களில் அவள் வேறு ஒருவனுக்குத் தெ ரிவிக்கக்கூடும் என்று எண்ணிய போது எனக் குக் கஷ்டமாய் இருந்தது. துரோகத்துக்கு மிக நிகரான ஒன்று சாத்தியம் என நான் உணர்ந் தேன். ஒருவேளை இந்த அச்சமே பொறாமை யின் வேராக விளங்குகிறதோ?

இந்த மாதிரி வாழ்க்கை என்னை முடக்கி நான் சென்று கொண்டிருந்த பாதையி லிருந்து பிறழ்விக்கக் கூடும் என்று உணர்ந் தேன். இலக்கியத்தைத் தவிர வேறு எந்த இடமும் வாழ்க்கையில் எனக்கு இல்லை என்று ஏற்கெனவே எண்ணத் தொடங்கி இருந் தேன். குடும்பத்தில் இருந்த நிலைமைகளில் வேலை செய்வது அசாத்தியமாக இருந்தது.

மனிதர்கள் மீது, உளமார்ந்த அக்கறை யையோ மரியாதையையோ இழக்காமல் அவர் கள் விஷயத்தில் பொறுமையைக் கடைப்



படிப்பகம்

www.padippakam.com

பிடிக்க வாழ்க்கைப் போக்கில் நான் கற்றிருந் தது பெருத்த சண்டை சச்சரவுகளிலிருந்து என் னைத் தடுத்து வைத்திருந்தது. கலப்பற்ற உண்மை என்னும் அறிய முடியாத கட வுளுக்கு முன் எல்லா மனிதர்களும் ஏதேனும் ஓர் அளவில் பாவிகள் என்பதையும் நன் னெறியாளர்கள் என்று சொல்லிக் கொள்ப வர்கள் மனிதனுக்கு முன் சிறப்பாகப் பாவம் செய்கிறார்கள் என்பதையும் நான் அப்போதே கண்டேன். நன்னெறியாளர்கள் தீமையும் நன் மையும் புணர்ந்ததால் தோன்றிய கலப்புப் பிறவிகள். இந்தப் புணர்ச்சி நன்மையைத் தீமையோ, பின்னதை முன்னதோ செய்யும் பலாத்காரம் அல்ல, மாறாக அவற்றின் முறை யான திருமணத்தின் விளைவு ஆகும். முரண் நகைத் தன்மை கொண்ட இன்றியமையாமை இந்தத் திருமணத்தில் பாதிரியின் பாத்திரத் தை வகிக்கிறது. திருமணமோ, புனிதச் சடங்கு ஆகும். அதன்படி இரண்டு ஒளியுள்ள எதிர் நிலைகள் இணைந்து சோர்வூட்டும் மட்டப் பிற வியை அநேகமாக எப்போதும் பெறுகின்றன. சிறுவனுக்கு ஐஸ்கிரீம் பிடிப்பது போல அந் தக் காலத்தில் முரணுரைகள் எனக்குப் பிடித் திருந்தன. அவற்றின் கூர்மை நல்ல மது போல எனக்குக் கிளர்ச்சி ஊட்டியது. சொற் களின் முரண்பாடு உண்மை நிகழ்ச்சிகளின் நெருடான, புண்படுத்தும் முரண்பாடுகளை மென்மை ஆக்கியது.

"நான் போய் விட்டால் நன்றாய் இருக்கும்



படிப்பகம்

என்று எனக்குத் தோன்றுகிறது,'' என்று மனைவியிடம் சொன்னேன்.

சற்று சிந்தனை செய்த பின் அவள் இசைந்தாள்:

''ஆம், நீங்கள் சொல்வது உண்மை! இந்த வாழ்க்கை உங்களுக்கு ஏற்றது அல்ல என்பது எனக்குப் புரிகிறது!''

நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் இறுகத் தழுவிக்கொண்டு சிறிது நேரம் மௌனமாகக் கொஞ்சம் வருத்தத்தில் ஆழ்ந்திருந்தோம். பிறகு நான் நகரத்திலிருந்து வெளியேறினேன். அவளும் மன்றத்தில் நடிக்கத் தொடங்கி நகரை விட்டுப் போய் விட்டாள். இவ்வாறு முடிவுற்றது என் முதல் காதலின் கதை—முடிவு மோசமாய் இருந்தாலும் நல்ல கதை.

அண்மையில் என் முதல் காதலி காலமானாள்.

அவளைப் பாராட்டிக் கூறுகிறேன்: அவள் உண்மையான பெண்மணியாக விளங்கினாள்! இருந்ததை வைத்துக் கொண்டு வாழ அவளால் முடிந்தது, ஆனால் ஒவ்வொரு நாளும் அவளுக்கு விழாவின் தலைக்கு நாளாக இருந்தது. மறுநாள் அசாதாரணமான புதிய பூக்கள் உலகில் மலரும், அபூர்வ சுவாரசியமுள்ள ஆட்கள் எங்கிருந்தோ வருவார்கள், வியப்பூட்டும் நிகழ்ச்சிகள் நடந்தேறும் என்று அவள் ஓயாமல் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

வாழ்க்கையின் இன்பமற்ற கட்டங்களைக் கேலியுடனும் ஓரளவு இகழ்ச்சியுடனும் நோக்

கிய அவள் கொசுக்களை விரட்டுவது போல அவற்றை உதறித் தள்ளி விடுபட்டு வந்தாள். மகிழ்ச்சியும் வியப்பும் அடைவதற்கு ஆயத்த மான நிலையில் அவள் உள்ளம் எப்போதும் துடிதுடித்துக் கொண்டிருந்தது. ஆனால் இப் போது இது கல்லூரி மாணவியின் பேதையும் நிறைந்த பரவசம் அல்ல, வாழ்க்கையின் ஒளி யும் நிழலும் கலந்த பரபரப்பையும் மனிதர் களின் இன்ப-துன்பச் சிடுக்குகள் விழுந்த உறவு களையும் கதிரொளியில் புழுதித் துகள்கள் போன்று மினுமினுக்கும் சிறு நிகழ்ச்சிகளின் பெருக்கையும் விரும்பி ரசிக்கும் நபரின் உள நலம் வாய்ந்த மகிழ்ச்சி இது.

அன்பர்களை அவள் நேசித்தாள் என்று சொல்ல மாட்டேன். ஆனால் அவர்களை ஆராய்ந்து பார்ப்பது அவளுக்குப் பிடித்திருந் தது. தம்பதியருக்கும் காதலர்களுக்கும் இடை யே செயற்கையாகப் பொறாமையைத் தூண்டி விட்டும் அன்புப் பிணைப்பை உறுதிப்படுத்தி யும் அன்றாட நிகழ்ச்சிப் போக்கைச் சில வே ளைகளில் அவள் விரைவுபடுத்தினாள், அல்லது சிக்கலாக்கினாள். இந்த ஆபத்தான விளை யாட்டில் அவள் நிரம்பப் பற்று கொண்டிருந் தாள்.

"'காதலும் பசியும் உலகை ஆள்கின்றன', தத்துவமோ, உலகின் துர்ப்பாக்கியம்,'' என் றாள் அவள். "மக்கள் காதலுக்காக வாழ் கிறார்கள், வாழ்க்கையின் யாவற்றிலும் முதன் மை வாய்ந்த செயல் இதுவே.''

எங்களுக்குத் தெரிந்தவர்களில் ஒருவன்

www.padippakam.com

அரசாங்க வங்கி அலுவலன். நெடிய, மெலிந்த மேனியினனான அவன் நாரை போன்று மெதுவாகவும் மிடுக்குடனும் நடந்தான், கச்சி தமாக உடை அணிந்தான், அக்கறையுடன் தன்னைப் பார்வையிட்டு, தன் கோட்டின் மேலிருந்து தன்னைத் தவிர வேறு எவர் கண்ணுக்கும் தெரியாத துகள்களை வறண்ட மஞ்சள் விரல்களால் சுண்டிப் போக்கினான். சொந்தச் சிந்தனையும் சுவையுள்ள சொற்களும் அவனுக்குப் பகை. அவனுடைய உணர்ச்சி அற்ற, துல்லியமான நாக்கை அவை அருவருத்தன போல இருந்தது. அவன் ஆழ்ந்த தோரணையில் அறிவுறுத்தும் பாங்கில் பேசினான். எப்போதும் விவாதத்துக்கு இடமில்லாத கருத்தையே வெளியிட்டான். அந்த மாதிரி எதையேனும் சொல்வதற்கு முன்னால், அடர்த்தி அற்ற செம்பட்டை மீசையைச் சில் லிட்ட விரல்களால் சரிப்படுத்திக் கொண்டான்.

“மூலப் பொருள்களைப் பதனிடும் தொழில் துறையில் வேதி இயல் நாளடைவில் மேலும் மேலும் அதிக முக்கியத்துவம் பெறும். மாதர்கள் சபல சித்தம் உள்ளவர்கள் என்று முற்றிலும் நியாயமாகக் கூறப்பட்டிருக்கிறது. மனைவிக்கும் வைப்பாட்டிக்கும் இடையே சட்ட நோக்கில்தான் வேறுபாடு உண்டு, உடலியல் வேறுபாடு கிடையாது.”

நான் மனைவியிடம் ஆழ்ந்த முறையில் கேட்டேன்:

“எல்லாச் சான்றதிகாரிகளும் சிறகுடைய



படிப்பகம்

www.padippakam.com

வர்கள் என்று வலியுறுத்தும் நிலையில் நீ இருக்கிறாயா?''

அவள் குற்றம் செய்தவள் போன்ற தோற்றத்துடன் துயரக் குரலில் விடையளித்தாள்:

''இல்லவே இல்லை, நான் இந்த நிலையில் இல்லைதான், ஆனால் ஒன்றை மட்டும் வலியுறுத்துகிறேன்: யானைகளுக்கு அரை வேக் காட்டு முட்டைகளைத் தீனியாகக் கொடுப்பது நகைப்புக்கு இடமாகும்!''

எங்கள் நண்பன் இந்த மாதிரி உரையாடலை ஓரிரண்டு நிமிடங்கள் கேட்டுக் கொண்டிருந்து விட்டு, கூர்ந்த அறிவு துலங்க வாய் மலர்ந்தான்:

''இதை எல்லாம் நீங்கள் முற்றிலும் ஆழ்ந்த தன்மை இன்றிப் பேசுகிறீர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது.''

ஒரு தடவை, மேசையின் காலில் முழங்காலால் வலிக்கும் படி இடித்துக்கொண்டவன், முகத்தைச் சுளித்து, முழு உறுதியுடன் கூறினான்:

''திட்பம் சடப் பொருளின் விவாதத்துக்கு இடமற்ற பண்பு...''

சில சந்தர்ப்பங்களில், அவனை விடை கொடுத்து அனுப்பிவிட்டு, என் மனைவி என்னுடைய மடியில் சாய்ந்து கொண்டு, இன்பக் கிளர்ச்சியும் உற்சாகமும் பொங்க, குதூகலமாக மொழிந்தாள்:

''நீயே பாரேன், எவ்வளவு முழுமையான, எவ்வளவு முற்றான அசடன் இவன் என்று. எல்லாவற்றிலும் அசடன், நடை, சைகைகள்



படிப்பகம்

ஆகியவற்றில் கூட — எல்லாம் அசட்டுத்தன மானவை. எடுத்துக்காட்டான மாதிரி என்ற வகையில் இவனை எனக்குப் பிடித்திருக் கிறது. என் கன்னங்களைத் தடவிக்கொடு!''

முகத் தோலை விரல்களால் பட்டும் படாம லும் வருடியவாறு, அவளுடைய இனிய விழி களின் அடியில் சற்றே தென்பட்ட சுருக்கங்களை நான் சீராக்கியதை அவள் விரும்பினாள். கண்களைச் சுருக்கிக்கொண்டு சுருண்டு அவள் பூனைக்குட்டி போல முறுமுறுத்தாள்:

''மனிதர்கள்தாம் எவ்வளவு வியப்பூட்டும் படிச் சுவாரசியமானவர்கள்! ஒருவன் எல் லாருக்கும் சுவையற்றவனாக இருக்கும் போது கூட, எனக்கு உற்சாகமூட்டுகிறான். ஒரு டப்பி யைத் திறந்து பார்ப்பது போல அவனுக்குள் பார்வை செலுத்த எனக்கு ஆசை உண்டா கிறது. ஒருவர் கவனத்தையும் கவராத, ஒரு போதும் காட்டப்படாத ஒரு பொருள் அதில் இருக்கலாம், நான் ஒருத்தி மட்டுமே, நானே முதன் முதலில், அதைப் பார்க்கலாமே.''

''ஒருவர் கவனத்தையும் கவராத'' பொரு ளுக்காக அவள் நடத்திய தேட்டங்களில் இறுக் கம் இல்லை. தனக்குப் பழக்கம் இல்லாத அறைக்கு முதல் தடவை வந்த குழந்தை யினது போன்ற மன நிறைவுடனும் ஆவ லுடனும் அவள் தேடினாள். நம்பிக்கைக்கு இடமற்ற வகையில் சலிப்பான மனிதனின் மங்கிய விழிகளில் தீவிரமான சிந்தனையைக் காட்டும் பளிச்சிடும் ஒளிர்வைச் சில சந்தர்ப் பங்களில் அவள் மெய்யாகவே தோற்றுவித்

தாள், ஆனால், அடிக்கடி அவள் தூண்டி விட்டது, அவளைப் பெண்டாள வேண்டும் என்ற பிடிவாதமான விருப்பமே.

அவள் தன் மேனியை விரும்பினாள். கண்ணாடியின் முன் அம்மணமாக நின்று வியந்தாள்:

"எவ்வளவு இனிமையாக உருவாகி இருக்கிறாள்—பெண்! அவளிடம் எல்லாம் எப்படிப் பொருத்தமாக இசைந்திருக்கின்றன!"

அவள் சொன்னாள்:

"நன்றாக உடை அணிந்திருக்கும் போது அதிக உடல் நலமும் வலிமையும் அறிவும் பெற்று விட்டது போல எனக்குத் தோன்றுகிறது!"

இது உண்மை தான். பாந்தமாக உடை அணிந்திருக்கையில் அவள் அதிகக் குதூகலம் அடைந்தாள், அதிக அறிவுக்கூர்மை காட்டினாள், அவளுடைய விழிகள் வெற்றிப் பெருமிதத்துடன் சுடர்ந்தன. சீட்டித் துணியைக் கொண்டு தனக்கு அழகாக உடைகள் தைத்துக்கொள்ள அவளுக்கு முடிந்தது. பட்டையும் வெல்வெட்டையும் போல அவற்றை அணிந்தாள். எப்போதும் மிக எளிமையாக உடுத்தாலும் சிறப்பாக உடை அணிந்தவள் போல எனக்குக் காணப்பட்டாள். அவளுடைய ஆடை அணிகளை மாதர்கள் வியந்து பாராட்டினார்கள். அவர்களுடைய பாராட்டுரைகள் எப்போதும் உண்மையாக இல்லாவிடினும் எப்போதுமே மிக உரக்க ஒலித்தன. அவளிடம் அவர்கள் பொறாமை கொண்டார்கள். எனக்கு

www.padippakam.com

நினைவு இருக்கிறது, அவர்களில் ஒருத்தி வருத்தத்துடன் கூறினாள்:

“என்னுடைய உடை உங்களுடையதைக் காட்டிலும் மும்மடங்கு அதிக விலை உள்ளது, ஆனால் பத்து மடங்கு மோசமாய் இருக்கிறது. உங்களைப் பார்த்தால் எனக்கு நெஞ்சு வலிக்கிறது, மனத்தாங்கல் உண்டாகிறது!”

மாதர்களுக்கு அவளைக் கண்டாலே கரித்தது. எங்களைப் பற்றி அவர்கள் வம்புக் கதைகள் கட்டினார்கள் என்று சொல்லவே வேண்டியதில்லை. எங்களுக்குப் பழக்கமான ஒரு துணை மருத்துவச்சி நிரம்ப அழகியவள், இன்னும் அதிகமாக, அறிவற்றவள். இவள் பெருந்தன்மையுடன் என்னை எச்சரித்தாள்:

“இந்தப் பெண்பிள்ளை உங்கள் இரத்தத்தை எல்லாம் உறிஞ்சிக் குடித்து விடுவாள்!”

என் முதல் மனைவியுடன் வாழ்ந்து பல விஷயங்களை நான் கற்று கொண்டேன். ஆயினும் எனக்கும் அவளுக்கும் இடையே இருந்த சரிப்படுத்த முடியாத வேறுபாட்டின் தீராமை என்னை நெருப்பாய்ச் சுட்டது.

வாழ்க்கையை நான் ஆழ்ந்த பிரச்சினையாகக் கருதினேன், நான் அளவு கடந்து நிறையக் கண்டும் சிந்தித்தும் இருந்தேன். இடையறாத கலவரம் என் உள்ளத்தில் நிறைந்திருந்தது. சுருதி சேராத குழுப் பாட்டுப் போல என் மனத்தில் கூச்சலிட்டுக் கொண்டிருந்தன கேள்விகள். இந்த இனிய நங்கை



படிப்பகம்

www.padippakam.com

யின் உணர்வுக்கு அறவே புறம்பானவை அவை.

தோற்றப் பொலிவு உள்ளவனும் ஒற்றைக் கண்ணனுமான ஒரு யூதனை, காய்கறிக் காரனிடம் முள்ளங்கி வேர்க்கொத்தைத் திருடியதாகக் குற்றம் சாட்டி, ஒரு நாள் சந்தையில் போலீஸ்காரன் அடித்து நொறுக்கி விட்டான். நான் அந்தக் கிழவனை வீதியில் சந்தித்தேன். மேல் காலெல்லாம் ஒரே புழுதியாக, ஓவியக் காட்சி போன்ற ஒருவகைப் பெருமிதம் துலங்க, அவன் மெதுவாக நடந்தான். அவனுடைய பெரிய கரு விழி வெப்பம் நிறைந்த வெறும் வானத்தைக் கடுப்புடன் நோக்கியது. உடைந்த வாயிலிருந்து மெல்லிய தாரைகளாக நீண்ட வெண் தாடி மீது வழிந்த இரத்தம் வெள்ளி மயிர்களுக்குப் பளிச்சிடும் கருஞ் சிவப்பு வண்ணம் பூசியது.

முப்பது ஆண்டுகளுக்கு முன் நடந்தது இது. ஆனால், ஒலியற்ற கண்டனம் துலங்க வானை நோக்கிய அந்தப் பார்வையை இப் போது இதோ என் கண் முன் காண்கிறேன். கிழவனுடைய முகத்தில் புருவங்களின் வெள்ளி ஊசிகள் நடுங்குவதைக் காண்கிறேன். மனிதனுக்கு இழைக்கப்பட்ட அவமானங்கள் நினைவை விட்டு அகல மறுக்கின்றன — அவை ஒரு போதும் மறக்க மாட்டா!

துயரத்தாலும் சீற்றத்தாலும் சிதைந்து அறவே சாம்பிய உள்ளத்துடன் நான் வீடு திரும்பினேன். இத்தகைய அநுபவங்கள் என்னை வாழ்க்கையிலிருந்து வெளியே நெட்டித்



படிப்பகம்

www.padippakam.com

தள்ளின. நான் அதில் வேற்று மனிதன் ஆகி விட்டேன். உலகத்தில் உள்ள எல்லா அழுக்கும் அசட்டுத்தனமும் பயங்கரமும் நெஞ்சத்தை அவமதிக்க வல்ல யாவும் எவனுக்கு வேண்டுமென்றே—அவனைச் சித்திரவதை செய்வதற்காக—காட்டப்படுகின்றனவோ அத்தகைய வேற்று மனிதன் ஆகிவிட்டேன் நான். எனக்கு மிகவும் நெருங்கியவள் என்னிடமிருந்து எத்தகைய தொலைவில் இருக்கிறாள் என்பதை அந்த நேரங்களில், அந்த நாள்களில் தான் நான் சிறப்பான தெளிவுடன் கண்டேன்.

அடிபட்ட யூதனைப் பற்றி நான் அவளிடம் சொன்ன போது அவள் மிகுந்த வியப்பு அடைந்தாள்:

"ஆக—இதனாலா நீ மனத்தை இப்படி அலட்டிக் கொள்கிறாய்? ஐயையோ, உனக்குக் கடுமையான நரம்புத் தளர்ச்சி!"

பிறகு கேட்டாள்:

"அவன் அழகான கிழவன் என்கிறாயே? அவன் ஒற்றைக் கண்ணன் என்றால் எப்படி அழகன் ஆவானாம்?"

எல்லா வகையான துன்பமும் அவளுக்குப் பகையாக இருந்தது. துன்ப நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்களைக் கேட்க அவளுக்குப் பிடிக்கவில்லை. மெல்லுணர்ச்சிக் கவிதைகள் அவளுடைய நெஞ்சத்தை அநேகமாகத் தொடவில்லை. மகிழ்பொங்கிய சிறு இதயத்தில் அநுதாபம் அரிதாகவே கிளர்ந்தது. அவளுக்குப் பிடித்த கவிஞர்கள் பெரான்ழேயும் சிரித்துக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டே வதைப்பட்ட மனிதரான ஹேய்னே யும் தாம்.

மாய வித்தைக்காரனுடைய எல்லையற்ற திறமையில் குழந்தைக்கு உள்ள நம்பிக்கை போன்ற ஒன்று வாழ்க்கையின் பால் அவள் கடைப்பிடித்ததில் இருந்தது: காட்டப்பட்ட எல்லா வித்தைகளும் சுவையானவை, ஆனால் யாவற்றிலும் சுவையானது இனிமேல் தான் வரப்போகிறது. அடுத்த மணியில் அது காட்டப் படும்–அல்லது ஒருவேளை நாளைக்கு, ஆனால் கட்டாயம் காட்டப்படும்!

தனது சாவின் போதும் இந்தக் கடைசி யான, முற்றிலும் புரியாத, வியப்பூட்டும் இலா கவம் வாய்ந்த வித்தையைக் காணலாம் என அவள் முடிவு வரை நம்பிக்கொண்டிருந்தாள் என்று நினைக்கிறேன்.

1923

படிப்பகம்

www.padippakam.com

## வாசக நண்பர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தையும் அடுத்து வரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளையும் **ராதுகா பதிப்பகம்** மகிழ்வுடன் வரவேற்கிறது. கடிதங்களைத் தயை செய்து Raduga Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, 119859, USSR என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்